## தலைப்பு 111 - சுகாதார அமைச்சு

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

சுகாதார அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சுகாதார அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூலை 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 செப்தெம்பர் 27 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுகாதார அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) இந்நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்திக்கான தொடர்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 1.6.3.1(ஆ) | 2018 ஆம் ஆண்டின் போது நிதியற்ற சொத்துக்களின் கிரயம் ரூபா 46,940.73 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. எனினும், அத்தவறை சரி செய்வதற்காக 2019 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான ஆரம்ப மீதிகளுக்கு செம்மையாக்கப்பட்டிருக்க வில்லை. அதில் ரூபா 7,102.99 மில்லியனை ஆரம்ப மீதிக்கு செம்மையாக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் போது காணிகளைப் பெற்றுக் கொள்ளலாக காட்டப்பட்டிருந்தது. | இத்தவறைச் சரி செய்து அடுத்து வரும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். |
| 1.6.3.1(இ) | 2018 ஆம் ஆண்டின் போது மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக் கொள்ளல் ரூபா 14,793.13 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மூலதனச் சொத்துக்கள் அதற்குச் சமமான பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| 1.6.3.1(ஊ) | திறைசேரி கணக்கு கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் கிரயம் ரூபா 6,501,942 | - மேற்படி - |

மில்லியன் தொகையானது நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் திறைசேரி கணக்கு கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட வாகனங்கள், மனைப் பொருட்கள், அலுவலக உபகரணங்கள், இயந்திரங்களும் இயந்திர உபகரணங்களும் என்பவற்றின் கிரயம் ரூபா 10,505.275 மில்லியனாக இருந்த போதிலும் அது ரூபா 19,974.493 மில்லியனாக நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியற்ற சொத்துக்கள் ரூபா 2,967.276 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்களானது சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்கியிருக்காமை

அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 06 ஆம் இலக்க வழிகாட்டியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்தும் அத்தேவைப்பாடுகள் மீறப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 06 ஆம் இலக்க வழிகாட்டியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து அறிக்கையிடும் அடிப்படையானது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்படவில்லை. | அடுத்துவரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து அறிக்கையிடும் அடிப்படையினை வெளிப்படுத்தி சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கை யிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அடுத்து வரும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து அறிக்கையிடும் அடிப்படையினை வெளிப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும். |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களைக் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) திறைசேரியினால் பேணப்பட்டு வருகின்ற எஸ்.ஏ.80 நிதியற்ற சொத்துக்கள் கணக்கின் மாதாந்த பொழிப்புக்கு மற்றும் எஸ்ஏ 82 திரண்ட நிதியற்ற சொத்துக்கள் கணக்கு அறிக்கைக்கு இணங்க 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியற்ற சொத்துக்களின் கிரயம் ரூபா 172,439.71 மில்லியனாக இருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறான நிதிநிலை தொடர்பான கூற்றுக்கு இணங்க அப்பெறுமதி ரூபா 192,229.16 மில்லியனாகும். அதற்கிணங்க ரூபா 19,789.44 மில்லியன் வித்தியாசத்திற்கான காரணத்தை தேடிப்பார்த்து தேவையான செம்மையாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | திறைசேரி அச்சுப் பிரதிகளில் காட்டப்படுகின்ற பெறுமதிக்கும் ஏடுகளின் படியான பெறுமதிக்கு மிடையே காணப்படுகின்ற வித்தியாசங்களை இணக்கம் செய்து சரியான நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். இப்பிழைகளைச் சரிசெய்து அடுத்து வரும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது நிதியற்ற சொத்துக்களைப் பெற்றுக் கொள்ளுதலுக்கும் கைதவிர்ப்புச் செய்வதற்கு மிடையேயான தேறிய வித்தியாசம் திறைசேரியினால் பேணப்படுகின்ற எஸ்ஏ 80 நிதியற்ற சொத்துக்கள் கணக்கின் மாதாந்த பொழிப்பு மற்றும் எஸ்ஏ 81 நிதியற்ற சொத்துக்கள் கணக்கின் மாதாந்த அறிக்கைக்கு இணங்க ரூபா | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. | - மேற்படி - |

4,440.484 மில்லியன் தொகையும், எஸ்ஏ 82 திரண்ட நிதியற்ற சொத்துக்கள் கணக்கின் அறிக்கைக்கு இணங்க ரூபா 2,616.592 மில்லியன் தொகையுமான மறைப் பெறுமதியும் ஒன்றித்த பரீட்சை மீதிக்கு இணங்க ரூபா 7,501.309 மில்லியன் தொகையுமாக இருந்த போதிலும் எஸ்ஏ 6 நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றுக்கு இணங்க அது ரூபா 24,254.146 மில்லியனாகும். எனினும் இந்த வித்தியாசங்களுக்கான காரணத்தை தேடிப் பார்த்து தேவையான செம்மையாக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 கட்டுநிதி மீதி

கட்டுநிதி மீதியை கணக்கீடு செய்வதில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) கட்டுநிதிக் கணக்கின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறானா தீர்த்து வைக்கப்படாத கட்டுநிதி மீதி ரூபா 402.82 மில்லியனாகும். கணக்காய்வு செய்த திகதியான 2021 ஏப்ரல் 22 ஆந் திகதி வரை தீர்த்து வைக்கப்படாத கட்டுநிதி மீதி ரூபா 5.05 மில்லியனாகும். அந்த மீதியினுள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குரிய 1997 ஆம் ஆண்டிலிருந்து தீர்த்து வைக்கப்படாத ரூபா 362,702 மீதியும் காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. | கட்டுநிதி மீதியை நிர்ணயிக்கப்பட்ட வாறு தீர்த்து வைப்பதற்கும் மாதாந்த இணக்கத்தை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ஒன்றித்த பரீட்சை மீதியின் பிரகாரம் கட்டுநிதி பெறுவனவுகளின் மொத்த தொகை ரூபா 3,406.359 மில்லியனாகும். அதற்கு 7002 இன் கீழ் திறைசேரியிடமிருந்து ரூபா 170,132.268 மில்லியன் கட்டுநிதி கிடைத்திருந்தது. ஒன்றித்த விபரமான பரீட்சை மீதியின் பிரகாரம் கட்டுநிதிக் கொடுப்பனவு ரூபா 173,370.382 மில்லியனாகும். அதற்கிணங்க 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி மீதி ரூபா 168.245 மில்லியனாக இருத்தல் வேண்டும். எனினும், திறைசேரியினால் பேணப்படுகின்ற எஸ்ஏ 70 வருடாந்த கட்டுநிதிக் கணக்கின் பொழிப்புக்கு இணங்க கட்டுநிதி மீதி ரூபா 415.486 மில்லியனாக இருந்ததனால் வித்தியாசம் ரூபா 247.241 மில்லியனாகும். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. | கட்டுநிதி பெறுவனவுகள், கொடுப்பனவுகள் மற்றும் மீதிகளை சரியாக இனங்காண்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) ஏசீஏ 6 நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ரூபா 192,229.156 மில்லியன் மொத்த தொகையான சொத்துக்களுக்காகவும் ரூபா 377,699 தொகையான சொத்துக்களின் விற்பனைக்காகவும் ரூபா 40,933.397 மில்லியன் தொகையான சொத்துக்களை மாற்றுவதன் மூலம் கைதவிர்ப்புச் செய்த சொத்துக்களுக்காகவும் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. | பட்டோலைகள் தயாரிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கப்பட வேண்டிய பட்டோலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத தனால் அப்பெறுமதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | | |
| (ஆ) | கணக்காய்வு நடவடிக்கைகளுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அனுப்பி வைக்கப்பட்ட தகவல்களைக் கோரும் 12 கடிதங்களுக்காக 2021 யூலை 07 ஆந் திகதி வரை தகவல்களை வழங்கவோ அல்லது முழுமையான தகவல்களை வழங்குவதற்கோ முடியாதிருந்ததுடன் சில தகவல்களைக் கோரி 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. இத்தகவல்கள் அமைச்சின் உள்ளகப் பிரிவு, வைத்தியசாலைகள் மற்றும் பல நிறுவனங்களிடமிருந்து கோரப்பட வேண்டியுள்ளதுடன் அது சிக்கலான நடைமுறையாகும். காணப்படுகின்ற கொவிட் 19 இன்னல் நிலைமையின் காரணமாக சுகாதார அமைச்சு, வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் 02/2021(1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணியினர்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவானவர்களை அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. அதன் காரணமாக தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் போது தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 42(அ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி வேண்டிக் கொண்ட தகவல்கள் மற்றும் ஏனைய சான்றுகளை வழங்காத அனைத்து நபர்களும் தவறு செய்ததாகக் கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.5 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுப்படுத்துதல் செய்யப்பட வேண்டியிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அமைச்சின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக விளைதிறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் விளைதிறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையை விளைதிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்து அதன் ஒரு பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும் அவ்வாறாறன மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான வெளிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். அமைச்சினால் அவதானிக்கப்படுகின்ற மற்றும் கணக்காய்வு ஐயவினாவின் மூலம் சுட்டிக் காட்டப்படுகின்ற தவறுகளையும் பலவீனங்களையும் சரி செய்து அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்குள் சிறந்த நிதிக் கட்டுப்பாட்டினை ஏற்படுத்துவதற்காக உள்ளக சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல் கடிதங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அந்த உள்ளக நடைமுறையின் விளைதிறனை மேம்படுத்துவதற்காக பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பதவிநிலை உத்தியோகத்தர் கூட்டங்களின் போதும் ஒவ்வொரு விடயம் தொடர்பாக இடம்பெறுகின்ற கூட்டங்களின் போதும் அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனத் தலைவர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தேவைப்படுகின்றவாறு நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்குதல் இடம் பெறுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுப்படுத்த வேண்டியிருந்த போதிலும் 2021 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை பதில் கிடைக்காத மொத்த கணக்காய்வு ஐய வினாக்களின் எண்ணிக்கை 18 ஆக இருந்ததுடன் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் பதில் அனுப்பி வைக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்களின் எண்ணிக்கை 11 ஆகும். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. எனக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள 120 கணக்காய்வு ஐய வினாக்களில் இன்று வரை 20 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2021 ஏப்ரல் 09 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் தொடர்பான தெரிவுக் குழுவின் பணிப்புரையின் பிரகாரம் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 03 மாதங்களுக்குள் பதில் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது திறைசேரியிடமிருந்து ரூபா 193,832.60 மில்லியன் தொகையான கட்டுநிதி வேண்டப்பட்டிருந்த போதிலும் திறைசேரியினால் ரூபா 170,132.27 மில்லியன் கட்டுநிதி மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததனால் ரூபா 23,700.33 மில்லியன் தொகையான கட்டுநிதி வழங்கப்படாமையால் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டினை திட்டமிட்டவாறு பயன்படுத்த முடியாதிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | சரியானதும் நடைமுறைச் சாத்தியமானதுமான திட்டத்துக்கு இணங்க கட்டுநிதி வேண்டப்படுதல் வேண்டும். |

## 2.2 செலவு முகாமைத்துவம்

நிதிப்பிரமாணம் 50 இல் தரப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சரியான மற்றும் நடைமுறைச் சாத்தியமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது கீழே தரப்பட்டுள்ள அவதானிப்புக்களுக்கு இணங்க உறுதிப்படுத்தப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டிலிருந்து 10 மூலதன செலவு விடயங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 253 மில்லியன் நிதி ஏற்பாடு முழுவதும் நிதிப் பிரமாணம் 66 மற்றும் 69 இன் மூலம் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | நிதிப்பிரமாணம் 50 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சரியான மற்றும் நடைமுறைச் சாத்தியமான மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினுள் உள்ளடக்கப்படாத புதிய 2 மூலதன செலவு விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 87 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 67.977 மில்லியன் அல்லது 78 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் 12 மூலதன செலவு விடயங்களை உள்ளடக்கி 13 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 61.652 மில்லியன் தொடக்க நிதி ஏற்பாட்டில் ரூபா 26.673மில்லியன் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டதன் மற்றும் ரூபா 10.337 மில்லியன் ஏனைய செலவு விடயங்களிலிருந்து மாற்றப்பட்டதன் பின்னர் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மிகுதியான ரூபா 45.316 மில்லியன் தொகையான மொத்த தேறிய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | ஒரு மீண்டுவரும் செலவு விடயம் மற்றும் 02 மூலதன செலவு விடயங்களுக்கு நிதிப்பிரமாணம் 66 மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 47.010 மில்லியன் தொகையான மேலதிக நிதி ஏற்பாடு முழுவதும் மற்றும் தொடக்க மதிப்பீட்டில் சில பகுதியும் சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடப்பாடுகள் ரூபா 489.05 மில்லியன் தொகையானது அத்திகதியில் உள்ளவாறான பொறுப்புக்களாகக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 94(i) இல் தரப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக நிதி ஏற்பாட்டினை மிகைத்து ரூபா 3,760.19 மில்லியன் தொகையான பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | - மேற்படி - | நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் வேறு வகையில் ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களைத் தவிர்த்து வருடாந்த மதிப்பீடுகளில் அதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | | | ஏற்பாடுகள் இல்லையாயின் வேலை, சேவை அல்லது வழங்கலுக்காக எதுவித செலவோ அல்லது கடப்பாடுகளோ மேற்கொள்ளப் படாதிருத்தல் வேண்டும். |
| (இ) | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாத மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட செலவு விடயங்கள் அல்லாத 25 செலவு விடயங்களுக்காக ரூபா 182.36 மில்லியன் பொறுப்புக்கள் காட்டப்பட்டிருந்தன. | - மேற்படி - | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த பொறுப்புக்கள் ரூபா 4,036.79 மில்லியனாக இருந்த போதிலும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றுக்கு இணங்க அத்திகதியில் உள்ளவாறான மொத்தப் பொறுப்புக்கள் ரூபா 6,217.47 மில்லியனாகும். | - மேற்படி - | நிதிக் கூற்றுக்களையும் திறைசேரி கணக்கு கூற்றுக்களையும் ஒப்பிட்டு கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் வித்தியாசத்தை இனங்கண்டு தேவையான செம்மையாக்கல் செய்தல் வேண்டும். |

**2.4 முற்பணம் வழங்குதலும் தீர்த்து வைத்தலும்**

செயல்நிமித்த உபகட்டுநிதி மற்றும் முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்த்து வைத்தல் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றிறக்கையினால் திருத்தப்பட்ட நிதிப் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். பல்வேறு செயற்பாடுகளுக்காக | செயல்நிமித்த உப கட்டுநிதியானது உரிய செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | பிரமாணம் 371(5) இன் பிரகாரம் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்து 10 நாட்களுக்குள் பெற்றுக் கொள்ளப்பட்ட செயல் நிமித்த உபகட்டு நிதிகள் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் 520 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 16.763 மில்லியன் மொத்த தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதிகள் உரிய செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு 01 மாதத்திலிருந்து 11 மாதங்கள் வரையான காலவீச்சில் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | வழங்கப்பட்ட செயல் நிமித்த உபகட்டுநிதியானது சுற்றறிக்கையின் பிரகாரம் 10 நாட்களுக்குள் தீர்த்து வைக்கப்பட வேண்டுமென ஒவ்வொரு பிரிவிற்கும் அடிக்கடி எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. 10 நாட்களை மிகைத்திருந்தும் தீர்த்து வைக்க முடியாமைக்கான காரணமாக உரிய பிரிவிற்குள் காணப்படுகின்ற வேலைப்பழு, நிகழ்ச்சித் திட்டங்கள், செயலமர்வுகள் என்பனவற்றை ஒன்றுக்கொன்று இணைந்ததாக நடாத்துதல், பதவியணியினர்கள் போதியளவில் இல்லாமை, உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு குறிப்பிடத்தக்க காலம் எடுத்தல், பல நிகழ்ச்சித் திட்டங்கள், செயலமர்வுகள் கொழும்பிற்கு வெளியேயுள்ள பிரதேசங்களில் நடைபெறுதல் ஆகிய விடயங்கள் அவர்களினால் வாய்மொழி மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இதற்குப் பின்னர் அவ் விடயங்களை எழுத்து மூலம் பெற்றுக் கொள்வதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உடன் தீர்த்து வைக்கப்படுதல் வேண்டும். தாமதித்தமைக்காக தண்டப்பணம் அறவிடும் நடைமுறை அறிமுகப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) | 16 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 534,390 தொகையான செயல் நிமித்த உபகட்டுநிதி உரிய செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தாது 04 நாட்களிலிருந்து 107 நாட்கள் வரையான காலம் கையில் வைத்திருக்கப்பட்டு பின்னர் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். ஏதாவது செயற்பாட்டிற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட செயல் நிமித்த உப கட்டு நிதியானது நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவதற்கு எடுத்துக் கொள்ளப்பட வில்லையாயின் விரைவாக | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | மீள ஒப்படைக்க வேண்டுமெனவும் கட்டு நிதியைப் பெற்றுக் கொள்ளும் போது செயற்பாடுகளை உறுதியாக இனங்கண்டு கட்டுநிதியைப் பெற்றுக் கொள்ளுமாறும் ஒவ்வொரு பிரிவிற்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 130 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த செயல் நிமித்த உப கட்டுநிதி ரூபா 4.781 மில்லியனில் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர் மிகுதியாகவிருந்த ரூபா 1.084 மில்லியனை மீளத் தீர்த்து வைப்பதற்கு 10 நாட்களிலிருந்து 199 நாட்கள் வரையான கால தாமதம் ஏற்பட்டுள்ளது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த எரிபொருள் முற்பணங்கள் செயற்பாடு முடிவடைந்த உடன் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் 166 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1.819 மில்லியன் தொகையான எரிபொருள் முற்பணம் 01 மாதத்திற்கும் 10 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலதாமதத்தின் பின்னர் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | 2020 மார்ச் 12 ஆந் திகதி சிறுவர் வைத்தியசாலையின் தனிமைப்படுத்தல் நிலையத்தை மேம்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 3 மில்லியன் தொகையான மூலதன முற்பணங்களில் | - மேற்படி - | இம்முற்பணங்கள் விரைவாக தீர்த்து வைக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா 222,222 தொகை 2021 மார்ச் 23 ஆந் திகதி வரை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) மீளாய்வாண்டில் 06 சந்தர்ப்பங்களின் போது பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்காக மாகாண சுகாதாரப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 2.325 மில்லியன் தொகையானது அந்நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தாது பணத்தை வழங்கியதன் பின்னர் 02 மாதங்களிலிருந்து 04 மாதங்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் முழுப்பணமும் மீளச் செலுத்தி தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். இம் முற்பணங்களானது மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள முற்பணங்கள் என்பதுடன் ஏதாவது செயற்பாட்டிற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதியினை அக்கட்டுநிதி நிர்ணயிக்கப்பட்ட செயற்பாட்டிற்கு பயன் படுத்துவதற்காக எடுத்துக் கொள்ளப்படவில்லை யாயின் விரைவாக மீள ஒப்படைக்க வேண்டுமென அனைத்து தரப்பினர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்தி முடிவடைந்ததன் பின்னர் பணம் விடுவிக்கப்படுதல் வேண்டும். |

**2.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் இடமாற்றம் பெற்றுச் செல்லுகின்ற சந்தர்ப்பங்களிலேயே கடன் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு முயற்சி எடுக்காமையின் காரணமாக இடமாற்றப்படுகின்ற நிறுவனங்களுக்கிடையே கடன் மீதிகளை செம்மையாக்கி கொள்ள முடியாமை, கடனை செலுத்துவது தொடர்பான கடன் அட்டைகள் மற்றும் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். உரிய உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்ற இடம் தொடர்பான முறையான தகவல்களை தேடிக் கண்டுபிடிப்பதிலுள்ள சிக்கல் கடன் மீதி இணக்கம் செய்யப்படாமை போன்ற காரணங்களினால் இக்கடன் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு இதுவரை இயலாதிருந்ததுடன் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர் கள் இடமாற்றம் பெற்று 03 மாதங்களுக்குள் கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடன் கோவைகளை உள்ளடக்கிய தகவல்கள் இல்லாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் அமைச்சிலிருந்து ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள், அமைச்சிற்குரிய வைத்தியசாலைகள், ஏனைய நிறுவனங்கள் மற்றும் மாகாண சபைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற 218 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிடமிருந்து ரூபா 12.83 மில்லியன் அறவிட வேண்டியிருந்ததுடன் அவற்றில் 170 நபர்கள் தொடர்பாக அறவிட வேண்டியிருந்த ரூபா 9.29 மில்லியன் அல்லது 72 சதவீதம் 05 ஆண்டுகளை மிகைத்த கடன் மீதியாகும். | இடமாற்றம் பெற்றுச் சென்ற இடம் தொடர்பாக தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை இன்னும் இடம்பெற்று வருகின்றது. | |
| (ஆ) | சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு சேவையை விட்டுச் செல்லும் கட்டளையை வழங்குதல் தாமதித்தமை, உத்தியோகத்தர்களின் தற்போதைய விலாசத்தை தேடிக் கண்டுபிடிக்க முடியாமை, கடன் கோவைகளைச் சமர்ப்பிப்பதில் தாமதம், 10 ஆண்டுகள் சேவைக் காலத்தை மிகைத்தமையால் பிணையாளர்கள் இல்லாமை, சட்டரீதியான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் அமைச்சில் சேவையில் ஈடுபட்டு இருக்கையில் மரணமடைந்த, ஓய்வுபெற்ற, வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட மற்றும் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். அடுத்துவரும் ஆண்டளவில் நீண்டகால ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளைக் குறைப்பதற்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்குத் தெரியப்படுத்தி மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சேவையை கைவிட்டுச் சென்ற மற்றும் வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் விலாசத்தை தேர்தல்கள் அலுவலகத்திலிருந்து தேடிக் கண்டுபிடித்து கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பொருத்தமான | தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேவையை விட்டுச் சென்றுள்ள 713 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிடமிருந்து ரூபா 17.29 மில்லியன் அறவிட வேண்டியிருந்ததுடன் அவற்றில் 290 நபர்கள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 9.58 மில்லியன் அல்லது 55 சதவீதம் 05 ஆண்டுகளை மிகைத்த கடன் மீதியாகும். | நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் பழைய கடன் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | 2015 மார்ச் 26 ஆந் திகதிய 07/2015 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான விழா முற்பணங்கள் 08 மாதாந்த தவணைப் பணங்களில் மீள அறவிடப்பட வேண்டிய போதிலும் 107 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 213,950 தொகையான விழா முற்பணங்கள் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது முன்கொண்டு வரப்பட்டிருந்தன. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். விழா முற்பணங்கள் 08 தவணைப் பணங்களில் தீர்த்து வைக்கப்பட வேண்டி இருந்தும் உரிய கடன் பணத்தை பெற்றுக் கொண்ட ஆண்டின் 02 மாத அல்லது 03 மாத சம்பளத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் மிகுதிக் கடன் மீதிகளுடன் இடமாற்றம் பெற்றுக் கொண்டதன் பின்னர் உரிய நிறுவனத்தின் மூலம் கடன் மீதிகளைத் தீர்த்து வைக்க வேண்டும். அவ்வாறு செய்யாததன் காரணமாக இந்த விழா முற்பணங்கள் தீர்த்து வைக்கப்படாது காணப்பட்டதுடன் உரிய நிறுவனத்தின் மூலம் கடன் மீதிகளைத் தீர்த்து வைத்துக் கொண்டதன் பின்னர் கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருடாந்தம் வழங்கப்படுகின்ற அரசாங்க நிருவாக சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் இடமாற்றம் பெற்று வருகின்ற ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய மற்றும் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | இந்நிலைமைக்கு காரணமான விடயங்களை இனங்கண்டு உரிய செம்மையாக்கல் களை விரைவாகச் செய்தல் வேண்டும். |

செலுத்த வேண்டிய கடன் மீதிகள் முறையே ரூபா 12.83 மில்லியன் மற்றும் ரூபா 2.16 மில்லியனாகும். ஒரே விடயத்தை உள்ளடக்கி கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகள் உருவாகும் இயலுமை இல்லாதிருந்த போதிலும் இந்த மீதிகள் உருவாகுவதற்கு காரணமான விடயங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

## 2.6 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் கீழுள்ள மூன்று நிறுவனங்களுக்குரிய ரூபா 1.4 மில்லியன் தொகையான 06 மாதங்களை மிகைத்த தேறப்படாத 23 காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் இரண்டு நிறுவனங்களுக்குரிய இரத்துச் செய்யப்பட்ட ரூபா 678,008 தொகையான 4 காசோலைகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 394 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | நிதிப்பிரமாண பணிப்புரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் கீழுள்ள 04 | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| நிறுவனங்களுக்குரிய செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 752,338 தொகை நிர்ணயிக்கப்பட்டவாறு அனுப்பி வைக்கப்படாது பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | | எடுத்தல் வேண்டும். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்த்த பெறுபேறுகள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளரின் எழுத்துமூல வேண்டுதலை அடிப்படையாகக் கொண்டு மிகவும் அவசர கொள்வனவாகக் கருதி மட்டுப்படுத்தப்பட்ட விலை மனுகோரல் முறைமையைப் பின்பற்றி 2020 நவம்பர் 05 ஆந் திகதி பொலன்னறுவை கொவிட் 19 விசேட சிகிச்சை நிலையங்களுக்காக Mine Portable Digital X-Ray இயந்திரம் ரூபா 9.95 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டிற்காக கதிர்வீச்சியல் நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்காததுடன் அரசாங்கத்தின் கதிர்வீச்சியல் தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தினால் இந்த இயந்திரத்தினைப் பயன்படுத்துபவர்களுக்கும் நோயாளர்களுக்கும் அச்சுறுத்தல் காணப்படுவதனால் பயன்படுத்த முடியாது எனவும் இக்கொள்வனவின் மூலம் பணம் வீணாக்கல் இடம்பெற்றுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. அது பற்றி உறுதிப்படுத்தி 2021 பெப்ரவரி 19 ஆந் திகதி வரை | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லை. பொலன்னறுவை மாவட்ட வைத்தியசாலையின் நிருவாகத்தின் கீழ் பேணப்பட்டு வருகின்ற கொவிட் 19 விசேட சிகிச்சைகளை வழங்குகின்ற கொரோனா நோயாளர்களின் கதிர்வீச்சு பரிசோதனைகளை மேற்கொள்ளும் போது நோயாளர்களுக்கு தொலைவில் வைத்து பரிசோதனைகளை விரைவாக மேற்கொள்வதற்காகவும் இயந்திரங்களை பயன்படுத்துபவர்களின் பாதுகாப்பிற்காகவும் Mine Portable Digital X-Ray இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், கதிர்வீச்சியலாளர்களினால் இந்த இயந்திரத்தினைப் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வது நிராகரிக்கப்பட்டதன் | இது சம்பந்தமாக முறையான விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்புக் கூறக்கூடிய தரப்பினர்கள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இயந்திரம் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. | காரணமாக அவர்கள் சமர்ப்பித்துள்ள விடயங்கள் மற்றும் கணக்காய்வு அவதானிப்புக்கள் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்களைப் பரீட்சிப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | |

## 3.2 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளின் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டம் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) சீனாவின் CETC International Com Ltd இனால் சுயமாகச் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை ஏற்றுக் கொண்டு அதற்காக The Hongkong and Shanghai Banking Corporation Ltd இடமிருந்து ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் 72.25 மில்லியன் மற்றும் மக்கள் வங்கியிடமிருந்து ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் 12.75 மில்லியனாக ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் 85 மில்லியன் கடன் பணத்தைப் பெற்றுக் கொண்டு இச்செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. ஆரம்பத்திலேயே அதற்கு | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | எப்போதும் அரசாங்கத்திற்கு பாதகமற்ற வகையில் செயற்திட்டத்தை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இது சம்பந்தமாக முறையான விசாரணை நடாத்தப்படுதல் வேண்டும். |

நிதியளிப்பதற்கு சீன அரசாங்கத்திடமிருந்து வணிக ரீதியற்ற கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்வதன் கீழ் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கும், செயற்திட்ட பிரேரணையின் பரப்பெல்லையை மதிப்பீடு செய்வதற்கும் கலந்துரையாடல் இணக்கப்பாட்டு குழுவினையும் செயற்திட்ட குழுவினையும் நியமிப்பதற்கு மற்றும் ஏற்றுக் கொள்ளக் கூடிய நிபந்தனைகளின் கீழ் நிதி வசதிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக கலந்துரையாடுவதற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரத்தை ஒப்படைப்பதற்கு 2010 யூலை 22 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அவ்வாறே செயற்திட்டத்திற்கான விடயப் பரப்பிற்காக 2013 நவம்பர் 07 ஆந் திகதி அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கலந்துரையாடல் குழுவின் (Cabinet Appointed Negotiation Committee) அங்கீகாரம் கிடைத்திருந்தது. எனினும், இச்செயற்திட்டத்தின் பெறுகை நடவடிக்கைகள் சம்பந்தமாக சுகாதார அமைச்சினால் 2014 சனவரி 10 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தை கருத்தில் கொண்டு நிதி அமைச்சரினால் செயற்திட்ட பிரேரணை CETC

International Com Ltd இனால் சுயவிருப்பில் சுயமாக சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை என்தனாலும் சீன அரசாங்கத்தினால் சலுகை நிபந்தனையின் கீழ் நிதியை வழங்குவதற்கு உத்தேச முன்னுரிமைப் பட்டியலில் உள்ளடக்கப்பட்ட செயற்திட்டம் அல்லாததனாலும் தற்பொழுது இத்துறைக்காக சீன அரசாங்கம் ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் 300 மில்லியன் மானியத்தில் நிதியளிக்கப்படுகின்ற செயற்திட்டம் இனங்காணப்பட்டுள்ள தனாலும் எதிர்காலத்தில் இனங்காணப்படுகின்ற வைத்தியசாலைகளுக்கான ஒட்டுமொத்த தேவைப்பாடுகளுக்காக மத்திய கால பாதீட்டு கட்டமைப்பினூடாக பொருத்தமான வகையில் மூலதனத்தை வழங்குவதற்கு நிதி மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படுவதினாலும் செயற்திட்ட பிரேரணையை நீக்க வேண்டுமென சிபார்சு செய்யப்பட்டிருந்தது. நிதி அமைச்சின் சிபார்சுகளை அமுல்படுத்துமாறு அமைச்சரவையினால் சுகாதார அமைச்சு செயலாளருக்கு 2014 மார்ச் 21 ஆந் திகதி தெரியப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக கவனம் செலுத்தாது 2015 நவம்பர் 20 ஆந் திகதி இச் செயற்திட்டத்திற்காக மீண்டும் அமைச்சரவை விஞ்ஞாபனம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ii) | அந்த அமைச்சரவை விஞ்ஞாபனம் சம்பந்தமாக கொள்கை ரீதியாக சுய விருப்பினை சமர்ப்பிக்கின்ற செயற்திட்ட பிரேரணை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதுவும் அனைத்து செயற்திட்ட பிரேரணைகளுக்காக அரசாங்கத்தின் பெறுகை சட்ட விதிகள் பின்பற்றப்பட வேண்டுமென்பதுவும் இப்பிரேரணை சம்பந்தமாக மேலதிக மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழுவிற்குச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் தேசிய செயற்திட்டம் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் அவதானிப்பாகும். 2016 பெப்ரவரி 02 ஆந் திகதி பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை குழுவினால் வழங்கிய சிபார்சுகளை அமுல்படுத்துவதற்காக பிரதம மந்திரியின் செயலாளரினால் 2016 பெப்ரவரி 05 ஆந் திகதி சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்ட சிபார்சுகளின் பிரகாரம் இச்செயற்திட்டத்தின் செயற்பாடுகள் சம்பந்தமாக அக்கறை காட்டும் தரப்பினர்களிடமிருந்து போட்டி விலைமனுக்களை கோருவதற்கு அமைச்சு செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்படாது மீண்டும் 2016 ஏப்ரல் 19 ஆந் திகதி அமைச்சரவை | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டு சீன அரசாங்கத்தின் CETC International Co Ltd இற்கு இச்செயற்திட்டத்திற்குரிய ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட்டிருந்தது. | | |
| (iii) | 2016 ஏப்ரல் 19 ஆந் திகதி சுகாதார அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைச்சரினால் வழங்கப் பட்ட அவதானிப்புக்களுக்கும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான அமைச்சரவை குழுவின் சிபார்சுகளுக்கும் இணங்க ஒப்பந்தத்தை வழங்குவதற்கான பெறுகை நடைமுறையின் போது Swiss Challenge Procurement Procedure இனை பின்பற்றுவதற்கான தேசிய பெறுகைக் குழுவிடமிருந்து ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்திருந்த போதிலும் அமைச்சினால் அக்குழுவின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளாது அமைச்சரவைக்கு விடயத்தை தெரிவித்து CETC International Co Ltd இற்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்குத் தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க பெறுகைக்காக பங்குபற்றுவதற்கு அக்கறை காட்டுகின்ற தகைமை பெற்ற நபர்களுக்கு நியாயமான சமமான மற்றும் உச்ச அளவு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (iv) | தற்பொழுது மதிப்பீட்டிற்கு உட்பட்டுள்ள முன்னுரிமைச் செயற்திட்டத்தை முடிவுறுத்தியதன் பின்னர் மாத்திரம் புதிய பிரேரணையை மதிப்பீட்டிற்கு உட்படுத்துவதாக சீன எக்ஸிம் வங்கி தெரிவித்ததாகவும் அதன் காரணமாக இப்புதிய பிரேரணையை மதிப்பீடு செய்வதற்கு குறிப்பிடத்தக்க அளவு காலம் எடுக்கும் எனவும் அமைச்சிற்கும் கம்பனிக்குமிடையே உடன்படிக்கை செய்யப்பட்ட ஒழுங்குவிதி என்பதனால் சீன அரசாங்கத்திடமிருந்து உதவியைப் பெற்றுக் கொள்ள முடியாது எனவும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் 2016 நவம்பர் 07 ஆந் திகதி சுகாதார அமைச்சு செயலாளருக்கு தெரிவித்திருந்த போதிலும் 2017 மே 06 ஆந் திகதி அமைச்சினால் CETC International Co Ltd நிறுவனத்துடன் ஒப்பந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் செயற்திட்டத்தின் நிதி வசதிகள் தொடர்பாக உறுதியான தீர்மானத்திற்கு வந்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (v) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு உபகரணம் தொடர்பாக சந்தை மீளாய்வினை மேற்கொண்டு இணக்கப்பாட்டிற்கு முன்னைய தொழில்நுட்ப | | |

| | | |
|---|---|---|
| பொருள் விபரக்குறிப்பு மற்றும் நிகழ்கால சந்தை விலை தொடர்பாக முறையான மதிப்பீட்டிற்காக ஒப்பந்தக்காரர் இணங்கி கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறான இணக்கப்பாட்டிற்கு வந்திருக்காததனால் கீழே விபரம் குறிப்பிட்ட நட்டம் ஏற்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| • இச்செயற்திட்டத்தின் கீழ் 2019 ஒக்தோபர் மாதத்தின் போது ஒன்று ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் 88,445.56 வீதம் 29 High Pressure Stetilizer கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும் 2020 ஆம் ஆண்டின் போது உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பெறுகையின் போது இந்த வகையான High Pressure Stetilizer ஒன்றிற்கு ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் 67,685.79 தொகையான விலைமனு சமர்ப்பிக்கப் பட்டிருந்தது. செயற்திட்டத்தினால் 29 High Pressure Stetilizer கொள்வனவு செய்ததன் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் ஐக்கிய குடியரசு டொலர் 602,033.33 அல்லது ரூபா 109,196,805 ஆகும். | - மேற்படி - | எதிர்கால கொள்வனவுகளின் போது அரசாங்கத்திற்கு உச்ச அளவு நலன்கள் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| • இச்செயற்திட்டத்தின் கீழ் 2019 நவம்பர் மாதத்தின் போது ஒன்று ஐக்கிய குடியரசு டொலர் 955.79 வீதம் 154 ECG Recorder கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும் 2020 ஆம் ஆண்டின் போது உயிரியல் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மருந்து பொறியியல் சேவை பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பெறுகையின் போது இந்த வகையான ECG Recorder ஒன்றிற்கு ஐக்கிய குடியரசு டொலர் 620.64 தொகையான கேள்வி மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தினால் 154 ECG Recorder கள் கொள்வனவு செய்ததன் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ஐக்கிய குடியரசு டொலர் 51,613.10 அல்லது ரூபா 9.36 மில்லியனாகும். | | |
| (iv) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் கொள்வனவு செய்வதற்கு இணங்கியிருந்த மருத்துவ உபகரணங்களின் வகைகள் மற்றும் அளவுகளுக்கு மேலதிகமாக 6 மருத்துவ உபகரண விடயங்களின் 36 அலகுகளை ஐக்கிய குடியரசு டொலர் 1,713,017 தொகை மேலதிக செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கான தேவைப்பாடு மற்றும் அதிகாரம் உறுதிப்படுத்தப்படவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | செயற்திட்டத்தில் வித்தியாசத்தை மேற்கொள்வதற்காக முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| (vii) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் பெறுகை செய்யப்பட வேண்டிய மருத்துவ உபகரணங்களில் காணப்பட வேண்டிய தொழில்நுட்ப விபரக் குறிப்புக்களுக்கு இணங்கியிருக்காத தொழில்நுட்ப விபரக் குறிப்புக்களுடனான ஐக்கிய குடியரசு டொலர் 10,341,390.57 கிரயமான 11 மருத்துவ உபகரண விடயங்களின் 732 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (viii) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 18 மருத்துவ உபகரணங்களுக்காக உத்தரவாத காலத்தின் பின்னர் 07 ஆண்டுகளுக் காகவும் ஏனைய மருத்துவ உபகரணங்களுக்காக ஸ்தாபித்தல் சான்றுதல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 01 ஆண்டிற்காகவும் உற்பத்தியாளர் மற்றும் அவரின் இலங்கையிலுள்ள அதிகாரம் பெற்ற உள்நாட்டு முகவருடன் சேவை மற்றும் பராமரிப்பு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | இலங்கையிலுள்ள அதிகாரம் பெற்ற உள்நாட்டு முகவருடன் சேவை மற்றும் பராமரிப்பு உடன்படிக்கையை விரைவாக மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ix) | தேசிய ஔடத ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபையினால் வழங்கப்படுகின்ற உபகரணங்களை பதிவு செய்தல் சான்றிதழ் மற்றும் இறக்குமதி உத்தரவுப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளாத ஒரு ஒப்பந்தக்காரரிடமிருந்து ஐக்கிய குடியரசு டொலர் 448,957.25 கிரயமான 25 Mortuary Cooler மற்றும் இறக்குமதி உத்தரவுப் பத்திரம் காலவதியான ஒப்பந்தக்காரர் ஒருவரிடமிருந்து ஐக்கிய குடியரசு டொலர் 414,173.84 கிரயமான 436 Pulse Oximeter கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | தேசிய ஔடக ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையினால் வழங்கப்பட்ட உபகரணங்களை பதிவு செய்தல் சான்றிதழ் மற்றும் இறக்குமதி உத்தரவுப் பத்திரம் இன்றி உபகரணங்களை கொள்வனவு செய்தலை தவிர்த்தல் வேண்டும். |
| (x) | 2019 நவம்பர் 01 ஆந் திகதியிலிருந்து 2020 திசெம்பர் 28 ஆந் திகதி வரையான காலப்பகுதியின் போது வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட ஐக்கிய | - மேற்படி - | உபரகணங்களை ஸ்தாபித்தல் சான்றிதழை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | குடியரசு டொலர் 20,858,277.81 கிரயமான 22 மருத்துவ உபகரண விடயங்களின் 1,681 அலகுகள் முறையாக ஸ்தாபிக்கப்பட்டது என்பது உறுதிப்படுத்தப்படாததுடன் 2020 சனவரி 09 ஆந் திகதியிலிருந்து 2021 சனவரி 18 ஆந் திகதி வரையான காலப்பகுதியின் போது வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட ஐக்கிய குடியரசு டொலர் 3,653,709.83 கிரயமான 17 உபகரண விடயங்களின் 517 அலகுகள் உரிய வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டது என்பது பெறுவனவுக் கட்டளையின் மூலம் உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறே வழங்குதல் கட்டளை வழங்கப்படாது ஐக்கிய குடியரசு டொலர் 9,244,757.86 கிரயமான மருத்துவ உபகரணங்களின் 155 அலகுகள் வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. | | எடுக்கப்பட வேண்டியதுடன் அனைத்து வழங்கல் களுக்காகவும் வழங்கல் கட்டளை வழங்கப்பட்டதன் பின்னர் அதற்காக பொருட்களைப் பெறுதல் கட்டளையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (xi) | குருணாகல் போதனா வைத்தியசாலையின் இருதய நோய்ப் பிரிவிற்கு வழங்கப்பட்ட ஐக்கிய குடியரசு டொலர் 75,027.91 கிரயமான Echo Cardiography இயந்திரத்தின் நியமம் தொடர்பாக திருப்தி கொள்ள முடியாது என வைத்தியசாலை முகாமைத்துவத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | இது சம்பந்தமாக விசாரணை செய்து சரி செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (xii) | செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்து வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்ட ஐக்கிய குடியரசு டொலர் 1,211,948.14 தொகையான | - மேற்படி - | செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களை யும் பயன்பாட்டிற்கு எடுத்துக் |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் 2021 மே 31 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | | கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த இலங்கையில் மருத்துவ ஆய்வுகூட சேவைகளை வலுப்படுத்தும் செயற்திட்டத்திற்காக பவுண் 4,639,805 தொகை மானியம் வழங்குவதற்கு பெரிய பிரித்தானியாவின் பிளேமிங் நிதியம் இணங்கியிருந்ததுடன் இச் செயற்திட்டம் தொடர்பாக புரிந்துணர்வு உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்காக 2019 ஒக்தோபர் 29 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. இது சம்பந்தமான கலந்துரையாடல் 2018 ஆம் ஆண்டிலிருந்து இடம்பெற்றிருந்தும் 2021 மார்ச் 15 ஆந் திகதி வரையும் அது தொடர்பாக புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கும் இது சம்பந்தமாக பெரிய பிரித்தானியாவின் சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு திணைக்களத்துடன் கையொப்பமிடுவதற்காக உத்தேச உடன்படிக்கையினை மேற்கொள்வதற்கும் முடியாதிருந்தது. இது சம்பந்தமாக விசேட அக்கறையுடன் நடவடிக்கை | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | இது சம்பந்தமாக பரீட்சித்து பொறுப்புக் கூறக்கூடிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

எடுக்காமையால் தொடர்ச்சியாக தாமதம் ஏற்பட்டதனால் இம்மானியம் இழக்கப்பட்டிருந்தது.

## 3.3 உள்நாட்டு நிதியத்தினால் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டின் போது இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் முகவர் நிறுவனத்தினால் (International and Communication Tecnology Agency of Srilanka) (ICTA) சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 1,805 மில்லியன் தொகையான இலங்கை அரசாங்கத்தின் வைத்தியசாலைகளில் இலத்திரனியல் மருத்துவ அறிக்கைகளை அமுல்படுத்தும் (Implementation of Electronic Medical Hospitals) செயற்திட்டத்திற்காக 2016 ஒக்தோபர் 05 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நாட்டிலுள்ள அனைத்து வைத்திய சாலைகளையும் உள்ளடக்கும் வகையில் 300 அரசாங்க வைத்தியசாலைகளில் இச்செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதனூடாக சுகாதார சேவையின் தரத்தினையும் விளைதிறனையும் மேம்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 300 வைத்தியசாலைகளில் 41 வைத்தியசாலைகள் Hospital Health Information Management System (HHIMS) மென்பொருட்களை | | |

| | | |
|---|---|---|
| ஸ்தாபித்திருந்தும் 2018 ஆம் ஆண்டிலிருந்து செயற்திட்டத்தின் மிகுதி நடவடிக்கைகளை சுகாதார அமைச்சிற்கு ஒப்படைப்பதற்கு நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) இச்செயற்திட்டத்திற்காக ICTA இற்கு தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சினால் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 355 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அதில் பொருட்களுக்காக ரூபா 147.61 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் மென்பொருள், மனித வளங்கள், பராமரிப்பும் சேவையும் மற்றும் ஏனையவைகளுக்காக செலவு செய்யப்பட்ட பணம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டுள்ளது. | செலவு செய்யப்பட்ட அனைத்து செலவுகளையும் இனங்காண்பதற்கு அனைத்து சொத்துக்களையும் அமைச்சினால் பொறுப்பேற்கு மற்றும் சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2018 ஆம் ஆண்டிலிருந்து செயற்திட்டத்தின் மிகுதி நடவடிக்கைகளை சுகாதார அமைச்சிற்கு ஒப்படைத்ததன் பின்னர் செயற்திட்டம் எதிர்காலத்தில் மேற்கொள்கின்ற முறைமை தொடர்பாகவும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள முறைமையை பராமரித்தல் மற்றும் பேணுதல் தொடர்பாகவும் சுகாதார அமைச்சிற்கும் தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சிற்குமிடையே ஒரு இணக்கப்பாடு எட்டப்படாதிருந்ததுடன் | - மேற்படி - | இச்செயற் திட்டத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களும் ஒன்றாக இணைந்து செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை வெற்றிகரமாக முடிவுறுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒவ்வொன்றிற்கும் அமைச்சின் பொறுப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. மேலும் ICTA இனால் ஸ்தாபிக்கப்பட்ட HHIMS மென்பொருளின் Source Code மற்றும் System Administrator இன் உரிமையை சுகாதார அமைச்சிற்குப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக HHIMS மென்பொருளை ஸ்தாபிப்பதற்குத் திட்டமிடப்பட்ட வைத்தியசாலைகளில் அம்மென்பொருட்கள் ஸ்தாபிக்கப்படாது Health Information Management System (HIMS) மென்பொருட்களை அபிவிருத்தி செய்வதற்கும் ஸ்தாபிப்பதற்கும் காலம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 63 வைத்தியசாலைகள் HIMS மென்பொருட்களை ஸ்தாபித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் செயற்திட்டத்தை திட்டமிட்டவாறு பூரணப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | | |
| (இ) | சுகார அமைச்சினால் இச்செயற்திட்டத்திற்காக 2018, 2019 மற்றும் 2020 அம் ஆண்டுகளின் போது ரூபா 245.21 மில்லியன் முழுப் பணமும் செலவு செய்யப்பட்டிருந்தது. இச்செலவுகளில் உள்ளடக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 15 வைத்தியசாலைகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 23.68 மில்லியன் கிரயமான 384 Laptop களும் ரூபா 1.25 | - மேற்படி - | செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்த அனைத்து உபகரணங் களையும் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிரயமான 32 அச்சு இயந்திரங்களும் (Brother Printer) ரூபா 4.52 மில்லியன் கிரயமான 80 Bixolon POS Printers & Bixolon Sticker Printers களும், ரூபா 1.57 மில்லியன் கிரயமான 395 Barcode Reader களும், 2021 மே 10 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. மேலும் இச்செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்து 43 வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 55.51 மில்லியன் கிரயமான 900 Laptop களும், ரூபா 3.36 மில்லியன் கிரயமான 86 அச்சு இயந்திரங்களும் (Brother Printer) ரூபா 6.20 மில்லியன் கிரயமான 215 Bixolon POS Printers மற்றும் Bixolon Sticker Printer களும் ரூபா 4.17 மில்லியன் கிரயமான 1,045 Barcode Reader களும் தேவையான சேவர் (Server) வசதிகள் பூரணப்படுத்தப்படாமையின் காரணமாக குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தன. | | |
| (ஈ) | இச்செயற்திட்டத்தின் கீழ் Server மற்றும் துணைக் கருவிகள் வழங்கி, கொண்டு வந்து ஒப்படைத்து மற்றும் ஸ்தாபிப்பதற்காக அமைச்சு பெறுகைக் குழுவினால் 2018 செப்தெம்பர் 06 ஆந் திகதி கேள்வி மனு கோரப்பட்டிருந்ததுடன் ரூபா 147.94 மில்லியன் ஒப்பந்த பெறுமதிக்கு ஒப்பந்தத்தை ஒப்படைக்கும் 2018 நவம்பர் 28 ஆந் திகதிய பெறுகைக் | - மேற்படி - | இது சம்பந்தமாக முறையான விசாரணையை மேற்கொண்டு அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள திட்டத்தை பொறுப்புக் கூறக் கூடிய தரப்பினர்களிட மிருந்து அறவிட வேண்டியதுடன் ஒப்பந்தக்காரர் சம்பந்தமாக |

| | |
|---|---|
| குழு தீர்மானத்தினை உரிய பிரிவுகளுக்கு தெரியப்படுத்துவதற்காக 47 நாட்கள் எடுத்திருந்தது. அதன் காரணமாக கேள்வி மனு கோரிய திகதியிலிருந்து 172 நாட்கள் தாமதித்து ஒப்பந்தம் 2019 பெப்ரவரி 25 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2019 யூலை 30 ஆந் திகதிக்கு முன்னர் பொருட்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் செயலாற்றல் பிணை முறியின் காலம் 2019 திசெம்பர் 25 ஆந் திகதி காலாவதியாகும் வரை பொருட்கள் வழங்கப்படாதிருந்ததுடன் செயலாற்றல் பிணை முறியின் காலத்தை நீடிப்பதற்கோ அல்லது காலாவதியாகுவதற்கு முன்னர் பணமாக்குவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சு பெறுகைக் குழுவினர் இப்பெறுகையை முடிவுறுத்துவதற்கும் ஒப்பந்தக்காரர் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கும் 2020 செப்தெம்பர் 10 ஆந் திகதி தீர்மானம் எடுத்திருந்தும் 2021 செப்தெம்பர் 15 ஆந் திகதி வரை அது சம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிக நடவடிக்கை விரைவாக எடுத்தல் வேண்டும். |

## 3.4 பெறுகைகள்

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) ஆய்வுகூட உபகரணங்களை மிகவும் விரைவாகவும் ஆக்கபூர்வமாகவும் வழங்கி ஆய்வுகூட பரிசோதனைகளின் உதவியுடன் டெங்கு காய்ச்சல் நோய்களை முன்னரே இனங்காணல், நோய்த் தீர்ப்புக்கள் மற்றும் நாளாந்தம் பின்தொடர் நடவடிக்கை எடுக்கும் குறிக்கோளுடன் மாகாண சபையின் நிருவாகத்தின் கீழுள்ள வைத்திய சாலைகளுக்கு ஆய்வு கூட உபகரணங்களை (Laboratory Equipement) வழங்கும் செயற்திட்டத்தின்கீழ் 12 அலகுகள் Fully Automated 5 Part Heamatology Amalyzer பெறுகை செய்வதற்காக தேசிய போட்டி முறைமைக்கு 2018 செப்தெம்பர் 27 ஆந் திகதி கேள்வி மனு கோரப்பட்டு ரூபா 14.4 ஒப்பந்தப் பெறுமதிக்கு 2020 சனவரி 30 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைக்காக எடுக்கக்கூடிய நியாயமான காலம் 15 வாரங்களாக இருந்த போதிலும் அதற்காக 83 வாரங்கள் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கி கொள்ளப்பட்டது. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைகளுக்காக எடுக்கக்கூடிய நியாயமான |

| | | | |
|---|---|---|---|
| | எடுத்திருந்தமையின் மூலம் ஆய்வுகூட உபகரணங்களை மிகவும் விரைவாக வழங்கும் குறிக்கோள் இருந்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | காலத்தினுள் பெறுகை நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) | அரசாங்க பெறுகை கையேட்டின் 2.7.4 ஆம் பந்தியில் குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக இப்பெறுகைக்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர் உரிய அமைச்சு பெறுகைக் குழுவின் அங்கத்தவராகவும் நியமிக்கப்பட்டிருந்தார். | - மேற்படி - | இது சம்பந்தமாக விசாரணை செய்து பொறுப்புக் கூறக் கூடிய உத்தியோகத்தர் கள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | Fully Automated 5 Part Heamatology Analyzer இற்காக உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவினால் தயாரித்து அங்கீகரிக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப விபரக் குறிப்புக்களை மீறுவதற்கு கிடைத்திருந்த அதிகாரம் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | இது சம்பந்தமாக விசாரணை செய்து பொறுப்புக் கூறக்கூடிய உத்தியோகத்தர் கள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அங்கீகரித்திருந்த விபரக் குறிப்புக்களில் முக்கியமான தொழில்நுட்ப நிபந்தனைகள் (Critical Technical Conditions) தெரிவு செய்யப்பட்ட கேள்வி தாரரினால் நிறைவேற்றப்படாதிருந்த போதிலும் விபரக் குறிப்புக்களுடன் இணங்கியிருக்காமை தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (v) அங்கீகரித்த தொழில்நுட்ப விபரக்குறிப்புக்களுக்கு இணக்கமற்ற விபரக் குறிப்புக்களுடன் Fully Automated 5 Part Heamatology Analyzer இற்காக கேள்வி கோரப்பட்டிருந்தமை தொடர்பாகவும் அங்கீகரித்த விபரக் குறிப்புக்களில் குறிப்பிட்ட முக்கியமான தொழில்நுட்ப நிபந்தனைகள் (Critical Technical Conditions) தெரிவு செய்யப்பட்ட கேள்வி தாரரினால் நிறைவேற்றப்பட்டிருக்காமை தொடர்பாகவும் ஏனைய கேள்விதாரரினால் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.5.1 (ஆ) வழிகாட்டிக்கு மாற்றமாக அமைச்சு பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் ஒன்றிணைந்த குழுவாக கூட்டப்பட்டு மேன்முறையீடு தொடர்பாக சிபார்சுகள் வழங்கப்படாதிருந்ததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் 05 அங்கத்தவர்களில் ஒரு அங்கத்தவர் மாத்திரம் மேன் முறையீட்டுக் குழுவிற்கு பங்குபற்றியிருந்தார். | - மேற்படி - | - மேற்படி - |
| (ஆ) மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 139 மில்லியன் தொகையான மற்றும் ஒப்பந்த பெறுமதி ரூபா 136.6 மில்லியன் தொகையான களுத்துறை பொது வைத்தியசாலையின் மட்டுப்படுத்தப்பட்ட வைத்தியர்களுக்காக உத்தியோகபூர்வ | | |

| | | | |
|---|---|---|---|
| | இல்லங்களை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைக்காக எடுக்கக்கூடிய நியாயமான காலம் 55 வாரங்களாக இருந்த போதிலும் 110 வாரங்கள் எடுத்திருந்தன. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லை. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைக்காக எடுக்கக்கூடிய நியாயமான காலத்தினுள் பெறுகை நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்தக்காரரின் அனைத்து ஆபத்துக்கள் மற்றும் வேலை செய்கின்ற நபர்களின் இழப்பீட்டிற்காக ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்ட காப்புறுதி பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் 2020 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் மிகைத்திருந்த போதிலும் அதற்கு முன்னர் காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கை பதிவு செய்யப்படுதல் வேண்டும். காப்புறுதி பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் மிகைப்பதற்கு முன்னர் அவற்றின் காலநீடிப்பை செய்விப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2018 பெப்ரவரி 23 ஆந் திகதி ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தம் வழங்கல் கடிதத்தின் ii ஆம் பந்தியின் பிரகாரம் ஒப்பந்த காலம் நீடிக்கப் | - மேற்படி - | ஒப்பந்தம் வழங்கல் கடிதத்தில் குறிப்பிட்ட பணிப்புரையின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | படாததுடன் தாமதத்திற்காக உடன்படிக்கையின் பிரகாரம் தண்டப்பணம் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். ஒப்பந்தம் வழங்கல் கடிதத்தின் iii ஆம் பந்தியின் பிரகாரம் தண்டப் பணத்தை அறவீடு செய்வதற்கு மாற்று வழியாக விலை முரண்களைச் செலுத்தாது ஒப்பந்த காலத்தை நீடிப்பதனை மாத்திரம் கருத்தில் கொள்ளலாம். எனினும் ஒப்பந்தக் காலத்தை நீடிப்பதற்கு மேலதிகமாக விலை முரண்களுக்காக ரூபா 2.30 மில்லியன் செலுத்தப்பட்டதுடன் தாமதக் காலத்திற்காக தண்டப் பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | | எடுத்தல் வேண்டும். அதன்படி நடவடிக்கை எடுக்காத பொறுப்புக் கூறக் கூடிய உத்தியோகத்தர் கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2019 மார்ச் 21 ஆந் திகதி வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 யூன் 10 ஆந் திகதி வரை வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலத்தின் போது வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த கிரயம் ரூபா 77.38 மில்லியன் தொகையான மற்றும் ஒப்பந்த பெறுமதி ரூபா 68.92 மில்லியன் தொகையான கராபிடிய போதனா வைத்திய சாலையின் பாரிஸவாத அலகினை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2 ஆம் வழிகாட்டியின் | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றேன். | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் பெறுகைக்காக எடுக்கக்கூடிய நியாயமான காலம் 43 வாரங்களாக இருந்த போதிலும் அதற்காக 72 வாரங்கள் எடுத்திருந்தன. | | வழிகாட்டிகளின் பிரகாரம் பெறுகைக்காக எடுக்கக்கூடிய நியாயமான காலத்தினுள் பெறுகை நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனு ரூபா 68.88 மில்லியனாக இருந்ததும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அப்பெறுமதி ரூபா 68.92 மில்லியனாக மாற்றப்பட்டு ரூபா 47,188 ஆல் அதிகரித்த பெறுமதிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மேற்கொள்ளப் படுகின்ற அனைத்து மாற்றங்களும் மேற்கொண்ட முறையை உறுதியாகக் காட்டும் மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்த விலை மனுவின் தொடக்க பிரதியை பாதுகாப்பாக வைத்தல் வேண்டும். |
| (iii) | கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட வேண்டிய ஆவணங்கள் இல்லாமையினால் 2020 திசெம்பர் 31 வரையும் உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | ஒப்பந்த உடன்படிக்கையில் விரைவாக கையொப்பமிடுதல் வேண்டும். |
| (iv) | 2017 திசெம்பர் 13 ஆந் திகதி ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தம் வழங்கல் கடிதத்தின் ii ஆம் பந்தியின் பிரகாரம் ஒப்பந்த காலம் நீடிக்கப்படாததுடன், தாமதத்திற்காக | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். | ஒப்பந்தம் வழங்கல் கடிதத்தில் குறிப்பிட்ட பணிப்புரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கையின் பிரகாரம் தண்டப்பணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தாமதகாலம் 23 மாதங்களுக்காக தண்டப் பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. ஒப்பந்தம் வழங்கல் கடிதத்தின் iii ஆம் பந்தியின் பிரகாரம் தண்டப்பணத்தை அறவீடு செய்வதற்கான மாற்று வழியாக விலை முரண்களைச் செலுத்தாது காலநீடிப்பிற்கு கவனம் செலுத்த வேண்டிய போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை விலை முரண்களுக்காக ரூபா 2.01 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (v) | விலை முரண்களை கணிப்பீடு செய்யும் போது கொடுப்பனவுச் சான்றிதழில் காட்டப்பட்ட செய்த வேலைகளின் பெறுமதி கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்குப் பதிலாக ஆலோசனை நிறுவனத்தினால் சான்றுப்படுத்தப்பட்ட பெறுமதி கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 4.43 மில்லியன் தொகையான செய்த வேலைப் பெறுமதிக்கான விலை முரண்கள் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | கொடுப்பனவுச் சான்றிதழில் காட்டப்படுகின்ற செய்த வேலைகளின் பெறுமதியை கவனத்திற்கு எடுத்துக் கொண்டு விலை முரண்கள் கணிப்பிடப்படுதல் வேண்டும். மிகையாகச் செலுத்திய பணம் உரிய தரப்பினர்களிட மிருந்து மீள அறவிடப்படுதல் வேண்டும். |
| (vi) | 2019 சனவரி 31 ஆந் திகதியளவில் வேலையைப் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | ஒப்பந்தம் வழங்கும் கடிதத்தில் குறிப்பிட்ட பணிப்புரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதன் |

| | | | |
|---|---|---|---|
| | | | படி நடவடிக்கை எடுக்கப்படாத பொறுப்புக்கூறக் கூடிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பேராதனை போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை வாட்டுக் கட்டிடத் தொகுதிக்காக 1,000 கிலோகிராம் இயலளவைக் கொண்ட 15 நபர்களை அளவில் ஒரு தடவையில் எடுத்துச் செல்லக்கூடிய மின்தூக்கியினை வழங்கிப் பொருத்தும் ஒப்பந்தம் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | தயாரிக்கப்பட்ட ரூபா 7.27 மில்லியன் தொகையான மொத்த கிரய மதிப்பீட்டிற்கு சிவில் உரு மாற்றங்களுக்கு (Civil Modification) ரூபா 200,000 உள்ளடக்கப் பட்டிருந்த போதிலும் அச்சிவில் உரு மாற்றங்கள் தொடர்பான தெளிவான பகுப்பாய்வு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. ஒப்பந்தத்திற்காகத் தெரிவு செய்யப்பட்ட கேள்வி தாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 5.08 மில்லியன் தொகையான ஒப்பந்த பெறுமதியில் சிவில் உரு மாற்றத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்யப் பட்டிருந்தது என்பதனை இனங்காணக் கூடிய வகையில் விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்ளப்பட்டது. | மதிப்பீட்டினுள் நிதிஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்யும் போது உரிய வேலை விடயங்களின் விபரம் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | விலைமனுக்கள் கோரப்பட்டிருந்த விபரக் குறிப்புக்களுக்கு முற்றிலும் மாற்றமாக 750 கிலோ கிராம் இயலளவினைக் கொண்ட 11 நபர்களை மாத்திரம் எடுத்துச் செல்லக் கூடிய மின் தூக்கிக்காக விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததனால் மற்றும் அது அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.8.4(ஏ) பந்தியின் பிரகாரம் பாரிய மீறல் என்பதனால் விலை மனுக்கள் நிராகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்குப் பதிலாக அந்த கேள்விதாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்ளப்பட்டது. இச்செயற்பாட்டிற்காக மீண்டும் விலை மனுக்கள் கோர வேண்டியிருந்த போதிலும் இரண்டு பீம்களுக்கு உள்ளே வெளிவந்திருந்ததன் காரணமாக 1000 கிலோ கிராம் மின்தூக்கியை ஸ்தாபிப்பதற்கு நியம அளவான நீளம் அகலம் உரிய இடத்தில் இல்லை என்பது வெளிப்படுத்தப்படாமையின் காரணமாக விபரக் குறிப்பு முறையாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை எனவும் மின்தூக்கியின் அகலம் இன்னும் குறைவடைய வேண்டும் எனவும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மற்றும் பெறுகைக் குழுவினால் வெளிப்படுத்தப்பட்டிருப்பதனால் 750 கிலோகிராம் மின்தூக்கியைப் பொருத்துவதற்காக பெறுகை வழங்கப்பட்டிருந்தது. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 1000 கிலோகிராம் இயலளவைக் கொண்ட மின்தூக்கியை வழங்குவதற்கு 2019 ஏப்ரல் 10 ஆந் திகதி ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்து கொண்டிருந்த போதிலும் 750 கிலோகிராம் இயலளவைக் கொண்ட மின்தூக்கி வழங்கி பொருத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | ஒப்பந்தக்காரர் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 34 ஆம் இலக்க கேள்விதாரருக்கான அறிவுறுத்தல் (Instruction to Bidders) மற்றும் ஒப்பந்தம் | செயலாற்றல் பிணையை நீடித்து தருமாறு ஒப்பந்தக் காரருக்கு தெரியப்படுத்தியிருந்ததுடன் | உடன்படிக்கை செய்யப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கும் கடிதத்தின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு ஆண்டு உத்தரவாத காலத்திற்காக செல்லுபடியாகும் செயலாற்றல் பிணை பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 508,470 தொகையான செயலாற்றல் பிணையானது 2020 யூன் 20 ஆந் திகதி அதாவது பொருத்துதல் பூர்த்தி செய்யப்பட்டதாகக் குறிப்பிட்ட 2019 திசெம்பர் 16 ஆந் திகதியிலிருந்து 06 மாதங்களின் போது காலாவதியாகியிருந்தது. எனினும், செயலாற்றல் பிணையின் செல்லுபடியாகும் காலத்தை நீடித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதனை வழங்கும் வரை விலைப்பட்டியல்களுக்கு பணம் செலுத்தாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | தெரிவு செய்யப்பட்ட கேள்வி தாரர் மற்றும் நிராகரித்த கேள்விதாரரினால் அடுத்துவரும் 5 ஆண்டுகளுக்கான பராமரிப்பு கிரயத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட முறையே ரூபா 725,000 மற்றும் ரூபா 335,780 தொகையான விலை மனுக்களுக்கிடையே ரூபா 389,220 தொகையான பாதகமான முரண் காணப்பட்டது. | மெட்ரோபொலிடன் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வியானது மதிப்பீட்டினூடாக நிராகரிக்கப்பட்டிருந்ததனால் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைமனுக்கள் அவற்றுடன் ஒப்பீட்டிற்கு உட்பட்டிருக்க வில்லை. | உறுதியாக குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டு வரையறைகளை அடிப்படையாகக் கொண்டு விலை மனுக்கள் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (உ) | ஒப்பந்தப் பெறுமதி ரூபா 583.78 மில்லியன் தொகையான சிலாபம் பொது வைத்தியசாலையின் மருத்துவ வாட்டு கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் இப்பெறுகைக்கான நியாயமான காலம் 88 வாரங்களாக இருந்த போதிலும் 152 வாரங்கள் எடுக்கப்பட்டிருந்தன. | கேள்வி ஆவணங்களை அடிக்கடி திருத்தம் செய்வதற்கு சிபார்சு செய்யப்பட்டமை, அதற்கிணங்க கேள்வி ஆவணங்களை மதிப்பீடு செய்தல், கேள்விதாரர்களிடமிருந்து எழுத்துமூலம் தெளிவுபடுத்தலை பெற்றுக் கொள்ளல் அவ்விலை மனுக்கள் மீண்டும் மதிப்பீட்டிற்கு உட்பட்டமை முதலிய செயற்பாடுகள் இதற்காக தாக்கமளித்திருந்ததுடன் இவ்வாறான அதிக பெறுமதியுடனான கட்டிடத் தொகுதியின் பெறுகையின் போது இவ்வாறான நிலைமை ஏற்படுவது வழக்கமாக இடம்பெறுபவையாகும். | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைக்காக எடுக்கக்கூடிய நியாயமான காலத்தினுள் பெறுகை நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்களுடன் அளவீட்டுப் பத்திரத்தின் மூலப் பிரதி கணக்காய்விற்குச் சமர்ப் பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒப்பந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட அளவீட்டுப் பட்டியலின் 06 வேலை விடயங்களின் பெறுமதி மாற்றப்பட்டிருந்ததுடன் அம்மாற்றங்களுக்காக கேள்விதாரர் கையொப்ப மிட்டிருக்கவில்லை. | அளவீட்டுப் பத்திரத்தின் மூலப் பிரதி எதிர்காலத்தில் விரைவாகச் சமர்ப்பிக்கப்படும். | ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்த விலை மனுக்களுடன் அளவீட்டுப் பத்திரத்தின் மூலப் பிரதியையும் பாதுகாப்பாக வைக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கேள்வியை வழங்கியதன் பின்னர் அக்கேள்வி வழங்கிய திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் கேள்விதாரரினால் அக்கேள்வியின் தகவல்கள் பொது ஒப்பந்த | 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஒப்பந்த |

| | | | |
|---|---|---|---|
| | | பதிவாளருக்கு சமர்ப்பித்து பொது உடன்படிக்கையை பதிவு செய்தலானது இடம்பெற்றிருக்கவில்லை. எதிர்காலத்தில் அதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | உடன்படிக்கை பதிவு செய்யப்படுதல் வேண்டும். |
| (iv) | 2017 நவம்பர் 15 ஆந் திகதி வழங்கப்பட்ட ஒப்பந்தம் வழங்கல் கடிதத்தின் ii ஆம் பந்தியின் பிரகாரம் ஒப்பந்த காலம் நீடிக்கப்படாததுடன் தாமத காலத்திற்காக உடன்படிக்கையின் பிரகாரம் பணம் அறவிடப்பட வேண்டியதுடன் அக்கடிதத்தின் iii ஆம் பந்தியின் பிரகாரம் தண்டப் பணத்தை அறவீடு செய்வதற்கான மாற்று வழியாக விலை முரண்கள் செலுத்தப்படாது காலத்தை நீடிப்பதற்கு மாத்திரம் கவனம் செலுத்தப்படலாம். எனினும், 1 ஆவது விலைப் பட்டியலிலிருந்து விலை முரண்களுக்காக ரூபா 8.70 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் காலத்தை நீடிப்பதும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | இந்த ஒப்பந்தத்தின் முதலாவது திகதியை நீடித்தல் 2020 ஏப்ரல் 08 ஆந் திகதி வரை சுகாதார சேவைகள் பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2020 ஏப்ரல் 09 ஆந் திகதியிலிருந்து 2020 செப்தெம்பர் 23 ஆந் திகதி வரை ஒப்பந்தத்தின் திகதியை நீடிக்கும் சிபார்சிற்காக இந்த அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்தினால் இந்த அமைச்சிற்கான பிரதியுடன் நேரடியாக அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தற்கு சிபார்சு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததனால் அச்சந்தர்ப்பத்தின் போதே ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. அத்துடன் ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததனால் தாமதக் கட்டணங்களாக தண்டப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஒப்பந்தம் வழங்கல் கடிதத்தில் குறிப்பிட்ட பணிப்புரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | அமைச்சின் பொறியியல் பிரிவினால் கொடுப்பனவை சிபார்சு செய்வதற்கு முன்னர் விலைப் பட்டியல்களில் செய்த | கருத்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | கொடுப்பனவுச் சான்றிதழில் காட்டப்பட்ட செய்த வேலைகளின் பெறுமதியை |

| | | | |
|---|---|---|---|
| | வேலைகளின் பெறுமதி மாற்றப்பட்டிருந்தும் அந்த மாற்றப்பட்ட வேலைப் பெறுமதிக்கு இணங்க விலை முரண்கள் செம்மையாக்கப்பட்டிருக்காமையின் காரணமாக ரூபா 4.26 மில்லியன் தொகையான செய்த வேலைகளின் பெறுமதிக்காக விலை முரண்களுக்காக மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | | கவனத்திற்கு எடுத்துக் கொண்டு விலை முரண்கள் கணிக்கப்படுதல் வேண்டும். மிகையாகச் செலுத்தப்பட்ட பணத்தை உரிய தரப்பினர் களிடமிருந்து அறவிடுதல் வேண்டும். |
| (vi) | உடன்படிக்கையின் பிரகாரம் மற்றும் கால நீடிப்புக்கு இணங்க 2020 மார்ச் 24 ஆந் திகதி வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 சனவரி 31 ஆந் திகதி வரை வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலத்தின் போது வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | அமைச்சின் பயன்பாட்டிற்காக மெடி ஹவுஸ் கட்டிடத்தை வாடகைக்கு எடுத்துக் கொள்வது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | 2018 பெப்ரவரி 27 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சினால் வழங்கப்பட்ட அவதானிப்புக்களில் வலியுறுத்தப்பட்டவாறு நிதிப் பிரமாணம் 835(2) இன் பிரகாரம் அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டு அறிக்கையுடன் இணங்கி கொள்வதாக இருந்தால் கட்டிடத்தை வாடகைக்கு எடுத்துக் கொள்ளக் கூடியதாக இருந்த போதிலும் கட்டிடத்தின் மதிப்பீட்டு அறிக்கையானது | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நிதிப் பிரமாணம் 835(2)(இ) இற்கு இணங்க குறித்த சில பிரதம மதிப்பீட்டாளர்களிடமிருந்து வாடகை மதிப்பீட்டு அறிக்கை கோரப்பட்டுள்ளது. அந்த வாடகை மதிப்பீடானது திறந்த பெறுகைகளின் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஆகக்குறைந்த விலையைச் சமர்ப்பித்த கேள்விதாரரின் விலைமனுவினை விட குறைவானது என்பதனால் உரிய விலைகளைக் | இது சம்பந்தமாக முறையான விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்புக் கூறக்கூடிய தரப்பினர்கள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதம மதிப்பீட்டாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளாது அதற்குப் பதிலாக கொழும்பு மாநகர சபை ஊழியர் ஒருவரிடமிருந்து முறையற்ற வகையிலும் சட்டத்திற்கு முரணான வகையிலும் பெற்றுக் கொள்ள்பட்ட மதிப்பீட்டு அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து 2020 யூலை 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக ரூபா 239.08 மில்லியன் மொத்த தொகைக்கு கட்டிடம் வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

குறைத்துக் கொள்வது சம்பந்தமாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபார்சின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரருடன் அமைச்சு பெறுகைக் குழு கலந்துரையாடியது. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் விலையைக் குறைப்பதற்கு இணங்கி கொள்ளவில்லை. அதற்கிணங்க உருவாகிய நிலைமை தொடர்பாக அமைச்சரவைக்குத் தெரிவித்து தீர்மானத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரின் அவதானிப்புக்களில் குறிப்பிட்டவாறு நிதிப் பிரமாணம் 835(2) இற்கு இணங்க அமைச்சின் மூலம் ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரியப்படுத்தி யிருந்ததனால் அதற்கிணங்க பிரதம மதிப்பீட்டாளரின் தீர்மானத்தை பொறுப்பேற்பதற்கு அல்லது அதனுடன் இணங்கி கொள்ளமுடியாதவிடத்து நடவடிக்கை எடுக்க வேண்டியமுறைமைக்கு இணங்க குறித்த நிதிப் பிரமாணம் 835(2)(இ) இல் காட்டப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக பெறுகைக் குழு தீர்மானித்திருந்தும் அமைச்சு செயலாளருக்கு சமர்ப்பித்து அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. ஒப்பந்தம் வழங்கியதன் பின்னர் ஒப்பந்த உடன்படிக்கை செய்து கொண்டமை சம்பந்தமாக அமைச்சின் சட்ட உத்தியோகத்தரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதனால்

| | | | |
|---|---|---|---|
| | | சட்டமா அதிபதியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதுடன் அடுத்துவரும் பெறுகை நடவடிக்கைகளின் போது இக்குறைபாடுகளை சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ii) | 2012 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய 27 ஆம் இலக்க அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவை பின்னிணைப்பின் 2.8.1(அ) பந்தியில் குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளுக்கு முரணாக இப்பெறுகைக் குழுவின் தலைவர் இப்பெறுகைகுரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகச் செயற்பட்டிருந்தார். | - மேற்படி - | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 835(3) இன் பிரகாரம் வாடகை உடன்படிக்கைக்காக சட்டமா அதிபதியின் இணக்கப்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | பெறுகை தீர்மானத்திற்கு இணங்க கட்டிடத்திற்குச் செல்லும் திகதியில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவேண்டிய இரண்டாவது மின்தூக்கி பொருத்தப்பட்டிருக்காமை மற்றும் இரண்டாவது காவல் அரண் தயாரிக்கப்பட்டிருக் காமை சம்பந்தமாக கட்டணம் குறைத்தல் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நிர்ணயிக்கப்பட்ட வாறு நிறைவேற்றப்படாத செயற்பாடுகளுக் காக பொருத்தமானவாறு மாதாந்த வாடகை குறைக்கப்படுதல் வேண்டும். |
| (எ) | கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கதிர்வீச்சு பரிசோதனை நடவடிக்கைகளுக்கு தேவையான Film Laser | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. Film Laser Blue Base 26X36 Cm இயந்திரத்துடன் இணைந்த | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டிகள் மற்றும் கேள்வி |

Blue Base 26x36 Cm களுக்காக பதிவு செய்யப்பட்ட 18 வழங்குனர்களிடமிருந்து கேள்வி மனுக்கள் கோரப்பட்டிருந்தும் கேள்வி மனுக்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியான 2019 யூலை 25 ஆந் திகதி வரை எக்கேள்விதாரரும் கேள்வி மனுக்களைச் சமர்ப்பித்திருக்காததனால் மீண்டும் கேள்வி கோரப்பட வேண்டிய போதிலும் அதற்குப் பதிலாக கேள்விகளைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியிலிருந்து 06 நாட்களுக்குப் பின்னர் 2019 யூலை 31 ஆந் திகதி சமர்ப்பித்திருந்த ரூபா 3.52 மில்லியன் தொகையான கேள்வி மனுவை ஏற்றுக் கொண்டு பெறுகை வழங்கப்பட்டிருந்தது. இந்த வழங்குனரினால் Film Laser Blue Base 26X36 Cm வழங்குவதற்காக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இப்பெறுகையானது அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.11.1(இ), 2.11.3, 2.12 மற்றும் 6.3.6 ஆகிய வழிகாட்டல்களுக்கு இணங்கியிருக்கவில்லை.

ஒரு விடயமாகும். இதற்கு ஏனைய வழங்குனர்கள் இல்லை என்பதனால் இந்த முகவர் நிறுவனத்திடமிருந்து மாத்திரம் கொள்வனவு செய்யலாம். உரிய நிறுவனத்தினால் சமர்ப்பித்த விலை மனுவில் சரியான திகதியில் உரிய நாள் முத்திரை பொறிக்கப்பட்டு விலைமனுவை திறக்கும் குழுவினால் கையொப்பமிடப்பட்டுள்ளது. விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் தவறுதலினால் 2019 யூலை 25 ஆந் திகதி எதுவித கேள்வியும் சமர்ப்பித்திருக்காத திகதிக்குரிய ஆவணத்தை இதற்காக ஈடுபடுத்தியுள்ளார். NMRA சான்றிதழ் இல்லாத கேள்விதாரர் நிராகரிக்கப்படுவதாக கேள்வி மனு கோரும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தும் இந்த நிறுவனம் குறித்த பொருளை வழங்குகின்ற ஒரேயொரு முகவர் நிறுவனம் என்பதனால் கேள்வி மனுக்களை நிராகரித்தாலும் உரிய பொருளை வழங்கக்கூடிய ஏனைய வழங்குனர்கள் இல்லாமையின் காரணமாக நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் சேவை தொடர்பாக கருத்தில் கொண்டு அந்த நிறுவனத்திடமே பெறுகைகள் வழங்கப்பட்டிருந்தன.

கோரும் நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஏ) மீளாய்வாண்டில் 04 சந்தர்ப்பங்களின் போது சந்தை விலை கோரும் முறைமையைப் பின்பற்றி குருணாகல் போதனா வைத்தியசாலைக்குத் தேவையான ரூபா 19.39 மில்லியன் மொத்த கிரயமான பாவனைப் பொருட்கள் மற்றும் திரவியங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| (i) 04 சந்தர்ப்பங்களின் போது பாவனைப் பொருட்கள் மற்றும் திரவியங்களுக்காக பதிவு செய்யப்பட்டிருந்த 24 வழங்குனர்களில் 10 வழங்குனர்களிடமிருந்து மாத்திரம் கேள்வி மனுக்கள், கோருதல் இடம்பெற்றிருந்ததனால் பதிவு செய்யப்பட்ட அனைத்து வழகுனர்களுக்கும் அப்பெறுகைக்கு நியாயமாகவும் சமமாகவும் பங்குபற்றுவதற்குக் காணப்பட்ட சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லை. வைத்தியசாலையின் அவசர தேவைக்காக பொருட்களைப் பெற்றுக் கொள்ளும் வசதியை கருத்தில் கொண்டு வைத்தியசாலைக்கு அருகாமையில் உள்ள பதிவு செய்த வழங்குனர்களிடமிருந்து கேள்வி மனுக்களை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இரண்டாவது கேள்வி கோருதலிலிருந்து பின்னைய அனைத்து கேள்வி கோரல் சந்தர்ப்பம் வரையும் காணப்பட்ட கொரோனா இன்னல் நிலைமையின் அடிப்படையில் நாட்டில் பல பிரதேசங்கள் மூடப்பட்டிருந்தமை மற்றும் தபால்கள் செயற்படாதிருந்தமை ஆகிய விடயங்களின் அடிப்படையில் குருணாகலுக்கு அருகாமையிலுள்ள வழங்குனர்கள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டு விலைமனு கோரல் கடிதங்கள் அனுப்புதல் இடம்பெற்றிருந்தது. | இது சம்பந்தமாக முறையான விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்புக்கூறக் கூடிய தரப்பினர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | வியாபாரப் பெயர்களைப் பதிவு செய்யும் சான்றிதழின் பிரகாரம் ஒரே குடும்பத்திற்குச் சொந்தமான இரண்டு நிறுவனங்களினால் சமர்ப்பித்த கேள்வி மனுக்கள் மற்றும் இன்னுமொரு வழங்குனரின் கேள்வி மனு மாத்திரம் மதிப்பீடு செய்யப்பட்டதோடு அக்குடும்பத்திற்குச் சொந்தமான இரண்டு நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் பாவனைப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை மற்றும் இப்பெறுகை அரசாங்க வழிகாட்டிக் கோவையின் 2.12, 2.11.2, 3.4.2(அ)(i), 4.2, 6.1, 6.3, 6.3.6, 8.9.1(ஆ) ஆகிய வழிகாட்டிகளுக்கு இணங்க இடம்பெற்றிருக்காமையின் காரணமாக பாவனைப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக ஆகக் குறைந்த போட்டி விலையை பெற்றுக் கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது என்பதுவும் பெறுகை நடைமுறையின் நம்பிக்கைத் தன்மையும் வெளிப்படைத் தன்மையும் பாதுகாக்கப் பட்டிருக்கவில்லை என்பதுவும் அவதானிக்கப்பட்டது. | பல்வேறு வகையான பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக கேள்வி கோரும் போது கிடைக்கும் விலைமனுக்களை அடிப்படையாகக் கொண்டு பெறுகை நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆகக்குறைந்த விலைக்கு அல்லது மதிப்பீட்டுச் சபையின் அறிக்கையிலிருந்து கிடைக்கும் சிபார்சுகளின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு உச்ச அளவு நலன்கள் கிடைக்கும் வகையில் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன. கேள்வி நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது கிடைக்கின்ற விலை மனுக்களை ஒவ்வொறு நிறுவனத்திற்கும் சென்று ஒப்பீடு செய்து பொருட்களை கொள்வனவு செய்தல் இடம்பெற்றிருக்க வில்லை. | - மேற்படி - |
| (iii) | கணக்காய்வு உத்தியோகத்தர்களால் வரையறுத்த அரசாங்க வியாபார (நானாவித) கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட விலைமனுக்களுடன் ஒப்பீடு செய்த போது இரண்டு வழங்குனர்களுக்கு ரூபா 1.94 மில்லியன் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தமையும் | கணக்காய்வு உத்தியோகத்தர்களால் உரிய நிறுவனங்களுக்குச் சென்று விலை மனுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தும் அந்நிறுவனங்களினால் அப் பொருட்களை வழங்கும் பொறுப்பு வழங்கப்படாது விலைகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | சந்தையில் காணப்பட்ட உச்ச அளவு சில்லறை விலைகளுடன் ஒப்பீடு செய்த போது இரண்டு வழங்குனர்களுக்கு ரூபா 1.47 மில்லியன் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | கேள்வி கோரும் போது கிடைக்கும் விலைகளை அடிப்படையாகக் கொண்டு பெறுகை நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டதுடன் சந்தையில் காணப்படுகின்ற உச்ச அளவு சில்லறை விலைகள் தொடர்பாக வர்த்தமானியின் மூலம் அல்லது ஏனைய ஆவணங்களின் மூலம் தேடிக்கண்டு பிடிக்க முடியாததனால் அரசாங்கத்திற்கு உச்ச அளவு நலன்கள் கிடைக்கும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆகக்குறைந்த விலைக்கு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன. | |
| (ஐ) | குருணாகல் போதனா வைத்தியசாலையினால் மீளாய்வாண்டில் 02 சந்தரப்பங்களின் போது ஒரே வழங்குனரிடமிருந்து ரூபா 9.10 மில்லியன் மொத்த கிரயமான எழுதுகருவிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | எழுதுகருவித் துறையுடன் தொடர்பு அற்ற வழங்குனராகிய கணனி, மற்றும் துணைக் கருவிகள் வழங்குனர்கள், வைத்தியசாலையின் தேவைப்பாட்டினை நிறைவேற்றும் இயலுமை இல்லாத வழங்குனர்கள், மற்றும் போலியான வழங்குனர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தார்கள் என்பது எழுதுகருவி வழங்குனர்களை பதிவு செய்யும் பதிவேட்டினைப் பரீட்சித்த போது மற்றும் துறைசார்ந்த பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. | இது சம்பந்தமாக முறையான விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்புக் கூறக் கூடிய நபர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அவ்வாறு பதிவு செய்த வழங்குனர்களிடமிருந்து கேள்விகள் கோரி மீளாய்வாண்டின் போது 02 சந்தர்ப்பங்களில் ஒரே வழங்குனரிடமிருந்து ரூபா 9.10 மில்லியன் மொத்த கிரயமான எழுதுகருவிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவ்வாறே முதலாவது பெறுகையின் போது கிடைத்திருந்த 03 விலை மனுக்களில் 02 விலை மனுக்களும் இரண்டாவது பெறுகைளின் போது கிடைத்திருந்த 03 விலை மனுக்களில் 01 விலைமனுவும் எழுதுகருவி துறையுடன் தொடர்பற்ற கணனி மற்றும் துணைக் கருவிகள் வழங்குனரிடமிருந்து கிடைத்திருந்தமை மற்றும் இன்னுமொரு விலைமனு போலியான விலை மனு என்பது உறுதிப்படுத்தப்பட்டமையினால் இப்பெறுகையானது அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.12, 2.11.2, 3.4.2(அ)(i), 3.4.3(இ), 4.2, 5.6.1(அ), 6.1, 6.3, 6.3.6, 8.9.1(ஆ) ஆகிய வழிகாட்டிகளுக்கு இணங்கியிருக்காமையினால் போட்டி ரீதியான ஆகக் குறைந்த விலையைப் பெற்றுக் கொள்வதற்கு இருந்த இயலுமை இழக்கப்பட்டிருந்தது என்பதுவும் பெறுகை வழிகாட்டியின் நம்பிக்கைத் தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை பாதுகாக்கப்பட்டிருக்கவில்லை என்பதுவும் அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. பல்வேறு வகையான பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காக கேள்விகள் கோரும் போது கிடைத்த விலை மனுக்களை அடிப்படையாக கொண்டு பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆகக்குறைந்த விலைக்கு அல்லது மதிப்பீட்டுச் சபையின் அறிக்கைகளிலிருந்து கிடைக்கின்ற சிபார்சுகளின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு உச்ச அளவு நலன்களை வழங்கும் வகையில் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இவ்வாறு கேள்வி நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது கிடைக்கின்ற விலை மனுக்களை ஒவ்வொறு நிறுவனத்திற்கும் சென்று ஒப்பீடு செய்து பொருட்களை கொள்வனவு செய்தல் இடம்பெற்றிருக்காததனால் பொருட்களின் விலைகளின் மாற்றங்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு இயலாதிருந்தது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கணக்காய்வு உத்தியோகத்தர்களால் வரையறுத்த அரச வியாபார (நானாவித) கூட்டுத் தாபனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட விலைகளுடன் ஒப்பீடு செய்த போது வழங்குனருக்கு ரூபா 3.60 மில்லியன் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது எனவும் ஏனைய தனியார் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட விலைகளுடன் ஒப்பீடுசெய்த போது வழங்குனருக்கு ரூபா 2.71 மில்லியன் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது எனவும் சந்தையில் காணப்படுகின்ற உச்ச அளவு சில்லறை விலைகளுடன் ஒப்பீடு செய்த போது வழங்குனருக்கு ரூபா 778,417 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது எனவும் அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு உத்தியோகத்தர்களால் உரிய நிறுவனங்களுக்குச் சென்று விலைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தும் அந்த நிறுவனங்களிடமிருந்து அந்த விலைக்கு பொருட்களை வழங்கும் பொறுப்பு வழங்கப்படாது விலைமனுக்கள் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளன. கேள்விகள் கோரும் போது கிடைக்கின்ற விலை மனுக்களை அடிப்படையாகக் கொண்டு பெறுகை நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டதுடன் சந்தையில் காணப்படுகின்ற உச்ச அளவு சில்லறை விலைகள் தொடர்பாக வர்த்தமானியின் மூலம் அல்லது ஏனைய ஆவணங்களின் மூலம் தேடிப்பார்க்க முடியாததனால் அரசாங்கத்திற்கு உச்ச அளவு நலன்கள் கிடைக்கும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆகக்குறைந்த விலைக்கு பொருட்களைக் கொள்வனவு செய்தல் இடம்பெற்றுள்ளது. | - மேற்படி - |
| (ஒ) | குருணாகல் போதனா வைத்தியசாலையினுள் புதிய எரியூட்டல் நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 2020 யூலை 24 ஆந் திகதிவேலை ஆரம்பிக்கும் முற்பணமாக ரூபா 3.88 மில்லியன் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | 1988 இன் 56 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் 23Z பிரிவின் பிரகாரம் 1993 யூன் 24ஆந் திகதிய 772/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க பெற்றுக் கொள்ளப்பட வேண்டியிருந்த சுற்றாடல் அங்கீகாரம் இந்நிர்மாணத்திற்காக பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. | 1988 இன் 56 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றாடல் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ii) | இந்த எரியூட்டல் நிலையத்தின் மூலம் ஒரு மணித்தியாலத்திற்கு கழிவுப் பொருள் 75 கிராமிலிருந்து 150 கிலோகிராம் அளவில் எரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தக்காரர் இந்த எரியூட்டல் நிலையத்தின் கிரயத்திற்குச் சமனான செலவில் 2020 யூன் மாதத்தின் போது தம்புள்ளை மாநகர சபையில் பொருத்தப்பட்டுள்ள எரியூட்டல் நிலையத்தின் மூலம் மருத்துவ கழிவுப் பொருட்கள் 80 கிலோ கிராமிலிருந்து 100 கிலோ கிராம் அளவில் எரிப்பதற்கு 2½ மணித்தியாலத்திலிருந்து 3 மணித்தியாலம் வரையான காலம் எடுப்பதாக வெளிப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க நிர்மாணிப்பதற்கு எதிர்பார்த்த எரியூட்டல் நிலையத்தின் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு முடியுமா என்பது | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. உரிய நிறுவனம் வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு எதிர்பார்த்த எரியூட்டல் நிலையம் தொடர்பான விபரக் குறிப்பில் குறிப்பிட்ட ஆவணத்தின் உச்சளவு எரித்தலின் இயலளவு ஒரு மணித்தியாலத்திற்கு 100 கிலோகிராம் ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே வழங்கப்பட்டுள்ள விலை மனு நிபந்தனைகளில் குறிப்பிட்ட எரித்தல் இயலளவு இந்த அளவுடன் பொருத்துவதனால் முன்னைய தகமைகள் சம்பந்தமான கடிதத்தை மாத்திரம் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதுவரை இடம்பெற்ற கேள்வி நடவடிக்கைகளின் போது துறைரீதியான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு முன்னைய தகமைகள் தொடர்பாக பரீட்சிப்புக்கள் | இந்த எரியூட்டல் நிலையத்தின் செயலாற்றல் தொடர்பாக சுய பரீட்சிப்புக்களை மேற்கொண்டு கொடுப்பனவு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக நியாயமான ஐயப்பாடு காணப்படுகின்றது. | இடம்பெறவில்லை. | |
| (ஓ) | மொத்த கிரய மதிப்பீடு ரூபா 19.28 மில்லியன் தொகையான மாத்தறை பொது வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக் கூடம் 'B' இற்காக புதிதாக ஒரு பகுதியை சேர்த்துக் கொள்ளும் ஒப்பந்தம் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | 2016 ஆம் ஆண்டின் போது இந்த ஒப்பந்தத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 04 கேள்வி மனுக்களுக்கு மத்தியில் கடந்த ஆண்டின் மேற்கொள்ளப்பட்ட வேலை தொடர்பாக உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக ரூபா 17.90 மில்லியன் தொகையான முதலாவது ஆகக் குறைந்த கேள்வி பரீட்சிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படாத ரூபா 18.20 மில்லியன் தொகையான இரண்டாவது ஆகக்குறைந்த கேள்வி மனுவைச் சமர்ப்பித்த கேள்விதாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. | உறுதியாகக் குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டு வரையறைகளை அடிப்படையாகக் கொண்டு கேள்வி மனுக்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் இந்த மதிப்பீட்டு வரையறைகள் அனைத்தும் கேள்வி மனுவை சமர்ப்பித்தவர்கள் சம்பந்தமாக சமமாக தொடர்புபடுத்தப் படுதல் வேண்டும். இது தொடர்பான பரிசோதனையை மேற்கொண்டு நிதி நட்டம் சம்பந்தமாக பொறுப்புக்கூறக் கூடிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்த பெறுமதியில் 60 சதவீதத்திற்கு மேற்பட்ட வேலைகள் | ஒப்பந்த நிறுவனம் ஆலோசனை நிறுவனத்திற்கு விலைப் பட்டியலைச் சமர்ப்பித்ததன் பின்னர் கொடுப்பனவு | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் |

| | | | |
|---|---|---|---|
| | முடிவுறுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மாத்திரம் பகுதிக் கொடுப்பனவுகள் செய்யப்படலாம் என்ற போதிலும் 2017 நவம்பர் 13 ஆந் திகதி வரை ஒப்பந்தப் பெறுமதியில் 13 சதவீதமான செய்த வேலை அளவுக்காக ரூபா 2.41 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | செய்வதற்காக வைத்திய சாலைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கிணங்க இடைக்காலத்தில் விலைப் பட்டியல்களுக்குச் செலுத்துவது சம்பந்தமாக ஆலோசனை நிறுவனத்திடம் விசாரிக்கப்பட்டது. வேலைத்தளத்தில் மேற்கொள்ளப்படுகின்ற வேலைகளில் 60 சதவீதம் அளவானவற்றை கணித்து அதற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதனால் உடன்படிக்கையின் விளக்கம் அதுவாக இருக்க வேண்டுமென வாய் மூலம் தெரிவிக்கப்பட்டது. எனினும் எதிர்கால ஒப்பந்த நடவடிக்கைகளில் பகுதிக் கொடுப்பனவுகளைச் செய்யும் போது உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. | அதற்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர் கள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2021 மார்ச் 31 ஆந் திகதி வரை ஒப்பந்தக்காரர் வேலையைக் கைவிட்டுச் சென்று 02 ஆண்டுகளை மிகைத்திருந்த போதிலும் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.11 ஆம் பந்தியின் பிரகாரம் ஒப்பந்தக்காரர் சம்பந்தமாக மற்றும் செயற்திட்டத்தின் மிகுதி வேலைகளை விரைவாக நிறைவேற்றுவது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதனால் அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட வேண்டிய மிகுதி நடவடிக்கைகள் தொடர்பாக சுகாதார அமைச்சின் பிரதான சட்ட உத்தியோகத்தரிடம் 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி ஆலோசனை வேண்டப் பட்டிருந்த போதிலும் அதற்காக இதுவரை பதில் கிடைத்திருக்கவில்லை. நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | (வழங்கல்) வேண்டுதல் விடுக்கப்பட்டிருந்தது. இதுவரை நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்காததனால் மிகுதி வேலைகளைச் செய்ய முடியாதுள்ளது. | |
| (iv) | உடன்படிக்கையை இரத்துச் செய்து 2018 ஒக்தோபர் 29 ஆந் திகதி செயலாற்றல் பிணையை பணமாக்கி பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 910,333 பணம் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் இப்பணம் அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்கப்படுதல் வேண்டும். |
| (ஔ) | அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்குத் தேவையான ICU Ventilators (Adult & Pediatric) இயந்திரங்களின் 11 அலகுகள் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவினால் ரூபா 23,320,000 செலவு செய்து திறந்த கேள்வி மனுக்கோரல் பெறுகை நடைமுறையினைப் பின்பற்றி மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இப்பெறுகைக்காக கேள்வி மனுக்களைச் சமர்ப்பித்த 7 கேள்வி மனுதாரர்களுக்கு மத்தியில் ஆகக்குறைந்த கேள்வி மனுவினைச் சமர்ப்பித்திருந்த கம்பனிக்கு பெறுகையை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக மேற்கொண்ட கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | ஆகக் குறைந்த கேள்வி மனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கேள்வி மனு ஆவணங்களின் பிரகாரம் ஐக்கிய அமெரிக்க குடியரசில் தயாரிக்கப்பட்ட Oricare V8800 ICU Ventilators களை வழங்குவதற்காக கேள்வி மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது மேலும் தேசிய ஔடத ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையினால் இக்கேள்வி மனுதாரருக்கு வழங்கப்பட்டிருந்த இயந்திரங்களைப் பதிவு செய்தல் சான்றிதழுக்கும் இறக்குமதி உத்தரவுப் பத்திரத்திற்கும் இணங்க ஐக்கிய அமெரிக்க குடியரசில் தயாரிக்கப்பட்ட Oricare V8800 ICU Ventilators களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் அந்த கேள்வி மனுதாரரினால் சமர்ப்பித்திருந்த Manufacturer’s Authorization இற்கு இணங்க அந்த இயந்திரத்தினை உற்பத்தி செய்த நாடு சீனாவாகும். அதற்கிணங்க ஐக்கிய அமெரிக்க குடியரசில் தயாரித்த Oricare V8800 ICU Ventilators களை வழங்குவதற்காக கேள்வி மனுவைச் சமர்ப்பித்ததன் பின்னர் இறக்குமதிக்காக கேள்வி மனுதாரருக்கு அனுமதி கிடைத்திருக்காத சீனாவில் தயாரித்த ICU Ventilators (Adult & Pediatric) இயந்திரங்களின் 11 அலகுகள் 2020 நவம்பர் 30 ஆந் திகதி உயிரியில் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. இப்பெறுகைக்குரிய ICU Ventilators (Adult & Pediatric) இயந்திரத்திற்காக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையினால் வழங்கப்பட்ட பதிவு செய்தல் சான்றிதழ் மற்றும் இறக்குமதி உத்தரவுப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அவற்றில் தெளிவாக தயாரித்த நாடாக ஐக்கிய அமெரிக்க குடியரசு குறிப்பிடப்பட்டது. இந்த இயந்திரங்களின் உற்பத்தி நிலையம் சீனாவில் அமைந்திருந்தும் அதன் தாய்க் கம்பனி ஐக்கிய அமெரிக்க குடியரசு என தயாரிப்புச் சான்றிதழுக்கு இணங்க தெளிவானதுடன் களஞ்சியத்திற்கு கிடைத்த இயந்திரங்களின் பின்பக்கத்தில் மிகவும் தெளிவாக தயாரிப்பு நாடு ஐக்கிய அமெரிக்க குடியரசு என குறிப்பிடப்பட்டுள்ளது. | இது சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்புக் கூறக் கூடிய தரப்பினர்கள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மருத்துவ பொறியியிலாளர் சேவை பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) | ஆகக்குறைந்த கேள்வி மனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி மனு ஆவணத்தில் குறிப்பிட்ட ICU Ventilators (Adult & Pediatric) பொருள் விபரக் குறிப்புடன் தயாரித்த நாடு ஐக்கிய அமெரிக்க குடியரசு அல்லது சீனாவாகக் காட்டப்பட்டிருந்தது. தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையினால் இக்கேள்வி மனுதாரரின் பெயரில் ஐக்கிய அமெரிக்க குடியரசில் தயரித்த Oricare ICU Ventilators பதிவு செய்யப்பட்டிருந்ததினால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மதிப்பீடு செய்யும் போது இயந்திரத்தினை தயாரித்த நாடு ஐக்கிய அமெரிக்க குடியரசு அல்லது சீனாவாகக் காட்டப்பட்டிருந்தமை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வழங்கப்பட வேண்டிய இயந்திரம் ஐக்கிய அமெரிக்க குடியரசில் தயாரித்த ஒரு இயந்திரமாக இருக்க வேண்டும் என்பதற்கு கேள்வி மனுதாரரை இணங்கச் செய்வதற்கு அல்லது கேள்வி மனுவை நிராகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தது. எனினும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அவ்வாறு நடவடிக்கை எடுக்காது ஆகக்குறைந்த கேள்விதாரருக்கு கேள்வியை வழங்குவதற்கு சிபார்சு செய்திருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. Oricare Inc கம்பனி ஐக்கிய அமெரிக்க குடியரசின் ஒரு கம்பனி ஆவதுடன் அதன் ஒரு உப தொழிற்சாலை சீனாவில் செயற்பட்டு வருகின்றது. இந்த Oricare ICU Ventilators சீனாவில் அமைந்துள்ள தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் Oricare Inc தாய் கம்பனியின் தொழில்நுட்பத்திற்குச் சமமானதாகும். Oricare V8800 Ventilators இயந்திரத்தின் மாதிரியானது சமர்ப்பிக்கப்பட்ட தொழில்நுட்ப விபரக் குறிப்பிற்கு சமமானதாக இருப்பதனாலும் ஏனைய அனைத்து விடயங்களையும் கவனித்துப் பார்த்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு உரிய கேள்வி மனுதாரரிடமிருந்து Oricare V8800 Ventilator இயந்திரத்தினை கொள்வனவு செய்தல் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. | - மேற்படி - |

அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ஐக்கிய அமெரிக்க குடியரசில் தயாரித்த Oricare ICU Ventilators களின் 11 அலகுகளை வழங்குவதற்குப் பதிலாக சீனாவில் தயாரித்த Oricare ICU Ventilators களின் 11 அலகுகளை வழங்குவதற்கு கேள்வி மனுதாரருக்கு வாய்ப்புக்களை வழங்கும் வகையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நடவடிக்கை எடுத்திருந்தது.

(iii) வழங்குனரினால் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவிற்கு 2020 நவம்பர் 30 ஆந் திகதி ICU Ventilator களின் 11 அலகுகள் பொருள் விபரக் குறிப்புக்களுக்கு இணங்கியுள்ளது என பொறியியலாளரினால் பரீட்சித்து இன்வொயிசில் உரிய பொருட்களின் கட்டளை பொருள் விபரக் குறிப்பிற்கு இணங்கியுள்ளது என சான்றுப்படுத்தி 2021 மார்ச் 30 ஆந் திகதி அலுவலக முத்திரை பொறிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டிருந்தது. எனினும் அவ்வாறு பொருள் விபரக் குறிப்புக்களுக்கு இணங்கியுள்ளது என்பது பொறியியலாளரினால் பரீட்சிக்கப்பட்டிருந்தும் அது பற்றி உறுதிப்படுத்துகின்ற வகையில் பொருள் விபரக் குறிப்பினை ஒப்பீடு செய்யும் கூற்று தயாரிக்கப்பட்டு பெறுகைக் கோவையில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.

கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. உயிரியில் மருத்துவ பொறியியலாளர் சேவை பிரிவிற்கு உரிய கட்டளையிடப்பட்ட இயந்திரம் கிடைத்ததன் பின்னர் அவை நிர்ணயிக்கப்பட்ட விபரக் குறிப்புக்களுக்கு இணங்க காணப்படுகின்றதா என்பது உயிரியல் மருத்துவ பொறியியலாளரினால் பரீட்சித்து சான்றுப்படுத்தியதன் பின்னர் இருப்பில் சேர்த்தல் இடம்பெறுகின்றது. அதற்கிணங்க இந்த இயந்திரத்தினை அந்த வகையில் பரீட்சித்துப் பார்த்து சான்றுப்படுத்தியதன் பின்னர் இருப்பில் உள்ளடக்கப்பட்டு Covid 19 சிகிச்சைக்காக வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. எவ்வாறாயினும், பொறியியலாளரால் விபரக் குறிப்புக்களைப் பரீட்சித்து சான்றுப்படுத்தியிருந்தும் கணக்காய்வினால் காட்டப்பட்டுள்ளவாறு

| | | | |
|---|---|---|---|
| | | விபரக் குறிப்புக்களை ஒப்பீடுசெய்யும் கூற்று தயாரிக்கப்படாததனால் எதிர்கால பெறுகைகளின் போது இந்த வகையில் விபரக் குறிப்புக்களை இணக்கம் செய்யும் கூற்றினை பெறுகைக் கோவைக்குள் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (க) | சுகாதார ஊட்டச்சத்து மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சிற்குரிய வைத்தியசாலைகளில் விபத்துக்கள் மற்றும் அவசர சிகிச்சைகளை மேம்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டிற்கான முன்னுரிமைப் பட்டியலின் பிரகாரம் ரூபா 156 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயமான 52 Anesthetic இயந்திரங்களை பெற்றுக் கொள்வதற்கான பெறுகை சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | இப்பெறுகைக்காக பெறுகை நடைமுறை கோவையின் 4.2.3 ஆம் பந்தியின் பிரகாரம் எடுக்கக் கூடிய காலத்தினை மிகைத்து 72 வாரங்கள் அளவான காலம் எடுத்திருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. இப் பெறுகையின் சிக்கலான தன்மை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர்களை ஒன்றாகக் கூட்டும் போது இடம்பெறுகின்ற சிரமம் இதற்கான காரணங்களாகும். | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைக்காக எடுக்கக்கூடிய நியாயமான காலத்தினுள் பெறுகை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | ஏழு கேள்வி மனுதாரர்களுக்கு மத்தியில் ஆகக்குறைந்த கேள்வி மனுதாரருக்கு இக்கேள்வி | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. | உறுதியாகக் குறிப்பிட்ட மதிப்பீட்டு வரையறைகளை |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்தது. தொழில்நுட்ப விபரக் குறிப்புக்களில் Anesthetic Ventilator வயதான பிள்ளைகளைப் போல் புதிதாகப் பிறந்த பிள்ளை நோயாளர்களுக்கும் பொருத்தமாக இருக்க வேண்டுமெனத் தெரியப்படுத்தியிருந்தும் தெரிவு செய்யப்பட்டிருந்த தகைமை பெற்ற கேள்வி மனுதாரர் சமர்ப்பித்திருந்த கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்ட Oricare A9800 Anesthetic இயந்திரத்தில் 2014 ஆகஸ்ட் 07 ஆந் திகதி வழங்கப்பட்ட சேவைக் கையேட்டில் வழங்கப்படுகின்ற இயந்திரம் வயது வந்த நோயாளர்களுக்குப் பொருத்தமானது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு இயந்திரத்தின் சேவை கையேட்டில் குறிப்பிட்ட தகவல்களைப் பரீட்சிக்காது முறையான தொழில்நுட்ப விபரக் குறிப்புக்களுக்கு இணக்கமற்ற கேள்வி மனுவைச் சமர்ப்பித்த கேள்விதாரர் தகமை பெற்ற கேள்விதாரராக தெரிவு செய்யப்பட்டிருந்தார். | | அடிப்படையாகக் கொண்டு கேள்வி மனு மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் இந்த மதிப்பீட்டு வரையறைகள் அனைத்தும் கேள்வி மனுதாரர் சம்பந்தமாக சமமாக தொடர்புபடுத்தப் படல் வேண்டும். |
| (iii) | தகைமை பெற்ற கேள்வி மனுதாரர் சமர்ப்பித்த NMRA சான்றிதழின் பிரகாரம் தயாரித்த நாடாக ஐக்கிய அமெரிக்க குடியரசு குறிப்பிடப்பட்டிருந்தும் கேள்வி ஆவணங்களின் பிரகாரம் தயாரித்த நாடு சீனா எனக் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க கேள்வி ஆவணங்கள் மற்றும் சமர்ப்பித்த தொடர்புபட்ட | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | ஏனைய ஆவணங்களுடன் இணக்கமற்றிருந்தும் அவை பற்றி கருத்தில் கொள்ளாது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கேள்விதாரருக்கு கேள்வியினை வழங்குதல் சிபார்சு செய்யப்பட்டிருந்தது. | | |
| (கா) | சுகாதார அமைச்சின் 2018 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி திட்டத்தில் ரூபா 150 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த மஹரகம அபேக்ஸா வைத்தியசாலைக்கு 1.5T MRI ஸ்கேனர் இயந்திரத்தினை வழங்குதல், நிறுவுதல், பராமரித்தல் என்பன தொடர்பான பெறுகை சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | மஹரகம அபேக்ஸா வைத்தியசாலையின் தேவைப்பாடாக 3T MRI ஸ்கேனர் இயந்திரம் குறிப்பிடப்பட்டிருந்தும் வைத்தியசாலையின் தேவைப்பாட்டினை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாது 1.5T MRI ஸ்கேனர் இயந்திரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு உத்தியோகத்தர்களுடன் இணங்கவில்லை. இது தொடர்பாக வைத்தியசாலை பணிப்பாளருடன் மேற்கொண்ட தொலைபேசி கலந்துரையாடலின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் 3T MRI இயந்திரத்திற்குப் பதிலாக 1.5T MRI இயந்திரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | மிகவும் முக்கியமான இவ்வாறான இணக்கப்பாட்டினை எழுத்து மூலம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| (ii) | தொடக்க பெறுகை நடவடிக்கைகளுக்காக பெறுகை நடைமுறைக் கோவையினை 4.2.3 ஆம் பந்தியின் பிரகாரம் எடுக்கக் கூடிய காலத்தினை மிகைத்து 96 வாரங்கள் அளவான காலம் எடுத்திருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. அமைச்சரவை நியமித்த நிரந்தர பெறுகைக் குழுவினால் மேற்கொண்ட பெறுகை என்பதனால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினை நியமிப்பதற்கு குறிப்பிடத்தக்க காலம் | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைக்காக எடுக்கக்கூடிய நியாயமான காத்தினுள் பெறுகை |

| | | | |
|---|---|---|---|
| | | எடுத்தமை, 02 சந்தர்ப்பங்களின் போது தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையிடமிருந்து தெளிவுபடுத்தலைப் (clarification) பெற்றுக் கொள்ளவேண்டி ஏற்பட்டமை, Covid 19 இன்னல் நிலைமையின் காரணமாக தொழில்நுட்பக் குழு அங்கத்தவர்களை ஒன்று சேர்க்கும் போது ஏற்பட்ட சிரமம் மற்றும் இயந்திரத்தை நிறுவும் இடத்தின் விபரத்தை பெற்றுக் கொள்வதற்குத் தமாதித்தமை ஆகிய விடயங்களின் காரணமாக குறிப்பிடத்தக்க அளவு தாமதம் ஏற்பட்டது. | நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2018 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் இப்பெறுகைக்காக ரூபா 150 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் தெரிவு செய்யப்பட்ட கேள்வி மனுதாரரின் கேள்வி ரூபா 281 மில்லியனாகும். அது ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினை விட 131 மில்லியனால் அதிகரித்த பெறுமதியாக இருந்ததுடன் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.3.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் விலையுயர்வு மற்றும் ஏனைய விடயங்களைக் கருத்தில் கொண்டு மொத்த கிரய மதிப்பீடு நாளதுவரையாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. மேலே குறிப்பிட்ட தாமதத்தின் காரணமாக அதிக காலம் எடுத்துள்ளது. அக்காலத்தினுள் டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளதால் இதற்காக அதிக பணம் செலவு செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் மொத்த கிரய மதிப்பீட்டினை நாளதுவரையாக்குவதற்கும் தாமதத்தினை தவிர்த்துக் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | கேள்வி கோரல் ஆவணத்திற்கு இணங்க கேள்விதாரர் கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டியிருந்த தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டிருக் காமையானது பெறுகை நடைமுறைக் கோவையின் 7.8 ஆம் பந்தியின் பிரகாரம் பாரிய மீறலாக இருப்பதனால் தொடக்க கேள்வி மனு பரீட்சிப்பின் போதே கேள்வி மனு நிராகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கேள்வி வழங்குவதற்காக இக்கேள்வி மனுதாரரினால் கேள்வி மனு சிபார்சு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. பெறுகைக் குழுவினால் தேசிய ஔடத ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சிபார்சுகளுக்கு இணங்க இக்கேள்விதாரரினால் இந்த இயந்திர மாதிரிகளுக்காக கேள்வி மனுக்கள் கோரும் திகதியான 2018 நவம்பர் 29 ஆந் திகதிக்கு முன்னர் அதாவது 2018 நவம்பர் 28 ஆந் திகதி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு உரிய சான்றிதழினைப் பெற்றுக் கொள்வதற்காக தேவையான ஆவணங்கள் தேசிய ஔடதங்கள் அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறே உரிய மாதிரிக்காக Sample import license பெற்றுக் கொள்ளப்பட்டது. இக்கேள்வி மனுதாரர் ஆகக் குறைந்த விலை மனுவைச் சமர்ப்பித்த கேள்விதாரராகும். சமர்ப்பித்த இயந்திர மாதிரியில் தொழில்நுட்ப விபரக்குறிப்புக்களுடன் பாரிய முரண்பாடுகள் இருக்கவில்லை. ஏனைய கேள்விதாரர்களுக்கு மத்தியில் ரூபா 18 மில்லியன் ஆகக் குறைந்த விலைமனுவைச் சமர்ப்பித்திருந்ததுடன் 2018 திசெம்பர் 26 ஆந் திகதியிலிருந்து செல்லுபடியாகும் சான்றிதழினைப் பெற்றுக் கொண்டிருந்ததன் காரணமாக இக்கேள்விதாரருக்கு கேள்வியினை வழங்குவதற்குள்ள | உறுதியாகக் குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டு வரையறைகளை அடிப்படையாகக் கொண்டு கேள்வி மனுக்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் இம்மதிப்பீட்டு வரையறைகள் அனைத்தும் கேள்வி மனுதாரர்கள் சம்பந்தமாக சமமாக தொடர்புபடுத்தப் படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இயலுமை தொடர்பாக சட்டரீதியான ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளும் நிபந்தனைக்கு உட்பட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு இக்கேள்வி மனுவை சிபார்சு செய்திருந்தது. | |
| (கி) | Defibrilator (Nihon Kohden TEC-8352K) துணைக் கருவிகளின் 1035 அலகுகளைக் கொள்வனவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டு அவற்றில் 200 அலகுகள் ரூபா 9.17 மில்லியனுக்கு கொள்வனவு செய்தல் சம்பந்தமாக 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட பெறுகைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | இப்பெறுகையானது Defibrillator துணைக் கருவிகளின் 200 அலகுகளைக் கொள்வனவு செய்வதற்கானதாக இருந்த போதிலும் அவற்றில் 102 துணைக்கருவிகள் மாத்திரம் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்ததுடன் 2021 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரை அவற்றில் 88 துணைக் கருவிகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க துணைக் கருவிகள் தேவைப்பாட்டினை முறையான கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது கொள்வனவு செய்யப் பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. | தேவைப்பாட்டினை உறுதியாக இனங்கண்டு பெறுகை மேற்கொள்ளப் படுதல் வேண்டும். |
| (ii) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.3.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் கேள்வியை திறக்கும் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. உள்நாட்டு | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டியின் |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்பு பெறுகைக் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததனால் பெறுகைக்குழு அங்கீகரிக்கின்ற இரண்டு அங்கத்தவர்களை உள்ளடக்கிய கேள்வியை திறக்கும் குழுவினால் கேள்வி திறக்கப்பட வேண்டிய போதிலும், இப்பெறுகைக்கான கேள்வியைத் திறத்தல் 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதி உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவின் நிதி பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் 2018 ஆகஸ்ட் 27 ஆந் திகதி மீண்டும் கோரப்பட்ட கேள்வி திறக்கும் குழுவிற்கு பெறுகைக் குழுவின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | முகவர்களிடமிருந்து மாத்திரம் கேள்வி மனுக்களை கோரும் சந்தர்ப்பத்தில் கேள்வி திறக்கும் சந்தர்ப்பத்திற்கு கேள்விதாரர்கள் பங்குபற்றுவதில்லை. இதுவரை உதிரிப்பாகங்கள் மற்றும் துணைக் கருவிகளின் கேள்வி மனுக்கள் நிதி பணிப்பாளரினால் திறக்கப்பட்டன. தற்பொழுது இந்நிலைமையை மாற்றி கேள்வியைத் திறப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் கேள்வி மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன் பொறியியலாளரினால் சிபார்சு மாத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.3 ஆம் பிரிவின் பிரகாரம் கேள்வி மதிப்பீடு ஒரு ஆலோசகருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் இது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டல்களின் கீழ் செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த Defibrillator துணைக் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. உள்நாட்டு முகவரிடமிருந்து மாத்திரம் கேள்வி மனு கோரப்பட்டு உதிரிப்பாகங்களையும் துணைக் கருவிகளையும் கொள்வனவு செய்யும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்படாமையானது இதுவரை காணப்பட்ட முறைமையானதுடன் அதற்காக உரிய பொறியியலாளரின் தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொள்ளல் வழக்கமான நடைமுறையாகும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கருவியை கொள்வனவு செய்வது தொடர்பான முதலாவது கேள்வி மதிப்பீட்டின் போது மற்றும் மீண்டும் கோரப்பட்ட கேள்வி மதிப்பீட்டின் போது ஆகிய இரண்டு சந்தர்ப்பங்களிலும் தொழில்நுட்ப குழுவின் அறிக்கையின்றி உயிரியல் மருத்துவ பொறியியலாளர் விலை மதிப்பீட்டினைச் செய்து வழங்குகின்ற சிபார்சுக்கு இணங்க பெறுகைக் குழு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | | |
| (iv) | இப்பெறுகைக்குரிய ஒப்பந்தமானது Defribrillator துணைக் கருவிகளின் 200 அலகுகளை வழங்குவதற்கானதாக இருந்த போதிலும் வழங்குனரினால் 102 துணைக் கருவிகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கையில் ஒப்பந்தத்தை பூரணப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது கிடைத்த பொருட்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. களஞ்சியத்திற்கு பௌதீக ரீதியாக கிடைத்த உதிரிப் பாகங்கள் மற்றும் துணைக் கருவிகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டது. | உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தத்தை முடிவுறுத்தியதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 507(3), 756(1) மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு நிதி ஆண்டின் | | |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் வருடாந்த பொருள் மீளாய்வுச் சபை நியமிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட வேண்டும். இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | மீளாய்வாண்டிற்காக 83 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் பொருள் மீளாய்வுச் சபையானது நிர்ணயிக்கப்பட்ட திகதியில் நியமிக்கப்பட்டிருக்காததுடன் அவற்றில் 06 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட திகதியை விட மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலம் தாமதித்து மீளாய்வுச் சபை நியமிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். இந்த அமைச்சின் கீழுள்ள அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் பொருள் மீளாய்வுச் சபையை நியமிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் தாமதத்தினை தவிர்த்துக் கொள்வதற்காக ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | இச்சுற்றறிக்கையின் 3.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு நிதி ஆண்டின் மார்ச் 15 ஆந் திகதிக்கு முன்னர் கடந்த ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகளை பௌதீக ரீதியாக முடிவுறுத்தி யூன் 15 ஆந் திகதிக்கு முன்னர் பொருள் மீளாய்வு அறிக்கையை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கான பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2021 யூலை 12 ஆந் திகதி வரை 2020 ஆம் ஆண்டிற்காக 22 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் அறிக்கைகள் மாத்திரம் | வருடாந்த பொருள் மீளாய்வு நடவடிக்கைகளை முடிவுறுத்தி நிர்ணயிக்கப்பட்ட திகதியில் அறிக்கைகளை அனுப்புமாறு அனைத்து நிறுவனங்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் காணப்படுகின்ற Covid 19 இன்னல் நிலைமையின் காரணமாக பல நிறுவனங்களின் பொருள் மீளாய்வு நடவடிக்கை தாமதமடைந்திருந்தது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | | |
| (iii) | 12 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் 23 வருடாந்த பொருள் மீளாய்வுகளின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்த பற்றாக்குறைகளின் பெறுமதிகள் கணிக்கப்பட்டிருக்கவில்லை. உரிய பொருட்களை மீண்டும் வழங்குவதற்கு ஏற்படும் செலவுகள் மற்றும் 25 சதவீத திணைக்கள கட்டணம் அறவிடப்பட வேண்டுமென அவதானிப்பு பத்திரங்களில் காட்டப்பட்டிருந்தும் 02 ஆண்டுகளிலிருந்து 12 ஆண்டுகள் வரையான பழைய பற்றாக்குறைகளுக்காக 2021 மார்ச் 29 ஆந் திகதி வரை பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மஹரகம பல் சிகிச்சை நிலையம் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மீளாய்வுக் (பொதுப் பொருட்கள்) அவதானிப்பு பத்திரத்திற்கான பதில்களை வழங்கியிருந்ததனால் மற்றும் அவை ஏற்றுக் கொள்ளக்கூடிய மட்டத்தில் காணப்பட்டதனால் அக்கோவைகள் 2020 ஒக்தோபர் மாதம் மூடப்பட்டுள்ளதனால் இப்பற்றாக்குறைகள் துணைப் பதிவேடுகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. | வெளிப்படுத்தப் பட்ட பற்றாக்குறைகளின் பெறுமதியை கணித்து உரிய பொருட்களை மீண்டும் வழங்குவதற்கு ஏற்படும் செலவுகள் மற்றும் 25 சதவீதமான திணைக்கள கட்டணங்களை விரைவாக அறவீடு செய்தல் வேண்டும். |
| (iv) | அமைச்சினை உள்ளடக்கி 85 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் 2020 ஆம் ஆண்டிற்கான வாகன மீளாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இந்த அமைச்சின் கீழ் காணப்படுகின்ற வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் 2020 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வு நடவடிக்கைகளின் போது வாகனங்கள் தொடர்பான மீளாய்வு நடவடிக்கையும் இடம்பெற்றுள்ளது. ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் 14 வாகனங்கள் மாத்திரம் மீளாய்வு செய்வது சம்பந்தமாக உரிய நிறுவனங்களிடமிருந்து விடயங்களை விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஏடுகளின் மீதிகள் மற்றும் பௌதீக மீதிகள் ஆகிய இரண்டும் மீளாய்வு | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அறிக்கைகளில் பதியப்பட வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | கண்டி தேசிய வைத்தியசாலையின் மற்றும் பேராதனை போதனா வைத்தியசாலையின் மருத்துவ உத்தியோகத்தர்களின் வதிவிடங்களின் தளமாடிகளில் முறையே 3,558 சதுரஅடி, 2,475 சதுரஅடி மற்றும் திறந்த வெளி அரங்கின் நிலப்பரப்பினைப் பயன்படுத்தி அந்த இரண்டு வைத்தியசாலைகளின் பதவியணியினரின் ஒரு சேவை உத்தியோகத்தர் களின் பிள்ளைகளுக்காக மாத்திரம் ஒரு தனியார் நிறுவனத்தினால் ஒரு சிறுவர் பாடசாலையும் பகல்நேர கண்காணிப்பு நிலையமும் பல வருடங்களாக பேணப்பட்டு வந்த போதிலும் அதற்காக முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. அதேபோல் நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களைத் தவிர்த்து ஏனைய எந்தக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் நீண்ட காலமாக பேணப்பட்டு வருகின்ற அழைப்பு கடமைகளை நிறைவேற்றுகின்ற மருத்துவ உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்காக இந்த முன்பள்ளிகள் தற்பொழுதும் தனியார் நிறுவனம் ஒன்றினால் பேணப்பட்டு வருவதுடன் இது அப்போதைய நிருவாக மற்றும் மருத்துவ உத்தியோகத்தர்களின் சங்கங்களுக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வின் மூலம் ஏற்பட்டுள்ளது. | கட்டணத்தை அறவிடாது அரசாங்க ஆதனங்களை வெளித் தரப்பினர்களுக்கு வழங்காதிருப்ப துடன் ஏதாவது வசதியை வழங்கும் போது ஒவ்வொரு சேவையைச் சார்ந்த உத்தியோகத்தர் களுக்கும் ஒரே மாதிரியாக வழங்கப்படுதல் வேண்டும். |
| (இ) | கொவிட்19 வைரஸ் தொற்றியுள்ளது என்ற சந்தேகத்துடனான நோயாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக கண்டி தேசிய வைத்தியசாலையினுள் தனிமைப்படுத்தப்பட்ட வாட்டுத் தொகுதியை நிர்மாணிக்கும் நோக்குடன் ரூபா 771,000 செலவு செய்து 80 ஆண்டுகள் பழைமை வாய்ந்த | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. சார்க் அபிவிருத்தி நிதி மானியமாக 50 அறைகளை உள்ளடக்கிய சகல வசதிகளையும் கொண்ட Covid 19 அவசர சிகிச்சை நிலையத்தை இதன் கீழ் தோற்றுவிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டது. இதற்குரிய செயற்திட்டப் | அகற்றப்பட்ட பொருட்களை தொழில்நுட்ப உத்தியோகத்தரி னூடாக சரியாகப் பரீட்சித்து பொறுப்பேற்பதற்கும் உடைந்த பொருள் பதிவேட்டில் உள்ளடக்கு வதற்கும் நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | வைத்தியசாலை பணிப்பாளரின் உத்தியோகபூர்வ இல்லம் 2020 மே 15 ஆந் திகதியளவில் உடைத்து அகற்றப்பட்டிருந்த போதிலும் 2020 செப்தெம்பர் 22 ஆந் திகதி வரை தனிமைப்படுத்தப்பட்ட வாட்டுத் தொகுதியை நிர்மாணிப்பதற்குத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு உடைத்து அகற்றப்பட்ட கட்டிடத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட கூரை ஓடுகள், யன்னல்கள், மரங்கள், செவிலித் தகடுகள் மற்றும் பல்வேறு பொருத்திகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய முறைமை தொடர்பாக ஒப்பந்தக் காரருடன் இணக்கப்பாட்டிற்கு வந்திருக்காததனால் அந்த அகற்றிய பொருட்களை தொழில்நுட்ப உத்தியோகத்தரினூடாக சரியாகப் பரீட்சித்து பொறுப்பேற்பதற்கு மற்றும் உடைந்த பொருள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரேரணையானது சுகாதார அமைச்சு மற்றும் நிதி அமைச்சு சிபார்சுடன் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்காக சார்க் அபிவிருத்தி நிதியத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அது தொடர்பான உத்தியோகபூர்வ வங்கி கணக்கினைத் திறப்பதற்கான அங்கீகாரம் திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து 2021 யூன் 16 ஆந் திகதிகிடைத்துள்ளதுடன் மிகவும் குறுகிய காலத்திற்குள் அந்த வேலை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஈ) | நில வாடகையாக எதுவித கட்டணமும் அறவிடப்படாது 01 ஆண்டிற்கும் 13 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக 04 வணிக நிறுவனங்கள் செயற்படுவதற்கு பொலன்னறுவை வைத்திசாலை நிலத்தில் இடவசதிகள் வழங்கப்பட்டிருந்தன. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். வைத்தியசாலை பதவியணியினருக்கும் நோயாளிகளுக்கும் வசதிகைள வழங்குதலும் பதவியணியினர்களின் நகர்வினை தடுக்கும் ஒரு நடவடிக்கையாக மற்றும் வைத்தியசாலையினுள் சிறப்பாகவும் வினைத் திறனாகவும் நோயாளர்களுக்கான | கட்டணத்தை அறவீடு செய்யாது அரசாங்கத்தின் ஆதனங்களை வெளித்தரப்பினர் களுக்கு வழங்காதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சிகிச்சை சேவைகளைப் பேணுவதற்காகவும் வைத்தியசாலை நிலத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இந்த வெளியக சேவை நிறுவனங்களுக்காக உரிய மதிப்பீட்டுப் பெறுமதிக்கு நேரொத்ததாக முறைப்படியாக பணத்தை அறவீடு செய்வதற்காக மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்கு மாகாண மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் அந்த அறிக்கையை பெற்றுக் கொள்வதிலுள்ள தாமதத்தின் காரணமாக கட்டணங்களை அறவீடு செய்தல் தாமதமடைந்துள்ளது எனவும் மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்வதனைத் துரிதப்படுத்துவதற்காக தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (உ) | மாகாண சுகாதார சேவை திணைக்களத்தின் கீழ் காணப்பட்ட அனுராதபுரம் போதனா வைத்தியசாலை 2006 ஆம் ஆண்டின் போது மத்திய அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டதுடன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வைத்தியசாலை காணி உறுதியாக இனங்காணப்பட்டு நில அளவையாளர் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. காணி தொடர்பாக முறையான திட்டமின்றி பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதனால் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான வாய்ப்புக்கள் போதியளவில் இல்லை என்பது | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. 2006 ஆம் ஆண்டில் இந்த வைத்தியசாலை மத்திய அரசாங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் உறுதியாக வைத்தியசாலை காணியை இனங்காண்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக நில அளவையாளர் திட்டத்தினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. கழிவுநீர் முறைமை அமைந்துள்ள வைத்தியசாலை காணியில் குடியிருக்கின்ற அத்துமீறிய குடியிருப்பாளர்களை | வைத்தியசாலை காணியை உறுதியாக இனங்கண்டு நில அளவையாளர் திட்டத்தினைத் தயாரித்து முறையான திட்டத்துடன் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது. மேலும் கழிவுநீர் முறைமை அமைந்துள்ள வைத்தியசாலைக் காணியின் ஒரு பக்கத்தில் குடியிருக்கின்ற அத்துமீறிய குடியிருப்பாளர்களை அப்புறப்படுத்துவதற்கு இவ்வறிக்கைத் திகதி வரையும் முடியாதிருந்ததுடன் சுகாதாரக் காரணங்களின் அடிப்படையில் வைத்தியசாலை கழிவுநீர் முறைமைக்காக பரிமாற்று வலயத்தின் தேவைப்பாடு காணப்படுகின்ற போதிலும் இடவசதி தொடர்பான பிரச்சினையின் காரணமாக அதற்கான பரிகாரத்தினை ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது. | அகற்றி காணியை வைத்தயசாலைக்கு ஒப்படைப்பதற்காக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக வெளியேற்றும் கட்டளை வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க கிழக்கு நுவரகம பலாத பிரதேச செயலகத்தினால் காணியைப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரிவிற்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் கழிவுநீர் முறைமைக்காக பரிமாற்று வலயத்தின் தேவைப்பாட்டை தெரிவித்து ஒத்துழைப்பினை வழங்குமாறு வடமத்திய மாகாண காணி ஆணையாளருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | அவுஸ்திரேலிய கடன் மற்றும் உள்நாட்டு கடன் உதவியின் கீழ் சுகாதார அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட அரசாங்க வைத்தியசாலைகளில் மருத்துவ கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் மூலம் 2018 ஆம் ஆண்டின் போது குருணாகல் போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்த ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் 0.71 பெறுமதியான மெடாமைசர் இயந்திரம் ஒரு ஆண்டு காலம் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொண்டதன் பின்னர் இவ்வறிக்கைத் திகதி வரை செயற்படாது காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. அரசாங்க வைத்தியசாலைகளின் மருத்துவ கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக வழங்கப்பட்ட இந்த இயந்திரத்தினை நிறுவி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் இயந்திரத்தினை செயற்படுத்தும் போது வெளியாகும் துர்வாடை சம்பந்தமாக பல்வேறு நிறுவனங்களினால் எதிர்ப்புக்களைத் தெரிவித்து கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க அதனைப் பேணுவது சம்பந்தமாக நகர சபையின் சுற்றாடல் பிரிவும் எதிர்ப்பினை | இச் செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்த உபகரணங்களைப் பயன்படுத்துதல் சம்பந்தமாக உருவாகியுள்ள சிக்கல்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வெளியிட்டுள்ளதனால் இந்த இயந்திரத்தினால் கழிவுப் பொருட்களை எரித்தலை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டி ஏற்பட்டது. இந்த இயந்திரத்தினால் அப்புறப்படுத்தப்படும் கழிவுப் பொருட்களை வெளிப்படுத்தும் நடைமுறை அறிமுகப் படுத்தப்பட்டிருக்கவில்லை. அக்கழிவுப் பொருட்களை நகர சபைக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் நகர சபையும் அக்கழிவுப் பொருட்களை பொறுப்பேற்பதனை நிராகரித்திருந்தது. சுகாதார அமைச்சு செலவு செய்து இந்த இயந்திரத்தை வைத்தியசாலைக்கு வழங்கியிருந்தும் எதிர்கால பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் செயற்படுத்துதல் சம்பந்தமாக பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக தெளிவான அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்காததுடன் நிர்மாணங்கள் மேற்கொண்ட நிறுவனங்களும் முறைப்படியான ஒப்படைத்தலை மேற்கொண்டிருக்கவில்லை. | |
| (எ) | அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள 16 நிறுவனங்களினால் மாத்திரம் சமர்ப்பிக்கப் பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் ரூபா 22.27 மில்லியன் கிரயமான 18 மோட்டார் வாகனங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் உத்தியோக பூர்வ இல்லங்கள் என்பனவும் கிரயங்கள் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. இத்தகவல்கள் 57 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய தகவல்களாகும். அதன் காரணமாக இத்தகவல்களை விரைவாக வழங்குமாறு | ஒட்டுமொத்த வைத்தியசாலை முறைமைக்குள் காணப்படுகின்ற விளைவற்ற மற்றும் குறைந்த பயன்பாட்டிற்கு உட்படுகின்ற சொத்துக்களை இனங்காண்பதற்கும் அச் சொத்துக்களை |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பான தகவல்களைக் குறிப்பிடாத 13 மோட்டார் வாகனங்கள் இயந்திரங்கள், உபகரணங்கள் என்பனவும் ஆக்கபூர்வமாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்தாது காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. 38 நிறுவனங்களால் ஆக்கபூர்வமாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் 2021 மே 15 ஆந் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | அந்நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ள துடன் தற்பொழுது குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டுள்ள உபகரணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | விளைதிறனாகப் பயன்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | அமைச்சினால் 2010 ஆம் ஆண்டிலிருந்து கௌரவ அமைச்சர்களுக்கும், பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கும் மேற்பார்வை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஆலோசகர்களுக்கும் அமைச்சு பதவியணியினர்களுக்கும் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்ட டெஸ்க்டொப் மற்றும் லெப்டொப் கணனிகள், நோட்புக், நடமாடும் தொலைபேசிகள், கமராக்கள் முதலிய உபகரணங்கள் தொடர்பான அனைத்து மற்றும் முழுமையான தகவல்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. 2015 ஆகஸ்ட் மாதத்திலிருந்து பதவி வகித்து 2019 நவம்பர் மாதத்தின் போது அதிலிருந்து விலகிச் சென்ற ஒரு இராஜாங்க அமைச்சருக்கு வழங்கப்பட்ட ரூபா 1.09 மில்லியன் கிரயமான 09 வகையான | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. | இத்தகவல்கள் விரைவாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் நிர்ணயிக்கப்பட்ட வாறு மீண்டும் ஒப்படைக்கப்படாத உபகரணங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்களின் 10 அலகுகளை மீளப் பெற்றுக் கொள்வதற்கும் முடியாதிருந்தது. | | |
| (ஐ) | மாத்தறை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு பல்வேறு நிறுவனங்களிடமிருந்து அன்பளிப்பாகக் கிடைத்த மற்றும் வைத்தியசாலையினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 392,000 மொத்த கிரயமான 07 Infusion pump மற்றும் ரூபா 70,517 மொத்த கிரயமான 04 சாய்மான கதிரைகள் 2021 யூலை 08 ஆந் திகதியளவில் 03 மாதங்களுக்கும் 17 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன. அவ்வாறே ரூபா 342,000 செலவு செய்து 2013 செப்தெம்பர் 23 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்ட பாவனைப் பொருள் இருப்பினைக் கட்டுப்படுத்தும் கணனி மென்பொருள் குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டுக் காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கவில்லை. | இந்த உபகரணங்களை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | கணக்காய்விற்குச் சமர்ப்பித்த 2020 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பகிர்ந்தளித்தல் தொடர்பான அறிக்கையைப் பரீட்சித்த போது ரூபா 5,655.31 மில்லியன் மொத்த பெறுமதியான வழங்கல்களிலிருந்து ரூபா 1,856.14 மில்லியன் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் சம்பந்தமாக | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்ளப்பட்டது. தற்பொழுது பல பெறுவனவுக் கட்டளைகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. காணப்படுகின்ற Covid 19 நிலைமையின் கீழ் உயிரியல் மருத்துவ சேவைப் பிரிவின் 05 ஆம் இலக்க களஞ்சியத்திலுள்ள அதிகளவான கடமைகளின் காரணமாக மற்றும் வைத்தியசாலைகளிலிருந்து சில பெறுவனவுக் | ஒவ்வொரு பொருளும் பொருட்கள் வழங்கல் கட்டளையின் மூலம் வழங்கப்பட வேண்டியதுடன் அதற்காக விரைவாக பெறுவவுக் கட்டளையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வைத்தியசாலைகளிலிருந்து உரிய பொருட்களைப் பெற்றுக் கொண்டமையை உறுதிப்படுத்தும் பெறுவனவுக் கட்டளைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டளைகளைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. காணப்படுகின்ற Covid 19 நிலைமை ஓரளவுக்கு குறைவடைந்ததன் பின்னர் இப்பெறுவனவுக் கட்டளைகளைப் பெற்றுக் கொள்வதனைப் பூரணப்படுத்தலாம். எவ்வாறாயினும், பொருட்கள் வழங்கல் கட்டளையை வழங்குவதற்கும் பொருட்கள் பெறுவனவுக் கட்டளையைப் பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் உரிய ஆவணங்களை நாளதுவரையாக்குவதற்கும் பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு (உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை) ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |

## 3.6 மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட மோசடியான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) கண்டி தேசிய வைத்தியசாலையில் உரிமை கோராத மரணித்த, உயிரற்ற உடல் உறுப்புக்கள், உயிரற்று பிறந்த பிள்ளைகள் மற்றும் சிறுவர்களின் உடல்கள் என்பவற்றை அகற்றுதல் மற்றும் அடக்கம் செய்யும் ஒப்பந்தம் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் உரிமை கோராத மரணித்த உடல்கள், உயிரற்ற உடல் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. கணக்காய்வு | பொதுச்சுகாதார பரிசோதகரின் முழுமையான மேற்பார்வையின் |

| | | | |
|---|---|---|---|
| | உறுப்புக்கள், உயிரற்ற பிறந்த பிள்ளைகள், பிள்ளைகளின் உடல்கள் என்பவற்றை அகற்றுதல் மற்றும் அடக்கம் செய்யும் செயற்பாடு வைத்தியசாலையின் பொதுச் சுகாதார பரிசோதகரின் முழுமையான மேற்பார்வையின் கீழ் ஒப்பந்தக்காரரினால் செய்யப்பட வேண்டிய போதிலும் எச்சந்தர்ப்பத்திலும் பொதுச் சுகாதார பரிசோதகர் பங்குபற்றியிருக்கவில்லை. | அவதானிப்புக்களை கவனித்துப் பார்த்ததன் பின்னர் கண்டி தேசிய வைத்தியசாலையின் உரிமை கோராத மரணித்த உடல்கள், உயிரற்ற உடலிலுள்ள ஏனைய உடல் உறுப்புக்கள், உயிரற்ற பிறந்த பிள்ளைகள் மற்றும் சிறுவர்களின் உடல்கள் என்பவற்றை அகற்றுதல் மற்றும் அடக்கம் செய்வதற்காக 2021 ஆம் ஆண்டிற்காக கேள்வியை வழங்கும் போது Placenta (நச்சுக்கொடி) ஒரு அலகின் சராசரி நிறை 600 கிராம் ஆக கணித்து அந்த Placenta (நச்சுக்கொடி) 1 அலகினை அகற்றுவதற்காக அறவீடு மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் போது Placenta நிறையிடுதல் மேற்கொள்ளப்படாததுடன் வாட்டுக்களில் பிள்ளை பேறு மேற்கொண்ட தாய்மார்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு அதற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | கீழ் இச் செயற்பாடு மேற்கொள்ளப் படுதல் வேண்டும். |
| (ii) | அதிகூடிய குளிரூட்டியில் வைக்கப்பட்டுள்ள பொருட்களின் நிறையானது ஒப்பந்தக்காரரால் வழங்கப்பட்டுள்ள தராசினால் நிறையிடுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததனால் அகற்றப்பட்ட பொருட்களின் நிறையின் அளவினை சரியான தன்மை தொடர்பாக முறையான மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | அளவை செய்யும் உபகரணங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2020 செப்தெம்பர் 14 ஆந் திகதி அதிகூடிய குளிரூட்டியில் வைக்கப்பட்டிருந்த தாய்மார்களின் நச்சுக் கொடிகளில் ஜஸ் கலந்த பாரத்தின் அளவு மற்றும் உரிய தாய்மார்களின் எண்ணிக்கையின் பிரகாரம் பாரத்தின் சராசரி 979 கிராம்களாக இருந்த போதிலும் 2019 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2020 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையான காலத்தின் போது ஒப்பந்தக்காரரால் கட்டணம் அறவிடப்பட்டிருந்த நிறையின் அளவானது தாய்மார்களின் எண்ணிக்கையின் பிரகாரம் பாரத்தின் சராசரி 1.7 கிலோகிராமிலிருந்து 4.7 கிலோகிராம் வரையான அதிகளவான வீச்சினைக் கொண்டிருந்தது. | - மேற்படி - | இது சம்பந்தமாக முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு மிகையாக செலுத்தப்பட்ட பணத்தை பொறுப்புக் கூறக் கூடிய தரப்பினர்களிட மிருந்து அறவிட வேண்டியதுடன் பொறுப்புக் கூறக் கூடிய உத்தியோகத்தர் கள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | இணையத்தளத்தில் காணப்படுகின்ற தகவல்கள் மற்றும் மருத்துவ அறிக்கைகளின் பிரகாரம் தாயிடம் இருக்கக்கூடிய நச்சுக்கொடியின் நிறை 500 கிராமிலிருந்து 800 கிராம் வரையான வீச்சுடையதாகும். அந்த புள்ளிவிபர தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வு செய்த திகதியான 2020 செப்தெம்பர் 14 ஆந் திகதியில் காணப்பட்ட அப்பொருட்களின் ஜஸ் கலந்த சராசரி நிறை 979 கிராம் மற்றும் 1 கிலோ கிராம் உச்ச அளவாகவும் 2019 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2020 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதி தொடர்பான தாய்மார்களின் எண்ணிக்கையை | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கவனத்திற்கு எடுத்துக் கொண்ட போது அப்பொருட்கள் 24,877 கிலோகிராம்களால் அதிகரித்து ஏடுகளில் பதிவு செய்யப்பட்டிருந்தது எனவும் அத்திகதி வரை அவற்றில் 22,246 கிலோகிராம் பொருட்களுக்காக ரூபா 9.36 மிகையாக செலுத்தப் பட்டிருந்தது எனவும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 2015 மே 28 ஆந் திகதிய 01/21-2015 ஆம் இலக்க சுகாதார அமைச்சு செயலாளரால் வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் உணவு எடுப்பதற்கு வெளிப்படுத்திய கனிஸ்ட ஊழியர்களால் உணவுக்கு தகைமை பெற்றுள்ள ஒரு நாளுக்கு உணவுக்கு கட்டளையிடப்பட்ட பொருட்களின் கிரயம் மற்றும் ஏனைய கிரயங்களைக் கணித்து அந்த ஊழியரின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய போதிலும் கண்டி தேசிய வைத்தியசாலையில் 2020 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதியின் போது கனிஸ்ட ஊழியர்களால் கட்டளையிடப்பட்டு பெற்றுக் கொள்ளப்படாத 22751 பகல் உணவுப் பொதிகளின் கிரயத்தை அந்த ஊழியர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. ஒரு நாளுக்குத் தேவையான உணவுக் கட்டளைகளானது பிரதான ஓவசியர் அலுவலகத்தின் மூலம் பேணப்பட்டு வருகின்ற ஊழியர்களுக்கான உணவுகளை கட்டளையிடும் பதிவேட்டின் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. பல்வேறு காரணங்களால் சில வேளைகளில் சிறிய அளவில் இக்கட்டளைகள் மாற்றமடையலாம். | சுகாதார அமைச்சு செயலாளரால் வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அம்பாறை பொது வைத்தியசாலையில் அமுல்படுத்தப்பட்டிருந்த வைத்தியசாலை சுகாதார முகாமைத்துவ முறைமையின் (Hospital Health Information Management System (MHIMS)) ஒரு உப அலகாக ஆய்வுகூட தகவல் முகாமைத்துவ முறைமையானது (Laboratory Information Management SystemLIMS)) ரூபா 3.5 மில்லியன் செலவு செய்து 2018 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | அதுவரை HHIMS முறைமையினுள் LIMS மென்பொருள் உள்ளடங்கியுள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ள தனால் தேவைப்பாடின்றி அந்த மென்பொருளை கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. அமைச்சின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் 2018 ஆகஸ்ட் 21 ஆந் திகதி பிரதிப் பணிப்பாளர் நாயகத்தினால் (திட்டங்கள்) நிதி ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளது. | தேவைப்பாட்டினை உறுதியாக இனங்கண்டதன் பின்னர் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் அனைத்து பெறுகைகளும் ஆரம்பிக்கப்படல் வேண்டும். |
| (ii) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.2.2 (அ) மற்றும் 2.8.1(ஆ) வழிகாட்டிகளின் பிரகாரம் இந்த பெறுகை அறிவித்தல் தொடர்பாக இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்காததுடன் இப்பெறுகையின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு விடயம் தொடர்பான ஒரு நிபுணர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். இக்காலம் வரை பெறுகை அறிவித்தலானது பிரபல்யமான பத்திரிகைகளின் அறிவித்தல் மூலம் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் விடயம் தொடர்பான அறிவு உள்ள உயிரியில் மருத்துவ | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பொறியியல் உதவியாளர் ஒருவர் குழுவின் அங்கத்தவராக செயற்பட்டிருந்தார். | |
| (iii) | இரண்டு கேள்விதாரர்களால் கேள்விகள் சமர்ப்பிக்கப் பட்டிருந்ததுடன் மென்பொருளின் விலைக்கு அடுத்துவரும் 04 ஆண்டுகளுக்கான பராமரிப்புச் செலவுகளின் தேறிய நிகழ்கால பெறுமதி (Net Present Value) சேர்க்கப்பட்டு கேள்வி மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்குப் பதிலாக முதலாவது ஆகக்குறைந்த கேள்விதாரரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மென்பொருளின் விலையான ரூபா 3.50 மில்லியனுடன் இரண்டாவது ஆகக்குறைந்த கேள்விதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட மென்பொருளின் விலையான ரூபா 2.33 மில்லியனுக்கு அடுத்துவரும் 04 ஆண்டுகளின் பராமரிப்புச் செலவான ரூபா 1.74 மில்லியன் சேர்க்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 4.07 மில்லியனை ஒப்பிட்டு கேள்வி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க முதலாவது ஆகக்குறைந்த கேள்விதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வியானது இரண்டாவது ஆகக்குறைந்த கேள்விதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வியினை விட குறைந்த கேள்வி என்பதற்கு பிழையான பதிவுகள் ஈடுபடுத்தப்பட்டு முதலாவது கேள்விதாரருக்கு பெறுகை வழங்கப்பட வேண்டுமென | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. முதலாவது கேள்விதாரர் ரூபா 3,500,000 தொகையான கேள்வியைச் சமர்ப்பித்து ஒரு ஆண்டிற்கு உத்தரவாதம் வழங்குவதாகத் தெரிவித்திருந்தார். இரண்டாவது ஆகக் குறைந்த கேள்விதாரரால் ரூபா 2,338,844 தொகையான கேள்வியைச் சமர்ப்பித்திருந்த போதிலும் 04 ஆண்டு உத்தரவாத காலத்திற்காக ஒரே தடவையில் ரூபா 1,748,239 தொகையினை செலுத்த வேண்டியிருந்ததனால் அக்கேள்வியின் பெறுமதி ரூபா 4,087,083 அளவில் இருக்குமென்பதால் முதலாவது கேள்விதாரருக்கு பெறுகையை வழங்குவதன் மூலம் நிதி நட்டம் ஏற்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்புக்கூறக் கூடிய தரப்பினர்களை நிர்ணயித்து தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு சிபார்சு செய்திருந்தது. அச்சிபார்சு பிராந்திய பெறுகைக் குழுவினாலும் உறுதிப்படுத்தப்பட்டு பெறுகையானது முதலாவது கேள்விதாரருக்கு வழங்கியிருந்தமையின் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நிதி நட்டம் ரூபா 1.17 மில்லியனாகும். | | |
| (iv) | தெரிவு செய்யப்பட்ட வழங்குனருக்கு 2018 ஆகஸ்ட் 24 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த பொருள் கட்டளையில் தாமத காலத்திற்காக அறவிட வேண்டிய தாமதக் கட்டணம் தொடர்பாக நிபந்தனை எதுவும் உள்ளடக்கப் பட்டிருக்காமையின் காரணமாக 2019 ஏப்ரல் 29 ஆந் திகதி வரை உரிய முறைமையானது சரியாக நிறுவப்பட்டிருக்காத போதிலும் அத்திகதி வரையான தாமத காலம் 07 மாதங்களுக்காக தாமதக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. 2018 ஆகஸ்ட் 24 ஆந் திகதி பொருட்களுக்கு கட்டளையிடும் கடிதத்தில் 2018 செப்தெம்பர் 10 ஆந் திகதிக்கு முன்னர் உரிய வழங்கலை முடிவுறுத்துமாறு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (v) | வழங்குனர் LIMS மென்பொருளை ஸ்தாபிப்பதற்காக உடன்படிக்கை செய்யப் பட்டிருந்த போதிலும் உள்ளபடியாக HHIMS இனுள் Middle Ware மென்பொருள் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அது அண்ணளவாக ரூபா 500,000 செலவில் ஸ்தாபித்திருக்கலாம் என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க வழங்குனருக்கு அண்ணளவாக ரூபா 3 | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. கேள்விதாரர் வழங்கியுள்ள கேள்வி மனுவின் பிரகாரம் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட வழங்கலுக்குரிய பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் கேள்வி வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் அளவில் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (vi) | கணக்காய்வுத் திகதி வரை ஸ்தாபிக்கப்பட்டுள்ள மென்பொருளானது வைத்தியசாலைக்குள் காணப்படுகின்ற OPD, Wards மற்றும் Clinic ஆகிய பிரிவுகளுடன் தொடர்புபடுத்தப்படவில்லை. அதன் காரணமாக மென்பொருளினூடாக பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்த பரிசோதனை அறிக்கையானது கைகளால் தயாரிக்கப்பட்டது எனவும் அதன் காரணமாக தரவுகள் இரட்டிப்பாக்கப்படல், கோவைகளைப் பயன்படுத்துதல் அதிகரித்தல், மொழிபெயர்ப்பு தவறு ஏற்படுதல், அதிக காலம் எடுத்தல், மாதிரிகள் காணாமல் போதல் மாதிரிகளைப் பெற்றுக் கொள்வதிலுள்ள சிக்கல்கள் காணப்படுகின்ற தரவுகளின் அடிப்படையில் ஆராய்ச்சி செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் சிரமமாக இருத்தல், புள்ளிவிபரத் தரவுகளை உருவாக்குதல் சிரமமாக இருத்தல் போன்ற குறைபாடுகள் மற்றும் பலவீனங்கள் ஏற்படலாம் என்பது அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (vii) | புதிய மென்பொருள் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் 2017 ஏப்ரல் மாதம் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தினால் (ICTA) ஸ்தாபிக்கப்பட்டுள்ள முறைமையினூடாக ஆய்வுகூட அறிக்கையை இலத்திரனியல் ஊடாக மருத்துவர்களுக்கு வழங்குதலினை உள்ளடக்கி தரவுகளை பரிமாற்றம் செய்யும் நடைமுறையானது 2018 ஒக்தோபர் 20 ஆந் திகதியிலிருந்து செயற்படாதிருந்தது எனவும் FBC அறிக்கையினைப் பெற்றுக்கொள்ளும் இயலுமை இழக்கப்பட்டிருந்தது எனவும் மற்றும் அந்த முறைமை மிகவும் சிக்கலானதாக உள்ளது என்பது அறிவிக்கப்பட்டிருந்தும் அதற்கிணங்க புதிய மென்பொருளை கொள்வனவு செய்வதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 3.5 மில்லியன் பணம் விளைவற்ற செலாவக இருந்ததுடன் காணப்பட்ட முறைமையானது செயற்பாடற்று இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (viii) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.10(இ) வழிகாட்டியின் பிரகாரம் வழங்குனர் களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 50,000 தொகையான செயலாற்றல் பிணையானது 2018 ஒக்தோபர் 02 ஆந் திகதி காலாவதியாகியிருந்த போதிலும் அதன் காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ix) | ஸ்தாபிக்கப்பட்ட மென்பொருள் நிர்ணயிக்கப்பட்ட விபரக் குறிப்புக்களின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என்பதற்கு விடயம் தொடர்பான நிபுணரிடமிருந்து ஒரு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காததுடன் மென்பொருளை சரியான வகையில் பயன்படுத்திக் கொள்ளமுடியுமா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளாது மற்றும் நிதிப் பிரமாணம் 136, 137, 138 மற்றும் 139 இற்கு மீறுதலாக 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வழங்குனருக்கு ரூபா 3.44 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | 2021 சனவரி 02 ஆந் திகதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் பொலன்னறுவை பொது வைத்தியசாலைக்கு மேற்கொண்ட பயணத்திற்கு முன்னர் அன்பளிப்பாக வழங்கி பூர்த்தி செய்யப்பட்டிருந்த விசேட வைத்திய நிபுணர் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு (Villa) அருகாமையிலிருந்து அழைப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவிற்கு நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் வரையான வீதிக்கு உள்ளக இணைப்பு கொங்கிறீட் கல் பரப்பி புதுப்பித்தல் மற்றும் பழைய உடைந்த நிலையில் உள்ள தொலைத்தொடர்பு மற்றும் பாதுகாப்பு பிரிவு செயற்பட்டு வந்த கட்டிடத்தை உடைத்து அகற்றுவதற்காக முறையே ரூபா 1.580 மில்லியன் மற்றும் ரூபா 699,290 தொகையான | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. விசேட வைத்திய நிபுணர் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு அருகாமையிலிலிருந்து அழைப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவிற்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடம் வரையான வீதியானது கேள்வி கோரும் சந்தர்ப்பம் வரை அன்பளிப்பாக நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததனால் கேள்வி கோருதல் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. உடைந்த நிலையில் இருந்த தொலைத்தொடர்பு மற்றும் பாதுகாப்பு பிரிவு செயற்பட்டு வந்த கட்டிடம் இன்றுவரை உடைத்து அகற்றப்பட்டிருக்காததனால் கேள்வி மனுவை திறந்து வைத்தியசாலையின் ஒப்பந்தம் தொடர்பான | இது சம்பந்தமாக முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்புக் கூறக் கூடிய தரப்பினர்களை நிர்ணயித்து தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(வரியின்றி) மதிப்பீட்டின் அடிப்படையில் 2021 சனவரி 24 ஆந் திகதி விலைமனு கோரப்பட்டிருந்தும் 2021 சனவரி 11 ஆந் திகதி கேள்வி மனுக்களைத் திறப்பதற்கு முன்னர் அந்த இரண்டு செயற்திட்டங்களினதும் வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருந்ததனால் ஒழுங்கீனங்கள் இடம்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என்பது 2021 பெப்ரவரி 10 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது

(உ) சுத்திகரிப்பு சேவை தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு 2016 மார்ச் 24 ஆந் திகதியிலிருந்து அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட சம்பளத்தை சுத்திகரிப்பு சேவையை வழங்குகின்ற நிறுவனங்களின் வேண்டுகோளின் பிரகாரம் பணம் செலுத்த வேண்டுமெனவும் பணம் செலுத்துவதற்கு முன்னர் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை ஊழியர்களுக்கும் அதிகரித்த சம்பளத்தின் பிரகாரம் பங்களிப்பு பணம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் செலுத்தப்பட்டுள்ளது முதலியவாறான விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும் 2016 ஆகஸ்ட் 05 ஆந் திகதி நியமிக்கப்பட்ட அமைச்சு பெறுகைக்குழு

ஆலோசனை நிறுவனமான பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்தின் சிபார்சு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிடமிருந்து தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்றுக் கொண்டு இக்கட்டிடத்தை உடைத்து அகற்றுவதற்காக ஒப்பந்தம் வழங்குதல் இடம்பெற்றிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| | தீர்மானித்திருந்தது. அதற்கிணங்க சுத்திகரிப்பு சேவை தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு அரசாங்கத்தினால் அதிகரிக்கப்பட்ட சம்பளம் மற்றும் அதன் அடிப்படையில் மேலதிக நேர வேலைப்படியாக 2016 சனவரியிலிருந்து 2016 செப்தெம்பர் வரையான காலப்பகுதிக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையினால் 04 நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 204.60 மில்லியன் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | | |
| (i) | பணம் செலுத்துவது தொடர்பாக 2016 ஆகஸ்ட் 05 ஆந் திகதி வழங்கப்பட்ட அமைச்சு பெறுகை குழு தீர்மானத்திலுள்ளவாறான நிபந்தனைகள் உறுதிப்படுத்திக் கொள்ளப்படாது மேலே குறிப்பிட்ட காலப்பகுதிக்காக ரூபா 26.57 மில்லியன் மொத்த தொகையான நிலுவைச் சம்பளமும் மேலதிக நேர வேலைப்படியும் செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. | இது சம்பந்தமாக முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு மிகையாகச் செலுத்தப்பட்ட பணத்தை பொறுப்புக்கூறக் கூடிய தரப்பினர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டியதுடன் பொறுப்புக்கூறக் கூடிய உத்தியோகத்தர் கள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | சேவையில் ஈடுபட்டிருந்த 63 வேலையாட்களுக்கு 1,254 சேவை வேலைக் காலப்பகுதி மற்றும் 375 நாட்களுக்கான சம்பளமாக ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்ட முறையே ரூபா 677,160 மற்றும் ரூபா 202,500 தொகைகள் ஒப்பந்தக்காரரால் வேலையாட்களுக்குச் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருக்கவில்லை எனவும் அந்த வேலையாட்களுக்காக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காக ரூபா 131,949 தொகை ஒப்பந்தக்காரருக்கு மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது எனவும் இக்காலப்பகுதி தொடர்பான புதிய மேலதிக நேர வேலை விலையின் பிரகாரம் வேலையாட்களின் மேலதிக நேர வேலைப்படியாக ரூபா 25.31 மில்லியன் மொத்த தொகை ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தும் அவற்றில் ரூபா 7.15 மில்லியன் ஒப்பந்தக்காரரால் வேலையாட்களுக்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. | | |
| (iii) | இக்காலப்பகுதிக்காக 24 வேலைப் பரீட்சகர்களின் சம்பளங்கள் மற்றும் மேலதிக நேர வேலைப் படியாக ரூபா 1.92 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது எனவும் மூன்று ஒப்பந்தக் காரர்களுக்கு பெறுமதிசேர் வரி ரூபா 714,983 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது எனவும் ஒரு ஒப்பந்தக் காரருக்கு புதிய விலையின் பிரகாரம் உண்மையாக ஈடுபடுத்தப்படாத சுத்திகரிப்பு பொருட்களுக்காக ரூபா 81,320 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது எனவும் அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மூன்று ஒப்பந்தக்காரர்களின் 2016 சனவரியிலிருந்து செப்தெம்பர் வரையான காலப்பகுதிக்கான சம்பள பதிவேட்டினை வைத்தியசாலையினால் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததனால் அந்த மூன்று ஒப்பந்தக்காரர் களுக்கும் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | சுத்திகரிப்புச் சேவை தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து அரசாங்கத்தினால் அதிகரிக்கப்பட்ட சம்பளங்களை சுத்திகரிப்பு சேவையை வழங்குகின்ற நிறுவனங்களின் வேண்டுகோளின் பிரகாரம் செலுத்துவதற்கும், செலுத்துவதற்கு முன்னர் அதிகரிக்கப்பட்ட சம்பளங்களை ஊழியர்களுக்கும், அதிகரித்த சம்பளங்களின் பங்களிப்பு பணம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் செலுத்தப்பட்டுள்ளது என்பதுவுமான விடயங்கள் உறுதிப்படுத்திக் கொள்ளப்பட வேண்டுமென அமைச்சு பெறுகைக் குழுவினால் 2018 திசெம்பர் 17 ஆந் திகதி தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மஹரகம அபேக்ஸா வைத்தியசாலையினால் சுத்திகரிப்பு சேவை வழங்குனருக்கு அதிகரித்த சம்பளங்கள் மற்றும் | | |

| | | | |
|---|---|---|---|
| | மேலதிக நேர வேலைப் படியாகச் செலுத்தப்பட்டிருந்த முறையே ரூபா 8.40 மில்லியன் மற்றும் ரூபா 28.93 மில்லியன் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிய மேலே குறிப்பிட்ட விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்ளாது ஒப்பந்தக்காரர்களுக்கு ஊழியர்களுக்கான அதிகரித்த சம்பளமாக ரூபா 8.40 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. இந்த வைத்தியசாலையின் சுத்திகரிப்பு சேவையை வழங்கிய நிறுவனத்திற்கு அரசாங்கத்தின் மூலம் அதிகரித்த சம்பள கொடுப்பனவானது 2018 திசெம்பர் 17 ஆந் திகதிய அமைச்சு பெறுகை சீ 1 குழு எடுத்த தீர்மானத்திற்கு இணங்கவும் உரிய நிறுவனங்கள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவும் மேற்கொள்ளப்பட்டது. | இது சம்பந்தமாக முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு மிகையாகச் செலுத்தப்பட்ட பணத்தை பொறுப்புக் கூறக் கூடிய தரப்பினர்களிட மிருந்து அறவிட வேண்டியதுடன் பொறுப்பு கூறக் கூடிய உத்தியோகத்தர் கள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 4,342 சேவை வேலைக் காலம் மற்றும் 4,002 நாட்களுக்காக சம்பளமாகச் செலுத்த வேண்டிய முறையே ரூபா 3.21 மில்லியன் மற்றும் ரூபா 2.96 மில்லியன் தொகைகள் ஒப்பந்தக்காரரால் அந்த வேலையாட்களுக்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுவும் அந்த வேலையாட்களுக்கான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியமாக ரூபா 926,184 தொகை ஒப்பந்தக் காரருக்கு மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது எனவும் புதிய மேலதிக நேர வேலையின் பிரகாரம் மேலதிக நேர | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வேலைப்படியாக ரூபா 6.39 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது எனவும் அவதானிக்கப்பட்டது | | |
| (iii) | 06 வேலைப் பரிசோதகர்களின் சம்பளங்கள் மற்றும் மேலதிக நேர வேலையாக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 373,287 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | 2021 பெப்ரவரி 13 ஆந் திகதி மாத்தறை பொதுவைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவிற்குச் சேர்த்துக் கொள்ளப்படுகையில் மரணமடைந்து பின்னர் கொவிட் 19 நோயாளியாக இனங்காணப்பட்டிருந்த ஒரு பெண்ணின் உடல் சட்ட மருத்துவரின் சிபார்சு மற்றும் கட்டளையை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாது திடீர் மரணம் பிழையான காரணமாக ஏற்பட்ட மரணம் என பிழையான காரணத்தைக் காட்டி உடலை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தமை சம்பந்தமாக வைத்தியசாலை பணிப்பாளரால் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தின் பிரதம நீதிபதிக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உரிய திடீர் மரண விசாரணை அதிகாரியின் நியமன அதிகாரியான நீதி அமைச்சின் செயலாளருக்கு இது சம்பந்தமாக தெரியப்படுத்தப்படாததுடன் உரிய திடீர் மரண விசாரணை சம்பந்தமாக 2021 யூலை 08 ஆந் திகதி | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. மாத்தறை பொது வைத்தியசாலைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட பதில் திடீர் மரண விசாரணை அதிகாரி அவர்களின் நியமன அதிகாரி நீதி அமைச்சின் செயலாளர் என்பதுடன் கௌரவ மாத்தறை பிரதம நீதவான் அவர்கள் அவரின் மேற்பார்வை உத்தியோகத்தராகும். | திடீர் மரண விசாரணை அதிகாரி அவர்களின் நியமன அதிகாரியான நீதி அமைச்சின் செயலாளருக்கு இது சம்பந்தமாக தெரியப்படுத்தி எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான க.ணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்கள் தொடர்பான கூற்று (குறிப்பு (i)) மற்றும் ஏடுகளிலிருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்று (குறிப்பு (ii)) சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) 2020 திசெம்பர் 31 இல் உள்வாறான மொத்த நட்டம் ரூபா 76.29 மில்லியனாக இருந்ததுடன் ஆண்டின் போது அறவிடப்பட்ட மற்றும் ஏடுகளிலிருந்து பதிவழிக்கப்பட்ட பெறுமதி முறையே ரூபா 73,000 மற்றும் ரூபா 8.30 மில்லியனாகும். ஆண்டின் போது அறவீடு செய்தல் மற்றும் ஏடுகளிலிருந்து பதிவழித்த பெறுமதிகளை மொத்த நட்டத்தின் சதவீதமான எடுத்துக் கொள்கையில் முறையே 0.1 சதவீதம், 12.23 சதவீதம் ஆகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்ளப்பட்டது. உரிய நிதிப் பிரமாணத்தைப் பின்பற்றி மேலதிக நடவடிக்கைகளை எடுக்குமாறு அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அடுத்துவரும் ஆண்டுகளில் இது சம்பந்தமான சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நடைமுறைகளை பிரதான கணக்காளரினால் (களஞ்சிய மீளாய்வு) தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்படும். | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 25 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதி குறிப்பிடப்படாத நட்டங்கள் மற்றும் சேதங்கள் ரூபா 33.36 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 17.14 மில்லியன் 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகநிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்டது. அதற்கு மேலதிகமாக அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத நட்டங்கள் மற்றும் சேதங்கள் ரூபா 33.52 மில்லியனாகும். | | |
| (இ) | 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக நட்டங்கள் மற்றும் விட்டு விடுதல்கள் தொடர்பான கூற்று (குறிப்பு (i)) மற்றும் ஏடுகளிலருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்று (குறிப்பு (ii) என்பன டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருக்காததுடன் சுகாதார சேவை பணிப்பாளர் நாயக அலுவலகம், பொலன்னறுவை, பொது வைத்தியசாலை, மலேரியா ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம் என்பன அந்த இரண்டு கூற்றுக்களை சமர்ப்பித்திருக்கவில்லை. மேலும் ஒரு வைத்தியசாலையினால் நட்டங்கள் மற்றும் கைவிடுதல் தொடர்பான கூற்று (குறிப்பு (i)) சமர்ப்பித்திருக்காததுடன் 05 வைத்தியசாலைகளினால் ஏடுகளிலிருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்று (குறிப்பு (ii)) படிவம் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்ளப்பட்டது. சரியான தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான தகவல்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 36 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் நட்டங்கள் மற்றும் கைவிடுதல் தொடர்பான கூற்று (குறிப்பு (i)) படிவம் வெற்று அறிக்கையாகவும் 14 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் நட்டங்கள் மற்றும் கைவிடுதல் தொடர்பான கூற்று (குறிப்பு (ii) படிவம் வெற்று அறிக்கையாகவும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது ஒரு வழமைக்கு மாற்றமான நிலைமை என்பதனால் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கப்பட்டது. இது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் சரியான நிலைமையை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |
| (உ) | அனுராதபுரம் போதனை வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவில் இடம்பெற்றுள்ள ரூபா 6.32 மில்லியன் பண மோசடியானது நிதிப்பிரமாணம் 106 மற்றும் நிதிப்பிரமாணம் 113 உடன் தொடர்புபட்டதனால் நட்டங்கள் மற்றும் கைவிடுதல் தொடர்பான கூற்றினுள் (குறிப்பு (i)) காட்டப்பட வேண்டிய போதிலும் அது நிதிப் பிரமாணம் 109 இன் கீழ் ஏடுகளிலிருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்றினுள் (குறிப்பு (ii)) காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் ரூபா 6,321,785 தொகையான சிறாப்பரின் மோசடி சம்பந்தமாக நிதப் பிரமாணத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

## 3.8 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் V ஆவது அத்தியாயத்தின் 7.1 ஆம் பிரிவு மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதியின் முதலாவது தொகுதியின் 172 ஆவது விதியின் பிரகாரம் பதவியை கைவிட்டுச் சென்றதாகக் கருதப்படுகின்ற ஒரு உத்தியோகத்தருக்கு அது பற்றி உடனடியாகச பதிவுத் தபாலில் தெரிவித்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் நிறுவனத் தலைவரின் பொறுப்பாக இருந்த போதிலும் சுகாதார அமைச்சிற்குரிய வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில சேவையாற்றுகின்ற வைத்தியர்கள் முறையான அங்கீகாரமின்றி சேவைக்குச் சமூகமளிக்காத சந்தர்ப்பங்களின் போது அவர்கள் சேவையை கைவிட்டுச் சென்றதாகக் கருதி நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்து கடிதங்கள் வழங்குதல் 03 மாதங்களிலிருந்து 105 மாதங்கள் வரையான கால தாமதத்துடன் இடம்பெற்றிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. மேலும் கண்டி தேசிய வைத்தியசாலையில் சேவையாற்றியிருந்த ஒரு தாதி உத்தியோகத்தர் 2016 | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்ளப்பட்டது. கணக்காய்வு ஐய வினாவில் சுட்டிக்காட்டப்பட்ட அவதானிப்புக்கள் சம்பந்தமாக கவனம் செலுத்தி எதிர்காலத்தில் இவ்வாறான பலவீனங்களை இல்லாமலாக்குவதற்கு முறையான நடைமுறையைத் தயாரிப்பதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு தாபன விதிக் கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 7.1 ஆம் பிரிவு மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் முதலாவது தொகுதியின் 172 ஆம் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

செப்தெம்பர் 14 ஆந் திகதி சேவையை கைவிட்டுச் சென்று 45 மாதங்களின் பின்னர் சேவையை கைவிட்டுச் செல்லும் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. அவரின் தனிப்பட்ட கோவைக்கு இணங்க 2012 செப்தெம்பர் 12 ஆந் திகதிய சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்துடன் கையொப்பமிட்ட உடன்படிக்கைக்கு மேலதிகமாக கட்டாய சேவைக்காலம் 48 மாதங்கள் மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ள பணமும் மேலும் ரூபா 265,280 தொகையும் அரசாங்கத்திற்கு செலுத்துவதற்கு கட்டுப்பட்டுள்ளார் என்பதாக மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலுக்கு உத்தியோகத்தர் இணங்கி கொண்டிருந்தும் உத்தியோகத்தர் சேவையை கைவிட்டுச் சென்றதன் பின்னர் உரிய அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கண்டி தேசிய வைத்திய சாலையின் மருத்துவ பரிசோதனைகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற 03 ஆய்வு கூடங்களில் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது காலாவதியான இரசாயனப் பொருட்கள் மற்றும் உபகரணங்களின் 454 அலகுகள் காணப்பட்டன எனவும் Micro Biology ஆய்வுகூடத்தில் இருந்த காலாவதியான இரசாயனப் பொருட்கள் பரீட்சித்தல் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. முன்னைய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட இரசாயனப் பொருட்கள் தொடர்பாக அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அடுத்துவரும் ஆண்டுகளுக்காக மருந்து வழங்கல் பிரிவினால் கட்டளையிடுதல் சாதாரண முறைமையிலாகும். அதற்கிணங்க 2019 ஆம் ஆண்டில் செலவு செய்யப்பட்ட அளவினை | காலாவதியான இரசாயனப் பொருட்களை பரீட்சித்தல் நடவடிக்கை களுக்காக ஈடுபடுத்தும் பொருத்தத் தன்மை தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எனவும் அவதானிக்கப்பட்டது. | கருத்தில் கொண்டு 2019 ஆம் ஆண்டின் இறுதியில் 2020 ஆம் ஆண்டிற்கான இரசாயனப் பொருட்கள் மருத்துவ வழங்கல் பிரிவினால் வேண்டிக் கொள்ளப்பட்டது. எனினும் 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொரோனா இன்னல் நிலைமையின் காரணமாக நோயாளிகளின் வருகை குறிப்பிடத்தக்க அளவில் குறைவடைந்ததன் காரணமாக 2020 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்திலிருந்து மே மாதம் வரை ஆய்வுகூட பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் பெரும்பாலும் குறைவடைந்துள்ளதனால் 2019 ஆம் ஆண்டின் போது 2020 ஆம் ஆண்டிற்காக வேண்டப்பட்ட இரசாயனப் பொருட்கள் மிகுதியாக உள்ளன. | |
| (இ) | அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் மருத்துவ பொருட்களை எரிக்கும் இயந்திரத்தின் இயலளவு போதியதாக இல்லாததன் காரணமாக வைத்தியசாலையிலிருந்து வெளியாகும் மருத்துவப் பொருட்கள் 2020 ஆம் ஆண்டிலிருந்து சாக்கடை நிலத்தில் பாதுகாப்பின்றி குவிக்கப்பட்டிருந்ததுடன் மழை காலத்தின் போது அக்கழிவுப் பொருட்கள் நீருடன் கலந்து மல்வத்து ஓயாவிற்கு பாய்ச்சப்படுகின்றது என்பது வெளிப்படுத்தப்பட்டது. சாக்கடை முறைமையின் சிக்கலின் காரணமாக எரித்தல் நடைமுறையின் மூலம் வெளிப்படுத்துகின்ற வாயுவின் நிலைமை தொடர்பான ஒரு அறிக்கை | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. சாக்கடை முறைமையில் எரித்தல் செயற்பாட்டின் மூலம் உருவாகின்ற வெளியேறும் வாயுவின் நிலைமை தொடர்பாக பரீட்சிப்பதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வாயு தொடர்பாக பரீட்சிப்பதற்காக கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினது உதவி பெற்றுக் கொள்ளப்பட்டது. எரித்தல் நடைமுறையிலிருந்து உருவாகின்ற சாம்பலை அப்புறப்படுத்துவதற்கு ஒரு நடைமுறை இல்லாததனால் சாக்கடையின் தாழ் | சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரத்தினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மத்திய சுற்றாடல் அதிகார சபையில் பதிவு செய்த ஒரு ஆய்வு கூடத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும் மேற்கூறிய நடைமுறையின் மூலம் உருவாகின்ற சாம்பல் (Bottom Ash) சுற்றாடலுக்குச் சாதகமான வகையில் வெளியேற்றுவதற்கான ஒரு நடைமறையினைத் தயாரித்து நடைமறைப்படுத்த வேண்டுமெனவும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சிபார்சு செய்யப்பட்டிருந்தும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2021 மார்ச் 31 அந் திகதி வரை சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலத்தை நிரப்புவதற்காக இச்சாம்பல் ஈடுபடுத்தப்பட்டது. அச்சாம்பலை அகற்றுவதற்கான ஒரு நடைமுறை தயாரிக்கப்பட்டு வருகின்றது. சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கும் போது அதற்காக 07 விடயங்கள் பூரணப்படுத்தப்பட வேண்டும் எனவும் அதற்காக எடுக்கப்பட்ட நடைமுறைகள் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு தெரியப்படுத்தப்பட்டது. | |
| (ஈ) | உடன்படிக்கையின் பிரகாரம் தாதி மாணவ பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்ற பயிலுனர்கள் 10 ஆண்டுகள் கடப்பதற்கு முன்னர் இராஜினாமாச் செய்தல் அல்லது ஏனைய காரணங்களின் அடிப்படையில் தனது பதவியில் மாற்றங்கள் செய்கையில் பயிலனருக்காக அரசாங்கம் மேற்கொள்கின்ற செலவுகள் மற்றும் உடன்படிக்கையில் காட்டப்படுகின்றவாறு ரூபா 100,000 அல்லது ரூபா 200,000 தொகையான இழப்பீட்டுப் பணத்தை பயிலுனர்களிடமிருந்து அறவீடு செய்ய வேண்டிய போதிலும் 10 ஆண்டுகள் கால எல்லையை பூர்த்தி செய்வதற்கு முன்னர் 2019 | கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்கி கொள்ளப்பட்டது. | பயிற்சியின் பின்னர் சேவையை கைவிட்டுச் செல்கின்ற அனைத்து உத்தியோகத்தர் களிடமிருந்தும் நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டுப் பணத்தையும் மிகையாகச் செலுத்தப்பட்ட சம்பளத்தையும் விரைவாக அறவீடு செய்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டின் போது கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட திலிருந்து அறவிட வேண்டியிருந்த அரசாங்கம் மேற்கொள்கின்ற செலவுகள் மற்றும் இழப்பீட்டுப் பணத்தை அறவீடு செய்வதற்கு வைத்தியசாலையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 2019 ஆம் ஆண்டின் போது பதவியை விட்டுச் சென்ற 09 உத்தியோகத்தர்களுக்கு மிகையாகச் செலுத்திய ரூபா 252,562 சம்பளம் மீள அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | 2016 செப்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து 2020 யூலை 31 ஆந் திகதி வரையான காலத்தின் போது தேசிய இரத்த மாற்று நிலையத்தினால் 25 தனியார் வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்ட இரத்தம் மற்றும் அது சம்பந்தப்பட்ட பரிசோதனைகளின் 62 சந்தர்ப்பங்களுக்காக அறவிட வேண்டிய ரூபா 2.335,736 மொத்த தொகையான கட்டணங்கள் 02 மாதங்களுகளிலிருந்து 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு பரிசோதனைகளுடன் இணங்கவில்லை. தனியார் வைத்திய சாலைகளுக்கு இரத்தம் மற்றும் இணைந்தவைகளை வழங்குதல் மற்றும் அவை சார்ந்த பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக இதுவரை அறவிடப்பட்டுள்ள பணம் ரூபா 4,545,648 ஆக இருந்ததுடன் மேலும் அறவீடு செய்ய வேண்டியுள்ள பணம் ரூபா 2,689,886 ஆகும். அது சம்பந்தமாக உரிய தனியார் வைத்திய சாலைக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. சில தனியார் வைத்தியசாலைகள் தற்பொழுது மூடப்பட்டட்டுள்ளன. எதிர்காலத்தில் அன்னும் கட்டணம் அறவிட வேண்டியுள்ள தனியார் வைத்திய சாலைகள் தொடர்பாக மிகுந்த | தனியார் வைத்தியசாலை களுக்கு இச் சேவைகளை வழங்கும் போது பணத்தை அறவீடு செய்வதற்காக முறையான நடைமுறை ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கவனத்துடன் அக் கட்டணங்களை அறவீடு செய்வது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. தற்பொழுது இரத்தம் மற்றும் இரத்த மாற்றுதலை வழங்குவதற்காக தனியார் வைத்தியசாலைகளைப் பதிவு செய்யும் நடைமுறை நாளது வரையாக்கப்பட்டுள்ளதுடன் இரத்தத்தினை பெற்றுக்கொள்ளும் அனைத்து தனியார் வைத்தியசாலைகளும் இரத்தம் மாற்றுதல் சேவையை மேற்பார்வைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் 23(அ) மற்றும் 23(ஆ) பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்கூறிய அதிகாரச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சினால் 2008 பெப்ரவரி 01 ஆந் திதகிய 1534/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2008 இன் 1 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (பாதுகாப்பு மற்றும் நிலைமை) கட்டளை தொகுப்பின் II ஆம் பகுதியின் 15 ஆம் கட்டளையின் பிரகாரம் VIII ஆவது பட்டடோலையில் குறிப்பிட்ட ஆபத்தான கழிவுப் பொருள் தொகுதியான மருத்துவ கழிவுப் பொருட்களை வெளியெற்றுவதற்காக பட்டோலையிடப்பட்ட கழிவுப் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்ளப்பட்டது. வைத்தியசாலையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள எரியூட்டல் நிலையத்திற்காக 2019 ஒக்தோபர் 28 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்குரிய வகையிலான சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. 2019 யூலை மாதமளவில் எரியூட்டல் நிலையானது தொழில்நுட்ப கோளாறு காரணமாக செயலற்று இருந்ததுடன் அக்காலத்தின் போது மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் இந்த எரிவூட்டல் நிலையத்தில் மாற்றங்கள் செய்ய வேண்டுமெனத் தெரிவித்திருந்தது. | சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | பொருள் முகாமைத்துவ உத்தரவுப் பத்திரம் (Schedule Waste License - SWL) பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் குருனாகல் போதனா வைத்தியசாலையில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக அந்த உத்தரவுப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே வைத்தியசாலையின் கழிவுப் பொருளை வெளியேற்றுவதற்காக காணப்படுகின்ற எரியூட்டல் நிலையத்திற்காக 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் (அ) பகுதியின் 63 ஆவது உப பகுதியின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரம் (Environmental Protection License - EPL) பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (எ) | அமைச்சினால் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் குத்தகை வாடகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டு தவணைப் பணங்கள் செலுத்தி முடிவுறுத்தப்பட்டிருந்த 115 வாகனங்களின் உரிமையை அமைச்சினால் பொறுப்பேற்கும் நடவடிக்கை 2021 மே 31 வரையும் முடிவடைந்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிகொள்ளப்பட்டது. 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நிதி குத்தகை முறைமையின் கீழ் வழங்கப்பட்டிருந்த வாகனங்களின் குத்தகை தவணைப் பணம் செலுத்தி முடிவுறுத்தப்பட்டிருந்த தனால் உரிமையைப் பொறுப்பேற்பதற்காக உரிய இலங்கை வங்கி கிளைக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது எனினும் இந்த வாகனங்களை பொறுப்பேற்பதற்குரிய ஆவணங்களை | இந்த வாகனங்களின் உரிமையை விரைவாக பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்குவதில் தாமதம் காணப்பட்டது. தற்பொழுது நாட்டில் காணப்படுகின்ற இன்னல் நிலைமையின் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான ஊழியர்களை அழைத்து நடவடிக்கை எடுக்கப்படுவதனால் மேலும் தாமதமடையும். எவ்வாறாயினும் இது தொடர்பாக தனிப்பட்ட ரீதியாக தேடிப்பார்த்து நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஏ) | மாத்தறை மாவட்ட பொது வைத்திய சாலையினால் 2020 நவம்பர் 01 ஆந் திகதியிலிருந்து 2021 சனவரி 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியின் போது தனியார் வைத்திய சாலைகளுக்கு வழங்கப்பட்ட இரத்தங்களுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 409,186 மொத்த தொகை கணக்காய்வுத் திகதியான 2021 மார்ச் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்ளப்பட்து. இரத்த வங்கியின் மூலம் 2020 ஒக்தோபர் மாதம் வரை தனியார் வைத்திய சாலைகளுக்கு வழங்கபட்ட இரத்தங்களுக்காக அறவிடப்பட வேண்டிய பணம் தொடர்பாக அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதுவரை பணம் அறவிடப்பட்டுள்ள போதிலும் 2020 ஒக்தோபர் மாதத்தின் பின்னர் வழங்கப்பட்ட இரத்தங்களுக்காள அறவீடு செய்யும் அறிக்கை அனுப்படவில்லை. | தனியார் வைத்திய சாலைகளுக்காக இச் சேவைகளை வழங்கும் போது பணத்தை அறவீடு செய்வதற்காக முறையான நடைமுறை தோற்றுவிக்கப்படுதல் வேண்டும். |
| (ஐ) | மாத்தறை மாவட்ட பொது வைத்தியசாலையின் ஆய்வு கூட பிரிவின் குளிர் காப்பகத்தில் 2021 மார்ச் 05 ஆந் திகதி வரை காணப்பட்ட ரூபா 370,712 கிரயமான ஆய்வு கூட பொருட்களின் 25 விடயங்களின் ஆயுள் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. அந்த வைத்தியசாலைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட மருத்துவ ஆய்வுகூடமானது தொழில்நுட்ப விஞ்ஞான பயிலுனர்களின் பயிற்சிக்காக இந்த ஆயுட் | காலாவதியான இரசாயனப் பொருட்களை பரீட்சிப்பு நடவடிக்கை களுக்காக ஈடுபடுத்தும் பொருத்தன்மை தொடர்பாக கவனம் |

| | | | |
|---|---|---|---|
| | காலம் கடந்திருந்தும் அவை ஆய்வு கூட பரீட்சிப்பிற்காக பயன்படுத்தப்பட்டு வந்ததன. இதன் காரணமாக ஆய்வு கூட அறிக்கையானது தவறுடையதாக இருக்கலாம் என்பது அவதானிக்கப்பட்டது. | காலத்தினை மிகைத்த Antibiotic Disc ஈடுபடுத்தப்பட்டது. சில Antibiotic Disc நுண் அங்கிகளை இனங்காண்பதற்கு பயன்படுத்தப்பட்ட போதிலும் நோயாளிகளின் சிகிச்சைக்காக ஈடுபடுத்தப்படவில்லை. அனைத்து Antibiotic Disc களும் வராந்தம் தரக்கட்டுப்பாட்டு பரிசோதனை மூலம் நிர்ணயிக்கப்படப்பவாறு செயற்படுகின்றது என்பது உறுதிப்படுத்தப்பட்டது. காலாவதியான Antibiotic Disc பரிசோதனைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டு செயற்படுகின்றது என்றது உறுதிப்படுத்தப்படுவதுடன் சில வேளைகளில் மருத்துவ வழங்கல் பிரிவினால் வழங்கப்படுகின்ற Antibiotic Disc தேவைப்பாட்டிற்கு போதியதாக இல்லாததனால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் மாத்திரம் தரக்கட்டுப்பாட்டு பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட இந்த Antibiotic Disc ஈடுபடுத்தப்பட்டு உரிய பரிசோதனை மேற்கொள்ளப்படும். | செலுத்ததுதல் வேண்டும். |
| (ஒ) | 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றிக்கையின் பிரகாரம் அனைத்து அரசாங்க நிறுவனங்களிலும் விரல் அடையாளமிடும் இயந்திரங்களை பயன்படுத்துவதன் மூலம் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. 2017 செப்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும் வகையில் வருகை மற்றும் வெளிச் செல்லினை உறுதிப்படுத்தப்படுவதற்காக | சுற்றறிக்கை ஒழுங்கு விதிகளின் பிரகாரம் உத்தியோகத்தர் களின் வருகை மற்றும் வெளிச் செல்லல் சம்பந்தமாக அறிக்கைகளை வைத்துக் |

உத்தியோகத்தர்கள் அலுவலகத்திற்கு வருகை தருதல் மற்றும் வெளிச் செல்லலினை உறுதிப்படுத்துவது சம்பந்தமான அறிக்கைகளை வைத்திருப்பதற்கு முயற்சி எடுக்கப்பட வேண்டியதுடன் 2017 மே 12 ஆந் திகதிய DMS/0016 ஆம் இலக்க திறைசேரி செயலாளரால்சுகாதார அமைச்சிற்கு வழங்கப்பட்டிடிருந்த கடிதத்தின் பிரகாரம் சுகாதார பதவியணி யினர்களின் வருகை மற்றும் வெளிச் செல்லலினை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் வரல் அடையாளமிடும் இயந்திரம் 2017 யூலை 01 ஆந் திகதியிலிருந்து அமுல் படுத்தப்படவில்லையாயின், நிகழ்கால சம்பளத்திற்கு இணங்க மேலதிக நேர வேலைப்படியை செலுத்தாமைக்கு உத்தரவாதமளித்தல் வேண்டும். எனினும், அமைச்சினால் அமைச்சிற்கும் அமைச்சிற்குரிய வைத்திய சாலைகளுக்கும் மற்றும் ஏனைய நிறுவனங் களுக்குமாக ரூபா 31.08 மில்லியன் செலவு செய்து ஸ்தாபிக்கப்பட்ட 213 விரல் அடையாளமிடும் இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டதுடன் நிகழ்கால சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ரூபா 34,868.54 மில்லியன் தொகையும் மேலதிக நேர வேலை மற்றும் விடுமுறை நாள் சம்பளங்களுக்காக ரூபா 27,703.08 மில்லியன் விரல் அடையாளமிடும் இயந்திரத்தினை பயன்படுத்துதல் கண்டிப்பானது என அனைத்து பிரிவுத் தலைவர்களுக்கும் தெரிவித்து அமைச்சின் மூலம் எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ள போதிலும் அது சம்பந்தமாக உருவாகியுள்ள தொழிற்சங்க எதிர்ப்புக்களின் காரணமாக அதனை அமுல்படுத்த முடியாதுள்ளது.

கொள்வதற்கும் அதற்கு இணங்கும் வகையில் உத்தியோகத்தர் களின் மேலதிக கடமை படிகளை செலுத்துவது சம்பந்தமாக தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளைப் பேணுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | தொகையுமாக ரூபா 62,571.62 மில்லியன் மொத்த தொகை செலுத்தப் பட்டிருந்தது. அவ்வாறே மேலதிக நேர வேலை மற்றும் விடுமுறை நாள் சம்பளங்களுக்காகச் செலுத்தப்பட்ட மொத்த பணமானது சம்பள கிரயத்தில் 79 சதவீதம் அளவில் இருந்தது. | | |
| (ஓ) | மாத்தறை மாவட்ட பொது வைத்திய சாலையின் கதிர்வீச்சு சேவை பிரிவின் செயலாற்றல் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | கதிர்வீச்சு சேவை பிரிவிற்காக மாதாந்தம் தயாரிக்கப்படுகின்ற கடமை சேவைக் காலத் திட்டம் தொடர்ச்சியாக மாற்றப்பட்டிருந்ததுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் திருத்திய சேவைக் காலத் திட்டம் அங்கீகரித்துக் கொள்ளப்படாது மேற்கொள்ளப்பட்ட சேவைக் காலத்திற்காக படிகள் செலுத்தப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை Covid – 19 இன்னல் நிலைமை உருவாகுவதற்கு முன்னர் மாதாந்த சேவை கால குறிப்புக்கள் உரிய மாதம் தொடங்குவதற்கு முன்னர் வைத்தியசாலை பணிப்பாளருக்குச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. எனினும். இந்த இன்னல் நிலைமையின் காரணமாக தற்பொழுது கடமை மேற்கொள்ளப்படுவது வழமையான சேவைக்கால குறிப்புக்களின் பிரகாரம் இல்லாததுடன் இன்னல் நிலைமை குறைவடைந்து வழக்கம் போல கடமை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் முன்னையவாறு உரிய சேவைக்கால குறிப்புக்களை பணிப்பாளருக்குச் சமர்ப்பித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த வைத்தியசாலையின் அதிக | சேவைக்கால திட்டத்தை மாற்றுகின்ற சந்தர்ப்பங்களில் திருத்திய சேவைக்கால திட்டத்தை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

எண்ணிக்கையான நோயாளர்களுக்கு நாளாந்தம் சேவை வழங்கப்படுகின்றது. உயிர் ஆபத்துக்களுடனான கதிர்வீச்சு பரீட்சிப்பிற்காக முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய நோயாளிகள் என்பதனால் குறிப்புக்களை வைத்திருத்தல் நடைமுறையில் சிக்கலானதாகும். வழக்கமான கடமை நேரத்தினுள் பெரும்பாலும் வருகை தருவது வாட்டு மற்றும் சிகிச்சைகளுக்குரிய நோயாளர்கள் என்பதனால் பெரும்பாலும் மேற்கொள்ளப்படுவது அவசர நோயாளிகளின் கதிர்வீச்சு பரிசோதனைகளாகும். திடீர் விபத்துக்களுக்கு நோயாளர்களுக்கு வேண்டுதல் விடுக்கப்படுகின்ற கதிர்வீச்சு பரிசோதனைகளின் அளவு அதிகமாகும் பல சந்தர்ப்பங்களில் இவ்வாறான ஒரு நோயாளிக்கான கதிர்வீச்சு பரிசோதனைகளின் அளவு 25-30 அளவினதாகும். மேலும் சட்ட மருத்துவ உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற நோயாளிகளுக்கு மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளின் அளவு இதைவிட அதிகமானதாகும். இதன் காரணமாக அவசர நோயாளர்களின் பரிசோதனைகளை அதிகமாக மேற்கொள்கின்ற அழைப்பு கடமை காலத்தினுள் ஒரு நோயாளி பெற்றுக்கொள்கின்ற கதிர்வீச்சு சேவைகளின் சராசரி எண்ணிக்கை

| | | | |
|---|---|---|---|
| | | இவ்வாறு அதிக பெறுமதியைக் கொண்டிருந்தது. | |
| (ii) | வாட்டுக்களிலிருந்து அல்லது சிகிச்சைகளிலிருந்து இந்த பிரிவிற்கு நோயாளர்களை அனுப்புகின்ற நேரம் அல்லது கதிர்வீச்சு பிரிவிற்கு அந்த நோயாளர்கள் வருகின்ற நேரம் அல்லது சேவையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் வெளிவருகின்ற நேரம் பதியப்படாததனால் அழைப்புச் சேவைக் காலத்தினுள் மற்றும் வழக்கமான சேவைக் காலத்தினுள் பெற்றுக் கொள்ளப்பட்ட கதிர்வீச்சு சேவைகளின் அளவினை சரியாக இனங்காண்பதற்கு முடியாதிருந்ததுடன் கதிர்வீச்சு நிபுணர்களுக்குச் செலுத்தப்பட்ட அழைப்பு படிகள் மற்றும் மேலதிக நேர வேலைப்படிகளின் சரியான தன்மையையும் உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. | - மேற்படி - | தேவையான தரவுகளை தெளிவாகவும் சரியாகவும் பேணுதல் வேண்டும். |
| (iii) | கதிர்வீச்சு நிபுணர்களின் வழக்கமான சேவைக்காலத்திற்கு மிகையாக அழைப்புச் சேவைக்காலத்தின் போது வருகை தருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கை 23 சதவீதத்தினாலும் பெற்றுக்கொண்ட கதிர்வீச்சு சேவைகளின் அளவு 65 சதவீதத்தினாலும் மற்றும் ஒரு நோயாளிக்காக மேற்கொள்ளப்பட்ட கதிர்வீச்சு பரிசோதனைகளின் சராசரி 35 சதவீத்தினாலும் ஆக அதிகரித்திருந்ததுடன் | - மேற்படி - | இது சம்பந்தமாக முழுமையான விசாரணை மேற்கொண்டு மிகையாகச் செலுத்தப்பட்ட பணத்தை பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இதற்கு தாக்கமளிக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான காரணம் சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (iv) | கதிர்வீச்ச நிபுணர்களினால் பிற்பகல் 12 மணியிலிருந்து பிற்பகல் 14 மணி வரையான 02 மணித்தியால அழைப்பு சேவை காலத்தின் போது மேற்கொள்ளப்பட்டது எனக் குறிப்பிடப்பட்டிருந்த CTஸ்கேன் பரிசோதனையில் வழமைக்கு மாற்றமான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதுடன் இக் காலப்பகுதியின் போது மாதிரிகள் மேற்கொள்வதற்கு 03 நிமிடங்களுக்கும் 05 நிமிடங்களுக்கும் இடைப்பட்ட வழமைக்கு மாற்றமான மிகவும் குறைந்த காலம் எடுத்திருந்தது. அதற்கிணங்க பெற்றுக்கொள்ளப்பட்ட படிகளின் சரியான தன்மை பற்றியும் முறைமை பற்றியும் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஔ) | அரசாங்க உத்தியோகத்தர்களின் கடமை நேரங்கள் மேலதிக சேவைக்கால கடமைகள், வார ஒய்வு நாள் கடமைகள் என்பவற்றிக்காக ஈடுபடுத்துதல் மற்றும் அவற்றிற்காக கொடுப்பனவு செய்தல் சம்பந்தமாக அமுல்ப்படுத்தப்படுகின்ற பல்வேறு சுற்றிறக்கை எற்பாடுகள் மற்றும் தாபன விதிக்கோவையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளை மீறி அமைச்சரவை அங்கீகாரமின்றி அது சம்பந்தமாக 2009 மார்ச் 27 | தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் NSCC/3/4 ஆம் இலக்க 2008 ஆகஸ்ட் 13 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்ட சிபார்சுகளுக்கு இணங்க முன்னாள் சுகாதார பாதுகாப்பு மற்றும் ஊடகச்சத்து அமைச்சு செயலாளரால் 02/19/2009 ஆம் இலக்க 2009 மார்ச் 27 ஆந் திகதி பொது சுற்றறிக்கை வழங்கப்பட்டிருந்தது 2011 ஏப்ரல் 05 ஆந் திகதி | பல்வேறு கொடுப்பனவுகள் சம்பந்தமாக சுற்றறிக்கையினை வழங்குவதற்கு முன்னர் உரிய உத்தியோகத்தர் களின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதுடன் நிர்ணயிக்கப் படுகின்ற அதிகாரிகளால் வழங்கப்படுகின்ற அங்கீகாரத்தினை தாமதமின்றி அமுல்ப்படுத்த |

ஆந் திகதிய 02/19/2009 ஆம் இலக்க பொது சுற்றறிக்கை வழங்கப்பட்டிருந்தது. முறையான அங்கீகாரமின்றி இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் அச் சுற்றறிகையினை அமுப்படுத்தியதன் பின்னர் இச்சுற்றறிக்கைக்காக அமைச்சரவையின் மேல் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளும் குறிக்கோளில் 2011 ஏப்ரல் 05 ஆந் திகதி சுகாதார அமைச்சினால் அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த அமைச்சரவை விஞ்ஞாபனமானது முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகம், தாபனங்கள் பணிப்பாளர் நாயகம், அரசாங்க சேவை ஆணைக்குழு ஆகியோருக்கு அனுப்பி அந்த நிறுவனங்களின் சிபார்சுகளைப் பெற்று கீழே தரப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டு இச்சுற்றறிக்கையை அமுல்படுத்துவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் 2011 செப்தெம்பர் 14 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது.

(i) சுகாதார துறையிலுள்ள ஒவ்வொரு நிறுவனத்தினாலும் உரிய தாதி உத்தியோகத்தர் தொகுதியினால் அத்தொகுதிக்கு நிர்ணயிக்கப்பட்ட கடமை நேரங்களுக்கு இணங்க தமது கடமைகள் நிறைவேற்றப்படுகின்றது என்பது உறுதிப்படுத்தப் படுதல் வேண்டும்.

(ii) அந்த நிறுவனங்களினால் ஒவ்வொரு தாதி அமைச்சரவை விஞ்ஞாபணத்திற்காக 2011 செப்தெம்பர் 14 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானம் வழங்கப்பட்டிருந்ததுடன் 02/19/2009 ஆம் இலக்க பொது சுற்றறிக்கைக்காக அமைச்சரவை மேல் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க அத்தீர்மானத்தின் மூலம் செய்யப்பட்டுள்ள திருத்தங்களையும் உள்ளடக்கி 02/19/2009(i) ஆம் இலக்க பொது சுற்றறிக்கை 2012 சனவரி 02 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தும் தாதிகள் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட பிரபல எதிர்ப்பினை முன்னிட்டு அப்பொது சுற்றறிக்கையினை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு முன்னாள் செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. தாதிகள் சங்கத்தினால் 4(x) ஆம் பிரிவினை நீக்கி ஏனைய தாதி உத்தியோகத்தர்கள் பெற்றுக் கொள்ளும் வகையிலேயே வேலைப் பதிவேட்டின் பிரகாரம் சேவையில் ஈடுபடுகின்ற தாதி உத்தியோகத்தர்களின் மேலதிக படிகளைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புக்கள் வழங்குமாறு வேண்டுதல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த வேண்டுதல் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பது தொடர்பாக தேடிப் பார்ப்பதற்காக மற்றும் 02/19/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வேண்டும். மேலும் இந்த முறைமையீனத்தை முறைமைப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். சட்ட ரீதியற்ற வகையில் மேற்கொள்ளப் பட்டுள்ள கொடுப்பனவுகளை அதற்கு பொறுப்புக் கூறக்கூடிய நபர்களிடமிருந்து அறவிடுதல் வேண்டும்.

உத்தியோகத்தர்களால் பூர்த்தி செய்யப்படுகின்ற வழக்கமான கடமை நேரங்கள் மற்றும் மேலதிக கடமை நேரங்கள் தொடர்பான அறிக்கை குறிப்புக்கள் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு தாதி உத்தியோகத்தர்களால் சேவையாற்றிய மேலதிக சேவைக்காலத்திற்கான கொடுப்பனவுகளை வேண்டிக் கொள்வதற்காக மற்றும் அவற்றை கணிப்பீடு செய்வதற்காக தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக் குழுவின் 2011 யூலை 11 ஆந்திகதிய NSCC/4/13/CM ஆம் இலக்க அறிக்கையுடன் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள படிவம் 2011 நவம்பர் 01 ஆந் திகதியிலிருந்து அமுல்ப்படுத்தும் வகையில் அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும்.

(iv) தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஒழுங்குவிதிகளைப் பின்பற்றி அத்திகதியிலிருந்து அமுல்ப்படுத்தும் வகையில் தாதி உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேர வேலை படிகள் செலுத்தப்படுதல் வேண்டும்.

(v) சுகாதார பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து அமைச்சு செயலாளரால் வழங்கப்பட்ட 2009 மார்ச் 27 ஆந் திகதிய 02/19/2009 ஆம் இலக்க பொது சுற்றிற்றிக்கையின் 04

காணப்பட்ட குறைப்பாடுகளைத் தவிர்த்துக் கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக சிபார்சுகளை வழங்குவதற்கு விசேட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

(vi) ஆம் பந்தியானது தாதி உத்தியோகத்தரினால் அரசாங்க விடுமுறை தினத்தில் நிறைவேற்றப்படுகின்ற சேவையானது விடுமுறை தினத்தில் சம்பளம் செலுத்தும் செயற்பாட்டிற்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்படுவதாக திருத்தம் செய்யப்படவேண்டியதுடன் அதன் 04(X) உப பந்தியானது எதுவித மாற்றமும் செய்யப்படாது அவ்வாறே காணப்படுதல் வேண்டும்.

மேற்கூறிய அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் சுகாதார செயலாளரால் 2012 சனவரி 02 ஆந் திகதிய 02/19/2009(i) ஆம் இலக்க பொது சுற்றிக்கை வழங்கப்பட்டிருந்த போதிலும் சுகாதார செயலாளரினால் 2012 சனவரி 13 ஆந் திகதி வழங்கப்பட்ட 01(11)/16/20 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் சுற்றறிக்கையானது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க 2009 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 20201 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரை 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் முறைப்படியான அங்கீகாரமின்றி தாதி பதவியணிக்காக மேலதிக படி செலுத்தப்பட்டதுடன் அவ்வாறான முறையற்ற மற்றும் சட்டரீதியற்ற கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

## 4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| இலங்கையின் சுகாதார முறைமையை நிலைபேறான அபிவிருத்திக் குறிகோள்களுடன் ஒழுங்குபடுத்தும் போது 2030 ஆம் ஆண்டளவில் விசேட குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் தொடர்புபட்ட செயற்பாடுகளுக்காக அமைச்சினால் 46 மத்திய சுகாதார குறிகாட்டிகள் தெரிவு செய்யப்டப்டிருந்தன. அவற்றில் 38 குறிகாட்டிகள் சுகாதாரத்துடன் தொடர்புபட்டதாக உள்ளதுடன் மிகுதி 08 குறிகாட்டிகள் சுகாதாரத்துடன் தொடர்பு அற்ற குறிகாட்டிகளாகும். சுகாதார அமைச்சினால் மீளாய்வாண்டில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் சார்ந்த புதிய 06 குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருந்தும் அதனுடன் சம்பந்தப்பட்ட இலக்குகள், தரவு மூலங்கள், செயற்பாடுகள் என்பவற்றைத் கணக்காய்வுத் திகதியான 2021 மார்ச் 31 அந் திகதி வரை நிர்ணயித்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்ளவில்லை. 2020 ஆம் ஆண்டின் போது தேசிய நிலைபேறான அபிவிருத்திச் சபையினால் சில புதிய குறிகாட்டிகளின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அக் குறிகாட்டிகள் சம்பந்தமான பொறுப்புக்கள் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அந் நடவடிக்கைகள் சம்பந்தமாக இறுதித் தீர்மானத்தினை பெற்றுக்கொள்ளும் தேசிய ஆலோசனையை கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டத்தின் போது எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது காணப்படுகின்ற Covid இன்னல் நிலைமை காரணமாக நடாத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த அக்குழுக் கூட்டத்தினை பிற்போட வேண்டி ஏற்பட்டிருந்தது. | 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக தேவையான திட்டங்களைத் தயாரித்து அமுல்ப்படுத்துவதற்கும் எதிர்பார்த்த செயல் முன்னேற்றத்தை பேணுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. நல்லாட்சி

### 5.1 பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2016 இன் 12 ஆம் இலக்க தகவல்களைத் தெரிந்து கொள்ளும் உரிமை தொடர்பான அதிகாரச் சட்டத்தின் கீழ் பிரசைகளினால் வேண்டப்படுகின்ற தகவல்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்காக சுகாதார அமைச்சின் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களை உள்ளடக்கிய அமைச்சின் ஒவ்வொரு பிரிவினையும் பிரதிநிதித்துவப்படுத்தி 72 தகவல் உத்தியோகத்தர்களும் மேன்முறையீடு சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு உத்தியோகத்தருமாக 73 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டின் போது இந்த 73 உத்தியோகத்தர்களும் கிடைத்த வேண்டுதல்கள் சம்பந்தமான தகவல்கள் 13 உத்தியோகத்தர்களால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மிகுதி 59 உத்தியோகத்தர்களின் சமர்பித்த தகவல்களுக்கு இணங்க மீளாய்வாண்டின் போது பொது மக்களால் சமர்பித்த மொத்த வேண்டுதல்ளின் எண்ணிக்கை 299 ஆக இருந்ததுடன் அவற்றில் 18 வேண்டுதல்களுக்கு பதில் வழங்கப்படவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் 36வேண்டும். |

## 5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க, 2016 சனவரி 28 ஆந் திகதிய DMA/2009(1)(i) ஆம் இலக்க மற்றும் 2019 சனவரி 12 ஆந் திகதிய DMA/1-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் காலாண்டிற்கு 01 வீதம் ஒரு ஆண்டிற்கு 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட வெண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 01 கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்ளப்பட்டது. முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் காலாண்டிற்கு 01 வீதம் ஒரு ஆண்டிற்கு 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டில் Covid 19 உலகளாவிய இன்னல் நாடு முழுவதும் பரவிச் சென்றதன் காரணமாக 2020 மார்ச் 20 ஆந் திகதியிலிருந்து 2020 மே 04 ஆந் திகதி வரை தொடர்ச்சியாக நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் விதிக்கப்டப்பட்டதன் காரணமாக மற்றும் மீண்டும் அடிக்கடி ஊரடங்குச் சட்டம் விதிக்கப்டப்பட்டதனைப் போல அரசாங்கத்தினால் ஆட்கள் ஒன்று சேர்தல் முழுமையாக தடை செய்யப்பட்டதன் காரணமாகவும் 2020 ஆம் ஆண்டில் ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தினை மாத்திரம் நடாத்தக்கூடியதாக இருந்தது. | சுற்றறிக்கை ஒழுங்க விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 6. மனிதவளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| (அ) சிரேஷ்ட நிறைவேற்று மட்டத்திலுள்ள 33 பதவிக்களுக்குரிய 2,454 வெற்றிடங்களும் 03 பதவிகளுக்குரிய 49 மிகைகளும், மூன்றாம் மட்டத்திலுள்ள 67 பதவிகளுக்குரிய 446 வெற்றிடங்களும் 02 மிகைகளும், நாடாளாவிய மட்டத்தின் 78 பதவிகளுக்குரிய 6010 வெற்றிடங்கள் மற்றும் 14 பதவிகளுக்குரிய 134 மிகைகள், ஆரம்ப மட்டத்தின் 45 பதவிகளுக்குரிய 8899 வெற்றிடங்கள் மற்றும் 06 பதவிகளுக்குரிய 3371 மிகைகளும் காணப்பட்டன. அந்த வெற்றிடங்கள் சுகாதாரத்துறைக்கே பிரத்தியேகமான பதவியான 2,268 வைத்திய உத்தியோகத்தர்களும் 44 பல் சிகிச்சை மருத்துவ உத்தியோகத்தர்களும் 2668 தாதி உத்தியோகத்தர்களும் 626 பராமரிப்பு உத்தியோகத்தர்களும் 129 மருந்துவ கலவையாளர்களும் 249 கதிர்வீச்சு நிபுணர்களும் 526 குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்களும் 150 நோயாளர் விபரங்களை பதிபவர்களும் வெற்றிடமாகக் காணப்பட்டது. மேலும், ஆரம்ப தரத்திலுள்ள நிபுணத்துவமற்ற பதவிகளுக்காக முறையான ஆட்சேர்ப்பு | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கி கொள்ளப்பட்டது. | ஒவ்வொரு வைத்திய சாலைகள் மற்றும் நிறுவனங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் களை மிகைக்காது உத்தியோகத்தர் களும் ஊழியர்களும் இணைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறைகளுக்குப் புறம்பாக சுகாதார வேலை உதவியாளர் பதவிக்கு அமைய அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 663 ஆகும். | | |
| (ஆ) | உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவைப் பிரிவில் சேவையில் ஈடுபட்டுள்ள 45 மின்சார மருத்துவ இயந்திரவியல் உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் 10 உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகளைப் பரீட்சித்த போது 09 உத்தியோகத்தர்கள் 2006 ஏப்ரல் 25 ஆந் திகதிய 06.⁚.2006 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு மற்றும் அதன் பின்னர் வழங்கப்பட்டிருந்த உரிய சுற்றறிக்கைகளின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்காத தயாரிக்கப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு முரணாக உரிய சம்பள படிநிலைகளுக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கும் சம்பள பரிமாற்றங்களைச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும் நீண்டகாலமாக அந்த உத்தியோகத்தர்களுக்கு தகைமையுள்ள சம்பளத்தை விட மிகையான சம்பளமும் அதன் அடிப்படையிலான மேலதிக நேர மற்றும் ஏனைய படிகளும் விடுமுறை தினச் சம்பளங்களும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டு வருகின்றது எனவும் அவதானிக்கப்பட்டது. மிகையாகச் செலுத்தப்பட்ட பணத்தை உரிய பணத்தை | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்ளப்பட்டது. | இது சம்பந்தமாக விசாரணை செய்து மிகையாகச் செலுத்தப்பட்ட சம்பளத்தை உரிய உத்தியோகத்தர் களிடமிருந்து அல்லது அதற்கு பொறுப்புக் கூறக் கூடிய தரப்பினர்களிட மிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றவரிடமிருந்து அல்லது அதற்கு பொறுப்புக்கூறக் கூடிய தரப்பினர்களிடமிருந்து அறவிட்டு அறிக்கையிடுமாறும் ஏனைய அனைத்து உத்தியோகத்தர் களின் ஆட்சேர்ப்பு, உள்ளீர்ப்புச் செய்தல் மற்றும் சம்பள பரிமாற்றங்கள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வினை மேற்கொண்டு அறிக்கையினைச் சமர்ப்பிக்குமாறும் 2020 யூலை 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வேண்டுதல் விடுக்கப்பட்டிருந்த போதிலும் 2021 ஏப்ரல் 22 ஆந் திகதி வரை அதற்கு பதில் வழங்கப்படவில்லை. | | |
| (இ) | உயிரியல் மருத்துவ பொறியியலாளர் சேவை பிரிவில் சேவைகளில் ஈடுபட்டுள்ள நிறைவேற்று உத்தியோகத்தர் தொகுதியின் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் பதவிக்காக அங்கீகரித்த புதிய சேவை பிரமாணக் குறிப்புக்கு ஒத்ததாக புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்று 2013 திசெம்பர் 20 ஆந் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்ளப்பட்டது. | இது சம்பந்தமாக விசாரணை செய்து முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (i) | 1998 திசெம்பர் 02 ஆந் திகதி உதவி உயிரியல் மருத்துவ பொறியியலாளர் (மின்சாரம்) பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த ஒரு உத்தியோகத்தர் சம்பந்தமாக உறுதிப்படுத்தப்பட்டிருந்த | | |

திருப்தியற்ற சேவைக் காலத்தினை திருப்தியான சேவைக் காலமாகக் கருதி 2013 திசெம்பர் 20 ஆந் திகதி II ஆம் தரத்திற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் I ஆம் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்காக அடைந்து கொள்ளப்பட்டிருக்க வேண்டிய உரிய துறையில் பட்டப் பின்படிப்பு தகைமையை பெற்றிருக்காத அந்த உத்தியோகத்தர்கள் சித்தியடைந்திருந்த விஞ்ஞானப்பட்டமானது அத்துறையின் பட்டப்பின் படிப்புக்குச் சமனானது என பிழையாகக் கருதி 2016 திசெம்பர் 11 ஆந் திகதியிலிருந்து I ஆந் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு சிபார்சு செய்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(ii) 1997 மே 16 ஆந் திகதி உதவி உயிரியல் மருத்துவ பொறியியலாளர் (மின்சாரம்) பதவிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த ஒரு உத்தியோகத்தர் 07 ஆண்டுகள் சம்பளத்தை பிற்போடுவதற்கு உட்பட்டிருந்தும் மற்றும் முன்னைய 12 ஆண்டுகளின் போது பூரணப்படுத்தாத செயலாற்றல் அறிக்கையை சமர்ப்பித்திருந்தும் 10 ஆண்டுகள் திருப்தியான சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ளார் எனவும் மற்றும் 1998 திசெம்பர் 07 ஆந் திகதியிலிருந்து உதவி உயிரியல் மருத்துவ பொறியியலாளர் (மின்சாரம்) பதவிக்கு சேர்த்துக்

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளப்பட்டிருந்த ஒரு உத்தியோகத்தரின் பூரணப்படுத்தப்படாத செயலாற்றல் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு சேவைக் காலம் திருப்தியானதாகக் கருதி 2013 திசெம்பர் 20 ஆந் திகதியிலிருந்து அந்த இரண்டு உத்தியோகத்தர்களும் II ஆம் தரத்திற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். | | |
| (iii) | ஆட்சேர்ப்பு நடைமுறையின் 10.1.1.1(iii) ஆம் பந்தியின் பிரகாரம் செயலாற்றல் தொடர்பான தகைமையை அடைந்திருக்காத இரண்டு உத்தியோகத்தர்களை III ஆம் தரத்திலிருந்து II ஆம் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு சிபார்சு செய்து அனுப்பி வைத்திருந்ததன் காரணமாக அந்த இரண்டு உத்தியோகத்தர்களும் II ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டிருந்தனர். | | |
| (ஈ) | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (உயிரியல் மருத்துவ பொறியியலாளர்) பதவி 2016 செப்தெம்பர் 19 ஆந் திகதியிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அப்பதவிக்கு ஒரு நிரந்தர உத்தியோகத்தரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது பதில் கடமையாற்றும் அடிப்படையின் கீழ் பதவிக்குரிய கடமையை நிறைவேற்றுவதற்காக ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்ளப்பட்டது. இப்பிரதிப் பணிப்பாளர் நாயகம் (உயிரியல் மருத்துவ பொறியியலாளர்) பதவியில் உள்ள வெற்றிடங்களுக்காக ஒரு உத்தியோகத்தரை நியமிக்கும் பொருத்த தன்மையை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையின் போது புள்ளி வழங்குவதற்குரிய ஆவணங்களை உள்ளடக்கிய கோவை இந்த ஆட்சேர்ப்பு | இப்பதவிக்காக ஒரு நிரந்தர உத்தியோகத்தரை விரைவாக நியமித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இப்பதவிக்காக ஒரு உத்தியோகத்தரைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சை 2020 யூலை 21 ஆந் திகதி நடாத்தப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய தகவல்களை உள்ளடக்கிய கோவை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததனால் அந்நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகளை வழங்கிய முறைமை தொடர்பாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | சம்பந்தமான மேலதிக செயற்பாடுகளுக்காக நியமன அதிகாரியான அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | தாபன விதிக் கோவையின் VI ஆம் அத்தியாயத்தின் 5.3 ஆம் பந்தியின் பிரகாரம் 2007 நவம்பர் 01 ஆந் திகதி வழங்கப்பட்ட ஒழுக்காற்று கட்டளைக்கு இணங்க 05 குற்றங்களைக் கொண்ட குற்றப் பத்திரத்தில் குறிப்பிட்ட 2 குற்றங்களுக்கு குற்றவாளியாக இருந்த ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டு சேவையில் ஈடுபட்டிருந்த அரசாங்க சுகாதார முகாமைத்துவ உதவி உத்தியோகத்தரின் தனிப்பட்ட கோவைக்கு அக்குற்றப் பத்திரத்தின் பிரதி உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. அந்த ஒழுக்காற்று கட்டளையின் பிரகாரம் அந்த உத்தியோகத்தரை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் 5 ஆண்டுகள் கடக்கும் வரை மாற்றம் செய்ய முடியாத வகையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்த போதிலும் மட்டக்களப்பு வைத்திய சாலைக்கு சேவைக்குச் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்ளப்பட்டது. | இது சம்பந்தமாக முற்றிலும் சுதந்திரமான ஒரு விசாரணையை மேற்கொண்டு பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர்கள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | சமூகமளித்திருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே ஒழுக்காற்று கட்டளை சம்பந்தமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மேன் முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டிருந்தும் ஒரு ஆண்டு கடப்பதற்கு முன்னர் இந்த உத்தியோகத்தருக்கு ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலைக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு காரணமாக நியாயமான விடயங்கள் காணப்பட்டது என்பது உறுதிப்படுத்தப்பட வில்லை. வைத்தியசாலை பதவியணியினரின் தனிப்பட்ட கோவைகளுக்கான பொறுப்பு அந்த உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததனால் பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையினால் 2009 நவம்பர் 09 ஆந் திகதி ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டிருந்த அந்த உத்தியோகத்தரின் தனிப்பட்ட கோவை காணாமல் போயிருந்த போதிலும் அது சம்பந்தமாக புலனாய்வு நடாத்தப்பட்டது என்பது அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. | | |
| (ஊ) | சுகாதார அமைச்சிற்கு இலங்கை திட்டம் வகுத்தல் சேவையின் விசேட தரத்திலுள்ள ஒரு உத்தியோகத்தர் 2017 நவம்பர் 07 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 ஏப்ரல் 22 | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது | இப்பதவிக்கு ஒரு உத்தியோகத்தரை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | ஆந் திகதி வரை அப்பதவிக்கு ஒரு உத்தியோகத்தர் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | தாபன விதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 10.1 ஆம் பந்திக்கு முரணாக சுகாதார அமைச்சினால் அரசாங்க சுகாதார முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள் 05 நபர்களின் 20 சம்பள ஏற்ற காலப்பகுதிக்கான செயலாற்றல் மதிப்பீட்டு அறிக்கையானது பூரணமற்றதாக இருந்தும் சம்பள ஏற்றங்கள் செலுத்தப்பட்டிருந்தன. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்ளப்பட்டது. உரிய உத்தியோகத்தரின் செயலாற்றல் அறிக்கையின் குறைபாடுகளைப் பூரணப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் அதனை விரைவாக முடிவுறுத்தி உரிய தனிப்பட்ட கோவைகளை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பூரணப்படுத்தப் படாத செயலாற்றல் அறிக்கையின் அடிப்படையில் வருடாந்த சம்பள ஏற்றங்கள் வழங்கப்படா திருத்தல் வேண்டும். |